விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
நாடுங்கள்
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-7619)

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 14 ஞாயிற்றுக்கிழமை (26.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 069

# பொய் வாக்குறுதி நாம் வழங்கவில்லை
## அமைச்சர் ராஜித நியாயப்படுத்தல்



(கொழும்பு)

நிறைவேற்றப்பட முடியாத எந்தவொரு பொய் வாக்குறுதியையும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி தாம் வழங்கவில்லை எனத் தெரிவித்த நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரட்ன தாம் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் எனவும் உறுதியளித்துள்ளார். (03-ம் பக்.)

### ஐ.நாவில் சமர்ப்பிக்க
## வடக்கு சபையால் மகஜர் தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு சமர்ப்பிப்பதற்கான மகஜர் ஒன்றினை வடமாகாண சபை தயாரித்து வருவதாக கூறியிருக்கும் வடமாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா எதிர்வரும் மார்ச் மாதம் 9-ம் திகதி நடைபெற

16 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மார்ச்சில் ரஷ்யா விஜயம்!

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரஷ்யாவிற்கு விஜயம் செய்ய உள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் அழைப்பினை ஏற்றுக்கொண்டு எதிர்வரும் மார்ச் மாத நடுப்பகுதியில் ரஷ்யாவிற்கான விஜயத்தை மேற்கொள்ள உள்ளார்.

இந்த விஜயத்தின் போது இலங்

16 ஆம் பக்கம் பார்க்க....

### மக்களின் நிலமீட்புப் போராட்டம்
## பொது அமைப்புகளை அழைக்கிறது தமிழ் மக்கள் பேரவை

(யாழ்ப்பாணம்)

தமதுசொந்த நிலங்களை விடுவிக்கக் கோரி கேப்பாப்பிலவு மற்றும் புதுக்குடியிருப்பு மக்கள் நடத்தி வரும் போரட்டத்திற்கு ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வழங்கக்கூடிய ஆதரவு பற்றி ஆராயும் பொருட்டு அனைத்து பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஒன்று நாளை மறுதினம் 28-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பலாலி வீதி கோண்டாவிலில் அமைந்துள்ள சேவாலங்கா நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது. இதற்கான அழைப்பை தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ளது.

கேப்பாப்பிலவு மற்றும் புதுக்குடி

15 ஆம் பக்கம் பார்க்க....

## பகுதியளவில் விடுவிப்பு அல்லது நட்டஈடு!
### கேப்பாப்பிலவு குறித்து கலந்துரையாடல்

(கொழும்பு)

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு, பிலவுக்குடியிருப்பு விமானப்படை அமைந்துள்ள நிலப்பரப்பில் பொது மக்களுக்குச் சொந்தமான காணியை பகுதியளவில் விடுவிப்பதற்கு இணக்கம் எட்டப்படும் எனவும் அவ்வாறில்லாவிடின், அந்தக் காணிகளுக்கான நட்டஈட்டினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது தெரிவிக்கப்பட்டது.

15 ஆம் பக்கம் பார்க்க....

### துணைவேந்தர் பதவி
## யாழ்.பல்கலையில் இன்று தேர்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருக்கும் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் அவர்களின் பதவிக்காலம் நிறை

16 ஆம் பக்கம் பார்க்க....

### பல்கலை மாணவர்களின் கல்விக்கு சுதந்திரமான சூழல் உருவாக்கப்படும்
## ஜனாதிபதி விசேட கவனம்

(பொலநறுவை)

பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையிலான சூழலை கட்டியெழுப்புவது தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி வருவதுடன், அதற்கு உபவேந்தர்கள், பீடாதிபதிகள், ஒழுக்காற்று சபை உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஏனைய நிறுவனங்களுடன் கைகோர்த்துக்கொள்ளும் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## தேயிலை தோட்ட தொழிலாளர்; சம்பளம் குறித்து முரண்பாடு

(ஹட்டன்)

நாட்டில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நடைமுறையிலுள்ள கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் கிடைக்க வேண்டிய சம்பளம் தொடர்பாக முரண்பாடு தொடர்கின்றது.

தோட்ட நிர்வாகங்களுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் இறுதியாக செய்து கொள்ளப்பட்ட இருதரப்பு கூட்டு உடன்படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாளொன்றுக்கு 140ரூபாய் உற்பத்தித்திறன் கொடுப்பனவை தோட்ட நிர்வாகங்கள் முன் வைத்துள்ள நிபந்தனை காரணமாக தங்களால் பெற முடியாதிருப்பதாக தொழிலாளர்களினால் கவலையும் விசனமும் தெரிவிக்கப்படுகின்றது.

அநேகமான தோட்ட நிர்வாகங்கள் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் இறுதியாக செய்து கொள்ளப்

15 ஆம் பக்கம் பார்க்க....

### இந்.மீனவர்களின் அத்துமீறலால்
## ரூ.40 இலட்சம் பெறுமதியான வலைகள் அறுத்து நாசம்



(கரணவாய்)

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளினால் தமது 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் சேதமாக்கப்பட்டும் இது தொடர்பில் கடற்படையினர் எவ்வித நடவடிக்கையினையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்து

15 ஆம் பக்கம் பார்க்க....

## கேப்பாப்பிலவு மக்கள் இடைவிடாது போராட்டம்
இன்றுடன் 27-வது நாள்

### களத்தில் நின்று வலு சேர்க்கவும் அழைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் இன்றுடன் 27-வது நாளை எட்டிய நிலையில் தொடர்ந்து முன்னெடு

15 ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வவுனியா இளைஞர் கொலை; சந்தேக நபர் நேற்றுக் கைது

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் கடந்த மாதம் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸா ரால் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

கடந்த மாதம் 11ஆம் திகதி பிற்பகல் வவு னியா, தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து இளைஞன் ஒருவனின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பில் விசார ணைகளை மேற்கொண்ட வவுனியா மன் னார் மாவட்ட உதவிப் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக் கோன் மற்றும் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் சிசிர குமார ஆகியோரின் வழி நடத்தலில் வவு னியா உதவிப் பொலிஸ் அத்தியட்ச கர் பியசிறி பெர் னாந்துவின் மேற் பார்வையில் பிராந் திய தீர்க்கப்படாத குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப் பதிகாரி ரட்ணதிலக தலைமையில் ஜேசு தாசன் (42521), பம் பரதெனிய (2139), விதுர (27747), கருணாதிலக (52391), ஜீவானந் தம் (45401), வீர சேன (48448), நிசாந்த (59517), பிரசன்ன ( 81200), ஒந்திக (88610), சானக் (12159) அதுல (80891) ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழு தீவிர விசாரணைகளை நடத்தியிருந்தது.

இதனடிப்படையில் இது கொலையென தெரிவித்த பொலிஸார் சந்தேகநபர் ஒருவரை தேடி வந்தனர்.


குறித்த கொலையுடன் தொடர்புபட்டதாக கொலை நடந்த தினத்தன்று அவ்வீட்டில் நின்ற ஒருவரையே இவ்வாறு பொலிஸார் தேடி வந்திருந்தனர்.

அந்தவகையில் மருதானை பகுதி யில் ஹோட்டல் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தவேளை யில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

இவர் தெபுவன, மதுகம பகுதியில் இடம்பெற்ற கொள் ளைச் சம்பவங்கள் சிலவற்றில் தொடர்பு பட்டிருந்த நிலையில் தலைமறைவாகி வவுனியாவில் வசி த்து வந்ததாகவும் வவுனியாவில் இடம் பெற்ற கொலையின் பின் மருதானைப்பகுதி யில் சென்று வசித்து வந்ததாகவும் விசார ணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைதாகியுள்ள குறித்த சந்தேக நபரை விசாரணை களின் பின்னர் வவு னியா நீதிமன்றில் முற்படுத்த பொலி ஸார் நடவடிக்கை எடுத்து வருகின் றனர். (செ)

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 25.02.2017
அன்று இறைபதம் அடைந்த

**இராசையா நவரத்தினம்**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய். திரு. நா. கணேசராஜா குடும்பத்தினர் (C-7669)


## பணியாளர்கள் தேவை

- கணனி (கொம்பியூட்டர்) இயக்குனர்
- கணக்கு/சிட்டை பதிவாளர்
- அலுவலக உதவியாளர்

ஆகிய பணிகளுக்கு 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் பணியாளர்கள் தேவை. யாழ்.நகரில் இருந்து 5Km தூரத்துக்கு உட்பட்ட O/L, A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கவும். (8047)

தொடர்புகளுக்கு:-
077 911 6108, 021 221 5777

ஊர்க்கோழிக் குஞ்சுகள்
## விற்பனைக்கு

3 நாள், 2 மாத, 3 மாத ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ஒருநாள் ஊர்க் கோழிக் குஞ்சுகளையும் பெற்றுக் கொள்ளலாம். (8049)

077 245 3673

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## அறை வாடகைக்கு உண்டு (Room)

T.P. No:- (C-7658)
077 663 4010

யாழ்.நகரிலுள்ள சைவ உணவகத்துக்கு பின்வரும்

## வேலையாட்கள் தேவை

- உணவு பரிமாறுபவர்
- பார்சல் கட்டுபவர்
- சமையல் உதவியாளர்
- சுத்திகரிப்பாளர்
- தேநீர் தயாரிப்பாளர்

ஆகிய வேலைகளுக்கு வேலையாட்கள் தேவை
(ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்)

076 622 8879 (C-7668)


## 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02.10.1978 | 24.02.2016 |

**அமரர் தம்பு சிவகுமார் (குமார்)**


திதி : துதியை (26.02.2017)

ஈராறு மாதங்கள் கடந்து சென்றாலும்,
நீங்கவில்லை உம் நினைவு எம்மைவிட்டு
பாசமிகு கணவனாய், பண்பான தந்தையாய்,
நாம் வாழ நல்வழிகாட்டிய உத்தமரே.
உமைப்பிரிந்து தவிக்கின்றோம் இந்நாளில்...

நிரந்தர முகவரி : இளங்கோபுரம், தோலாவில், விசுவமடு.
தற்காலிக முகவரி : நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கு, அல்வாய். (8044)

நீங்காத நினைவுடன்,
மனைவி : சி.விருதினி
பிள்ளைகள் : குமுதினி, தர்சன், லோஜிதன்

# மரண அறிவித்தல்



## இராசையா நவரத்தினம்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா நவரத்தினம் நேற்று (25.02.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகேந்திரம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமி, பாக்கியலட்சுமி மற்றும் கனகசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சின்னத்துரை, குணபாலசிங்கம் மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் மணிவண்ணன் (சிரேஷ்ட நிறைவேற்று உதவிப் பொறியியலாளர்-சிறிலங்கா ரெலிக்கொம், திருகோணமலை), ரவிவண்ணன் (அதிபர்-யா/சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்ப பாடசாலை), மணிமாலா (ஆசிரியர்-பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), கமலவண்ணன் (N.R.K வாணிபம்), அருள்வண்ணன் (கம்சா களஞ்சியம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலவதனி, இராசமலர், செல்வராசா (அதிபர்-பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம்), வாசுகி, கோமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் மேகலா (வைத்தியர்-பொது வைத்தியசாலை, திருகோணமலை), அருள்மாறன் (சிரேஷ்ட நிறைவேற்று உதவிக் கணக்காளர் - சிறிலங்கா ரெலிக்கொம்), மைதிலி (பிரதிக்கல்விப்பணிப்பாளர், SLEAS), சேகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்- மாவட்ட செயலகம், திருகோணமலை), சுகன்ஜா (மாணவி, பொறியியல் பீடம், தென்கிழக்குப் பல்கலைக் கழகம்), மதனராஜ் (மாணவன்-பொறியியல் பீடம், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), மோகனராஜ், லக்ஷலா, நிகேதன், நிகேதினி, துவாரகா, வசீகரன், சர்மினி, நிரஞ்சனா, சயானா, கம்சாளினி, தரணிகா, பிருந்தா ஆகியோரின் அன்புப் பேரனும் அஷ்ராவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (8050)

தகவல்: குடும்பத்தினர்
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.
071 536 0648, 077 327 2501
077 840 3173, 077 416 2619,
077 34[illegible]

# நிறைவேற்ற முடியாத எந்தவொரு பொய் வாக்குறுதியும் வழங்கவில்லை

## அமைச்சர் ராஜித நியாயப்படுத்தல்

(கொழும்பு)

நிறைவேற்றப்பட முடியாத எந்தவொரு பொய் வாக்குறுதியையும் 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி தாம் வழங்கவில்லை என்று நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.



அரசியல் பழிவாங்கலுக்கு இலக்காகியவர்களின அமைப்பு ஏற்பாடு செய்திருந்த வருடாந்தக் கூட்டம் கொழும்பு விஹாரமாகாதேவி வெளியரங்கு மைதானத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்ட தொழிற்சங்க அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் ராஜித சேனாரட்ன,

"தேர்தலில் வழங்கப்படுகின்ற அத்தனை வாக்குறுதிகளும் தேர்தலின் பின்னர் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் பொய்யானவைகளாகும். அப்படியான வாக்குறுதிகளை நாங்கள் ஜனவரி 8ஆம் திகதி வழங்கவில்லை. நாங்கள் அலசி ஆராய்ந்து. இந்த நாட்டிலுள்ள அரச சார்பற்ற அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள். வெகுசன அமைப்புக்கள், ஜனநாயகத்தை மதிக்கும் பிரிவினரும், சுதந்திரத்தைக் கோரிய ஊடகவியலாளர்கள் ஆகியோருடன் பேச்சு நடத்தியே எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்தோம். எங்களுக்கு உறக்கம் இருக்கவில்லை. தேர்தலில் தோல்வியடைந்திருந்தால் எமது சடலத்தை புதைத்திருப்பார்கள் அல்லது சமாதி கட்டப்பட்டிருக்கும். இதனால் எமக்கு உறக்கமும், பசியும் இருக்கவில்லை. எமக்கு இருந்த ஒரே அடைக்கலம் மக்களாகும். எமக்கு பணமும் இருக்கவில்லை. பணபலம் உடைய முதலாளிகள் தமது பணப் பொதிகளை எடுத்துக் கொண்டு அலரிமாளிகையிலுள்ள மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்குச் சென்றனர். பத்திரிகையில் முதலாவது தேர்தல் விளம்பரத்தை செய்வதற்குக்கூட எமக்கு பணம் இருக்கவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரான டட்லி சிறிசேனவிடம் பேசி 60 மில்லியன் ரூபாவை எனது மகன் பெற்றுக் கொண்டுவந்த பின்னரே முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்தினோம். நாங்கள் ஆட்சியைக் கைப்பற்றுவோம். அப்போது பணம் கிடைக்கும். அவற்றைக்கொண்டு உங்களது கணக்குகளைத் தீர்ப்போம் என்று பொய்யைக் கூறியே வர்த்தகர்களிடம் உதவிகோரினோம். அவ்வாறே எமது தேர்தல் பிரசாரத்தை நடத்தினோம். அது ஜனாதிபதிக்கும் தெரியும். மகிந்த ராஜபக்ஷவுக்கு 50 கோடி ரூபாவைக் கொடுத்த வர்த்தகர்கள் எமக்கு வெறும் 5 இலட்சம் ரூபாவையே கொடுத்தனர். சிலவேளை மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்றுவிட்டால் என்ற எண்ணத்திலேயே அவர்கள் வழங்க முன்வந்தனர். எனினும் யாரும் எதிர்பாராத கீழிருந்தான சக்தி ஒன்று எமக்கிருந்தது. இந்த நாட்டு மக்களே அந்த சக்தியாகும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஐ.நா. நோக்கிய பயணம் ஆரம்பம்




(ஜெனீவா)

ஐக்கிய நாடுகள் சபையை நோக்கிய மனிதநேய ஈருருளிப் பயணம் நேற்று முன்தினம் மதியம் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்றலில் இருந்து ஆரம்பித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் நோக்கிய பேரணியை வலுப்படுத்தவும். ஐரோப்பிய நாடுகளிடம் நீதிகோரியும் ஐரோப்பிய ஒன்றிய முன்றலில் இருந்து ஐக்கிய நாடுகள் நோக்கிய மனிதநேய ஈருருளிப் பயணம் ஆரம்பித்தது.

பெல்ஜியம் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒழுங்கமைப்பில் பெல்ஜியம் வாழ் தமிழ் மக்களின் பங்கேற்புடன் ஐந்து பேர் கொண்ட குழு ஐ.நா. நோக்கிய நீதிக்கான ஈருருளிப் பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

1.பல தசாப்தங்களாக இலங்கைத்தீவில் சிங்கள அரசினால் தொடர்ந்து நடத்தப்படும் தமிழினப்படுகொலையை ஆராய்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு நீதி கிடைக்கும் பொருட்டு அனைத்துலக சமூகம் அனைத்துலக நீதிமன்றில் விசாரணையை நடத்தி தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

2.ஈழத்தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள வர்களைச் அரசு உடனடியாக விடுதலை செய்வதோடு தமிழர் தாயகமாகிய வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ்மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய விதத்தில் அங்கு ஆக்கிரமித்துள்ள சிங்களப் படைகள் முற்றுமுழுதாக வெளியேற்றப்பட்டு தமிழர் நிலப்பறிப்பு உடன் நிறுத்தப்பட்டு இயல்பு வாழ்க்கை உருவாக்கப்பட வேண்டும்.

3.இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை பாரம்பரிய நிலமாகக் கொண்ட தமிழீழ மக்களின் தாயகம் தேசியம் தன்னாட்சி என்பவற்றை ஐக்கிய நாடுகள் அவை (அனைத்துலகம்) அங்கீகரிக்கவேண்டும் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பயணம் ஆரம்பமானது. (இ)

## மத்திய வங்கி, நிதியமைச்சிற்கு எதிராக வழக்குத் தொடர மகிந்த தீர்மானம்

இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சிற்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். வழக்கு தாக்கல் செய்வதற்கான சட்டத்தரணிகளின் ஆலோசனைகளைத் தாம் பெற்று வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

களுத்துறை ஹொரன பிரதேசத்திலுள்ள ஸ்ரீ ஜயவர்தனாராமய ரஜமகா விகாரைக்கு நேற்று முன்தினம் இரவு விஜயம் மேற்கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு இடம்பெற்ற மதவழிபாட்டிலும் கலந்துகொண்டார்.

இதேவேளை பிணைமுறி தொடர்பான மோசடிகளின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கையெழுத்துடன் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கப்பட்டிருந்தது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மத்திய வங்கி பிணைமுறி விநியோகத்தின் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷவின் கையெழுத்து தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தாம் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை என அரச திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இது குறித்து நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது கருத்துக்களை வெளியிட்டார்.

"இது மிகப்பெரிய மோசடியாகும். எனவே நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது பற்றி எனது சட்டத்தரணியிடம் சட்ட ஆலோசனை பெற்று வருகின்றேன். ஜனவரி 8ஆம் திகதியின் பின்னர் நான் நிதியமைச்சர் அல்ல. நிதியமைச்சின் பதவியை வகித்தவர்கள் எனது பெயரைப் பயன்படுத்தி பாரிய மோசடியை செய்திருக்கின்றனர். அதற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்வதே எனது எதிர்பார்ப்பாகும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## மரண அச்சுறுத்தல் தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பம்

தும்பர சிறைச்சாலை அதிகாரியின் வங்கிக் கணக்குச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் உறுப்பினரை அதிலிருந்து விலக்கிக்கொள்ளுமாறு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை தலைமையகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தும்பர சிறைச்சாலை அதிகாரியின் வங்கிக் கணக்கில் 20 இலட்சம் ரூபாய் வைப்பிடப்பட்டமை தொடர்பில் விசாரணை செய்யவே இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த உறுப்பினருக்கு பதிலாக மற்றுமொரு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் துசார உபுல்தெனிய தெரிவித்துள்ளார். (இ)

# அவுஸ்திரேலியாவின் சுழலில் சிக்கி

# சொந்த நாட்டில் மண்ணை கவ்விய இந்தியா



புனேயில் நடைபெற்ற முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியாவின் ஓகீபே மற்றும் நாதன் லயனின் சுழற்பந்தில் சிக்கிய இந்தியா 333 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் புனேயில் நடை பெற்றது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 260 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா 105 ஓட்டங்களில் சுருண்டது. ஓகீபே 6 விக்கெட்டுக்கள் அள்ளினார்.

பின்னர் 155 ஓட்டங்கள் முன்னிலையுடன் அவுஸ்திரேலியா 2-வது இன்னிங்சை தொடங்கியது. அந்த அணியின் கப்டன் ஸ்மித் (109) சதத்தால் 285 ஓட்டங்கள் குவித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 440 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது அவுஸ்திரேலியா. இதனால் இந்தியாவின் வெற்றிக்கு 441 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் 441 ஓட்டங்கள் என்பது சுலபமானது அல்ல. இருந்தாலும் மோதிப் பார்க்கலாம் என்ற அடிப்படையில் இந்தியாவின் முரளி விஜய், லோகேஷ் ராகுல் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். இருவரும் சுழற்பந்து வீச்சுக்கு தடுமாறினார்கள். விஜய் 2 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஓகீபே பந்தில் ஆட்டம் இழந்தார். லோகேஷ் ராகுல்10 ஓட்டங்கள் எடுத்த நிலையில் லயன் பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆகி வெளியேறினார்.

அடுத்து வந்த புஜாரா ஓரளவிற்கு தாக்குப்பிடித்து விளையாடினார். ஆனால் விராட் கோலி 13 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஓகீபே பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த ரகானே (18), அஸ்வின் (8), சகா ஆகியோரை ஓகீபே வெளியேற்றினார். 31 ஓட்டங்கள் எடுத்த நிலையில் புஜாராவை 6-வது



விக்கெட்டாக ஓகீபே வெளியேற்றினர். அடுத்து வந்த இசாந்த் சர்மா, ஜெயந்த் யாதவ் விக்கெட்டுகளை லயன் வீழ்த்தி இந்தியா 33.35 ஓவர்களை மட்டுமே தாக்குப்பிடித்து 107 ஓட்டங்களில் சுருண்டது.

இதனால் அவுஸ்திரேலியா 333 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ் திரேலியா 1-0 என முன்னிலையில் உள்ளது.

12 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அவுஸ்திரேலியாவின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த ஓகீபே போட்டியின் ஆட்டநாயகராக தெரிவானார்.

2-வது டெஸ்ட் போட்டி எதிர் வரும் 4ஆம் திகதி பெங்களூருவில் நடைபெறவுள்ளது. (க)

## தென்னாபிரிக்கா வெற்றி




நியூசிலாந்துக்கு எதிரான 2-வது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா 159 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நியூசிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 3-வது ஒருநாள் போட்டி வெலிங்டனில் நேற்று நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா அணி முதலில் துடுப்பாட்டம் செய்து 50 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 271 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 272 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணி களம் இறங்கியது. தென்னாபிரிக்காவின் வேகப் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அந்த அணி 112ஓட்டங்களில் சுருண்டது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் தென்னாபிரிக்கா 2-1 என முன்னிலை பெற்றுள்ளது. 4-வது போட்டி ஹாமில்டனில் மார்ச் 1-ந் திகதி நடைபெறவுள்ளது. (க)

## ஜனாதிபதி - த.தே.கூ இன்று சந்திக்க வாய்ப்பு

விமானப் படையினர் வசம் உள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி முல்லைத்தீவு கேப்பாப்பிலவு. பிலக்குடியிருப்பு மக்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில். இதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இன்றைய தினம்.

பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

காணி விவகாரம் மற்றும் மக்களின் தொடர் போராட்டங்கள் குறித்து ஜனாதிபதியுடனான சந்திப்பு நேற்றைய தினம் நடக்கும் என எதிர் பார்க்கப்பட்ட நிலையில் ஜனாதிபதி கொழும்பை விட்டு பிறிதொருபகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்க சென்றிருந்தமையால் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் சிறீதரன் எம்.பி தெரிவித்தார். (செ-11)

## பொலிஸாரின் தடுப்பில் 25 துவிச்சக்கர வண்டிகள்

(மல்லாவி)

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் நேற்று சனிக்கிழமை இரவு 7.00 மணியளவில் மல்லாவி பொலிஸார் விசேட வீதிப்பரிசோதனையில் ஈடுபட்ட போது துவிச்சக்கர வண்டிகளில் முகப்பு வெளிச்சமின்றி வீதியில் பயணித்தவர்களை தடுத்து நிறுத்தி விபத்து ஏற்படுவது தொடர்பில் விளக்கமளித்ததுடன் அவர்களது துவிச்சக்கர வண்டிகளை மல்லாவி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

இவ்வாறு 25 துவிச்சக்கர வண்டிகள் முகப்பு வெளிச்சம் இன்றி பயணித்த நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை துவிச்சக்கர வண்டிகளுக்கான முகப்பு வெளிச்ச கருவிகளை வேண்டி வந்து பொருத்திய பின்னர் துவிச்சக்கர வண்டிகளை எடுத்துச் செல்லுமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-15)

## கிடங்கினுள் வெடிபொருட்கள்




வதிரி புலவனோடைப் பகுதியில் தென்னம்பிள்ளைக்கு கிடங்கு வெட்டிய போது வெடி பொருட்கள் சில தென்பட்டதையடுத்து அப்பணி நிறுத்தப்பட்டுள்ளதாக நெல்லியடி உப பொலிஸ் பரிசோதகர் விமல் வீரா தெரிவித்தார்.

நேற்று மாலை அப்பகுதியில் உள்ள காணி ஒன்றில் தென்னம் பிள்ளைக்கு கிடங்கு வெட்டியபோது பிளாஸ்டிக் பை ஒன்றினுள் இருந்து வயர்கள் தென்பட்டதையடுத்து நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து நீதிமன்றின் உத்தரவு பெற்று அப்பகுதி இன்று விஷேட அதிரடிப்படையினரினால் சோதனை செய்யப்படவுள்ளது. (செ-60)

# தமிழக தமிழர்களின் கோழைத்தனத்தினால் ஈழத்தில் இனப்படுகொலை நடந்தேறியது

## இயக்குநர் புகழேந்தி தங்கராஜ் யாழில் கருத்து



(யாழ்ப்பாணம்)

தமிழக தமிழர்களின் கோழைத்தனமே ஈழத்தில் இனப்படுகொலை நடப்பதற்கு காரணம் என கூறியிருக்கும் தமிழக திரைப்பட இயக்குநர் புகழேந்தி தங்கராஜா, உலகத்தில் உன்னதமான போராட்டங்களில் ஈழ விடுதலை போராட்டமும் கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் போராட்டமும் அடங்குவதாகவும் கூறியுள்ளார்.

ஈழ விடுதலை போராட்டத்தையும், கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் போராட்டத்தையும் மையப்படுத்தி இயக்குநர் புகழேந்தி தங்கராஜா தயாரித்திருக்கும் "கடல் குதிரைகள்" திரைப்படத்தின் இசை வெளியீட்டு நிகழ்வு இன்று தெல்லிப்பழை பகுதியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வுக்காக யாழ்ப்பாணம் வந்துள்ள புகழேந்தி தங்கராஜா நேற்று காலை யாழ். ஊடக அமையத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உலகத்தில் உன்னதமான போராட்டங்களில் ஈழ விடுதலை போராட்டமும், கூடங்குளம் அணு உலைக்கு எதிராக இடிந்தகரையில் நடைபெற்ற போராட்டமும் அமைந்துள்ளது.

மேலும் இந்த இரு போராட்டங்களும் முடிவுக்கு வந்துள்ளதாக கூறப்படும் கருத்துக்கள் தவறானவை. எந்த போராட்டமும் முடிவதில்லை.

என்னுடைய "கடல் குதிரைகள்" திரைப்படம் ஈழ விடுதலை போராட்டத்தையும், கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டத்தையும் ஒரு மையப் புள்ளியில் இணைக்கிறது.

ஈழத்தின் புனர்வாழ்வு முகாமில் இருந்து தப்பி தமிழகம் வந்த கிருஷாந்தி குமாரசாமி என்ற பெண் தமிகத்தில் நீச்சல் போட்டியில் பங்கெடுத்து இந்திய தேசிய மட்டத்தில் சாதிக்கிறார் என்பதை காட்டுவதாகவே இந்தப் படம் அமைந்துள்ளது.

இந்தபடத்தில் கிருஷாந்தியாக நடித்திருக்கும் பெண் ஈழத்தை சேர்ந்தவர், மேலும் பாடல்களை புரட்சி கவிஞர் காசி ஆனந்தன் எழுதியுள்ளதுடன் பாடல்களை ஈழத்து சிறுமி ஜெசிக்கா பாடியுள்ளார்.

தமிழக தமிழர்களின் கோழைத்தனமே ஈழத்தில் இனப்படு கொலை நடக்க காரணமானது.

கேப்பாப்பிலவு மக்களை கூனிக் குறுகியே சென்று பார்வையிட்டேன். ஆனால் அநீதிக்குஆட்பட்ட ஒரு இனம் அல்லது சமூகம் நீண்ட காலம் மௌனமாக இருக்க முடியாது. இப்போது தமிழ் மக்கள் மௌனத்தை கலைத்துள்ளார்கள். 18 வருடங்களாக பத்திரிகையாளனாக இருந்தே ஈழ விடுதலை தொடர்பாக அறிந்து கொண்டேன். இந்நிலையில் உன் சகோதரர்கள் உயிரிழந்தமைக்கு நீ என்ன செய்தாய் என யாரும் கேட்கக் கூடாது என்பதற்காகவே திரைப்படங்களை தயாரிக்கிறேன் என்றார் புகழேந்தி தங்கராஜா. (செ-4)

## நிலமீட்புக்காய் மல்லாகத்தில் இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்களின் மண் மீட்பு போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஆதரவு தெரிவித்து யாழ்.மல்லாகம் வாழ் மக்களினால் இன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் முன்றலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

கேப்பாப்புலவு பிலக்குடியிருப்பு மக்களின் நில விடுவிப்பு போராட்டம் நேற்று 26ஆவது நாளை எட்டிய நிலையில் தொடர்ந்துவருகின்றது.

இம் மக்களின் நியாயமான இப் போராட்டம் வெற்றிபெற வேண்டுமென பலரும் தமது ஆதரவினை வழங்கிகொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் மல்லாகம் மத்திய முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இப் போராட்டத்தில் மல்லாகம் வாழ் மக்கள் கலந்து கொண்டு மண் மீட்பு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.(செ-9)

# இணையத்தளக் கடிதம் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரணை

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை இவ்வருடம் முதல் ஒக்டோபர் மாதத்திலிருந்து நடத்தப்படும் என தெரிவித்து இணையத்தளத்தின் மூலம் பிரசாரம் செய்த கடிதம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பை, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பேராசிரியர் அமல் கருணாரத்ன என்பவருடைய பெயரில், அரச முத்திரையுடன் இக்கடிதம் இணையத்தளத்தில் வெளியிடப் பட்டுள்ளது.

இக்கடிதத்தில், கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் தலைமையில் இடம் பெற்ற குழுக் கூட்டமொன்றில், இந்த தீர்மானம் பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தின் படி க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் அல்லாது, ஒக்டோபர் மாதம் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான வதந்திகளை வெளியிடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கே கல்வி அமைச்சு இத்தீர மானித்தை முன்னெடுத்துள்ளதாக தெரிய வருகிறது. (இ-3)


## வீடு காணி விற்பனைக்கு

கோப்பாய் மத்தி அண்ணமார் கோவிலடிப் பகுதியில் சுற்றுமதிலுடன் வீடு (இரண்டு பரப்புக்காணி) மற்றும் 5,8,7 பரப்புக் காணிகள். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
த.தருமரத்தினம், அண்ணமார் கோவிலடி, கோப்பாய் மத்தி.
தொ.பே.இல. 077 821 5069

(சு-7607)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08
04
1939



மறைவு
09
03
2016

### அமரர் திருமதி கமலாதேவி தர்மலிங்கம்

{(B.Sc. Hons) Dip-in-Edu ஓய்வு நிலை ஆசிரியை
கொழும்பு- விவேகானந்தா ம.வித்தியாலயம்
வேலணை- சரஸ்வதி வித்தியாலயம்
பழைய மாணவி- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி }

ஆண்டொன்று கடந்தம்மா நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து
அனுதினமும் உங்கள் நினைவால் வருந்துகின்றோம்
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டகலா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(இ)

திரு-பதி,
பிரதான வீதி, வேலணை- 2

தகவல்: கணவர்-S. தர்மலிங்கம்
மகள்-Dr.சதாபானு ஜனகன்
குடும்பத்தினர்.





HND — BUSINESS MANAGEMENT MARKETING | HRM — Leading to BA (Hons) from the UK Universities

HND — QUANTITY SURVEYING — Leading to BSc (Hons) from the UK Universities

HND — BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY — Leading to BSc (Hons) from the UK Universities

HND — CIVIL ENGINEERING — Leading to BEng / BSc (Hons) from the UK Universities

HND — TELECOM ENGINEERING — Leading to BEng (Hons) from the UK Universities

HND — COMPUTING — Leading to BSc (Hons) from the UK Universities

HND — ELECTRICAL & ELECTRONIC ENGINEERING — Leading to BEng / BSc (Hons) from the UK Universities

LLB — LAW — Leading to LLB (Hons) from the UK Universities

UGC Approved TVEC Approved

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

City Campus 256, Galle Road, Colombo 6. T: 011 236 4459
Mount Campus 54, Galle Road, Mt. Lavinia. T: 011 272 8082
Kandy Campus 344, Peradeniya Road, Kandy. T: 081 222 4731
Jaffna Campus 16, Point Pedro Road, Jaffna.
JAFFNA 077 710 2131 / 077 960 3753
COLOMBO 077 283 4595
Batti Campus 294, 1/4, Trinco Road, Batticaloa. T: 065 222 8451
Wayamba Campus 103, Dambulla Road, Kurunegala. T: 037 223 3339
Corporate Office 32, Dharmarama Road, Colombo 6. T: 0112597217
Kalmunai Campus 392/1, Main Street, Kalmunai. T: 067 222 6899

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka by Pearson UK @ BTEC Higher Education Forum 2016
Educational Institute with Best Academic & Industry Interface by South Asian Partnership Summit & Business Awards 2016
Academic Impact Winner by QSI - UK 2016
Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD 2014
BTEC Gold Partner by Pearson - UK 2013
Performance Excellence Award by Pearson - UK 2011
Fastest Growing BTEC Centre by Pearson - UK 2010

HOTLINE : 021 221 9910
Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

(சு-7660)


## இராசி பலன்

26.02.2017
(மாசி 14, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு
அமாவாசை முன்னிரவு 9.15 மணிவரை
அவிட்டம் முற்பகல் 7.50 மணிவரை
சுபநேரம் 9.29 -10.59 மணிவரை
இராகுகாலம் 4.59-6.29 மணிவரை
அமாவாசை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | செவ் | | |
| சூரி, புத சந், கேது | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் ஆயிலியம் | | ராகு |
| | சனி | குரு | |

**மேடம்:** ஆனந்தமான நாள், பயணங்கள் செல்லும் எண்ணம் மேலோங்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**இடபம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், செல்வாக்கு அதிகரிக்கும் நாள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** பாதியில் நின்ற பணிகளை விரைந்து செய்து முடிப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பகை விலகி பாசம் கூடும் நாள்.

**கடகம்:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**சிம்மம்:** மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், இல்லத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், கடன் பாக்கி வசூலாகும்.

**துலாம்:** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், ரோக பயமுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், வாகன சுகமுண்டு, வழிபாட்டால் பெருமைகாண வேண்டிய நாள்.

**தனுசு:** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகமடைவீர்கள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும்.

**மகரம்:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், எதிர்கால வெற்றிக்கு அடித் தளம் இடுவீர்கள், பணவரவு திருப்திதரும் வகையில் அமையும்.

**கும்பம்:** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், மறக்க முடியாத சம்பவமொன்று இடம்பெறலாம், விரயங்கள் கூடும்.

**மீனம்:** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், ஆனந்த வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், மூத்த சகோதரர் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

# நிலையத் திறப்பு விழா

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்ட கழக திறப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்படும் இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக வடமாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சர் ரி. குருகுலராஜா கலந்து கொள்வார். நாளைய தினம் பிற்பகல் 3 மணியிலிருந்து வீதி ஓட்டம் உட்பட விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறும். திறப்பு விழாவைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் மற்றும் கழகத்தின் முன்னாள் நிர்வாக சபை உத்தியோகத்தர்கள், அணித்தலைவர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறும். (இ-12)

# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அவதிப்படும் தையிட்டி மக்கள்

(தெல்லிப்பழை)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தையிட்டி கிழக்கு மற்றும் தையிட்டி வடக்கு கிராம மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

04.11.2016 அன்று மீள் குடியேற்றப்பட்ட மேற்படி கிராமத்தில் இதுவரை இரண்டு கிணறுகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. 3 குளாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதேவேளை 10 குடும்பங்களுக்கே மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு பிரதேச சபையால் நீர்த்தாங்கிகள் வைத்து குடிநீர் வழங்கப்படுகின்றது. எனினும் தமக்கு மீள்குடியேறக் கூடிய வகையில் தேவைகள் பூர்த்தியாக்கப்படவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு சாந்தை சந்தியில் இருந்து வளலாய்-கீரிமலை வீதிவரையான 3.5 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதி மிகவும் குன்றும் குழியுமாகவும் மழை காலங்களில் நீர்தோங்கி நிற்கும் நிலையும் காணப்படுகின்றது. இக்கிராமங்களில் 400 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேற்றத்திற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.



இக்கிராமங்கள் விவசாயத்தையும் கடற்றொழிலையும் முழுமையாகக் கொண்ட கிராமங்களாகும். இக்கிராமங்களில் விவசாயக்கிணறுகள் திருத்தப்படாமையால் விவசாயத்தை செய்ய முடியாத நிலையும் காணப்படுகின்றது. அத்தோடு விவசாய உபகரணங்கள் வழங்கப்படவில்லை எனவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட குடும்பங்கள் தையிட்டி வடக்கில் காணப்படும் நான்கு துறைகளை நம்பியே கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர். இதில் 2 (இரண்டு) துறைகளே விடுவிக்கப்பட்டுள்ளன. இவை தையிட்டு வடக்கு ஊறணி துறைகளாகும்.

இவற்றில் இரண்டு துறைகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இதுவரை படகுகளை வைத்து தொழில் செய்யும் அளவிற்கு வான்கள் சரியான முறையில் தோண்டப்படாததால் கடற்றொழிலும் செய்ய முடியாத நிலையும் காணப்படுகின்றது.

அத்தோடு இவ்விரண்டு கிராமங்களைச் சேர்ந்த கிராம சேவையாளர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மரநிழல்களிலே இருந்தே தமது சேவைகளை ஆற்ற வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

எனவே தமது கிராமங்களில் சுகாதாரம், குடிநீர், வாழ்வாதாரம் என்பவற்றில் கூடிய அக்கறை செலுத்துமாறு அரச உயர் அதிகாரிகளிடம் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-23)

# கெருடாவில் கிராமத்திற்கு மூன்று நீர்த்தாங்கிகள்



சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கெருடாவில் கிராமத்திற்கு 3 நீர்த்தாங்கிகள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. கிராமத்திற்கு ஒரு மில்லியன் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து நகராட்சி மன்றத்தினால் நீர்த்தாங்கிகள் வழங்கப்பட்டன. சாவகச்சேரி நகராட்சி மன்ற செயலாளர் கா.சண்முகதாசன், நகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர் அ.பாலமயூரன் மற்றும் அப்பகுதி கிராம சேவையாளர் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர். (இ-89)

# செயலமர்வு

அரசியலில் ஆர்வம் கொண்டுள்ள இலங்கைப் பிரஜைகள் சமூகத்தினுடைய தலைமைத்துவ சாத்திய வளத்தை விருத்தி செய்யும் நோக்கத்துடன், மாவட்டமட்ட பிரஜைகளை ஒழுங்கமைக்கும் செயலமர்வு நாளை மறுதினம் 28 ஆம் திகதி யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில் நடைபெறும். (இ

# சணச வார நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்க சமாசமும், இலங்கை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்க சம்மேளனமும் இணைந்து நடத்தும் சணச வார நிகழ்வுகளின் இறுதி நாளான நாளை மறுதினம் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் 2016 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய அங்கத்தவர்களின் பிள்ளைகளை கௌரவித்தலும் பெண் தலைமைத்துவ குடும்ப பெண்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் வைபவமும் செ.இலகுநாதன் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை சணச சம்மேளன தலைவர் பி.ஏ. கிரிவந்தெனியா கலந்து கொள்வார். (இ-12)

# ஞானச்சுடர் வெளியீடு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெளியிடப்படும் மாசி மாத 230ஆவது ஞானச்சுடர் மலர் வெளியிடப்பட்டுள்ளது. (இ-12)



# ஜெனிவாத் தீர்மானம்; கருத்துக்களம் இன்று

(யாழ்ப்பாணம்)

ஜெனிவாத் தீர்மானம்-தமிழருக்கு எதிரான போர்க்குற்றங்கள் என்ற தொனிப் பொருளில் சிரேஷ்ட பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் கருத்துக்களம் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் பி.ப. 4 மணி தொடக்கம் நடைபெறும்.

கருத்துரைகளை பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சிவில் சமூக பிரதிநிதிகளும் வழங்கவுள்ளனர். இது தொடர்பன மேலதி விபரங்களுக்கு தமிழர் அரசியல் ஆய்வுவட்டம், 077 135 0422 மற்றும் 077 744 7288 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-9)

# சகவாழ்வு ஏற்பட மன்னிப்பு அவசியம்

## அங்கஜன் எம்.பி. அறிவுரை

நாட்டில் சகவாழ்வு ஏற்பட வேண்டுமாயின் மன்னிப்பு அவசியம் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான செயலகத்தினால் நடத்தப்பட்ட நல்லிணக்கச் செயலமர்வின் இறுதி நாள் நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி வட்டுக்கோட்டையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நாட்டில் தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் தற்போதும் இனவாத அரசியல் தலைமைத்துவம் காணப்படுகிறது. எனவே எமது எதிர்கால சந்ததியினராகிய மாணவர்கள் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு உழைக்க வேண்டும். அதில் மன்னிப்பு முக்கியமானது. அடுத்த கட்ட நகர்விற்கு மன்னிப்பு ஒன்றே மருந்தாகும் என மேலும் தெரிவித்தார்.

மேற்குறித்த நல்லிணக்க செயலமர்விற்கு வடக்கிலிருந்து 100 மாணவர்களும் தெற்கிலிருந்து 100 மாணவர்களும் வருகைதந்து கலந்து கொண்டனர். இந்நிகழ்வானது வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் கடந்த 19 ஆம் திகதியிலிருந்து 5 நாட்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# புலமைசார் கற்பித்தல் வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களுக்கான புலமைசார் கற்றல், கற்பித்தல் பயிற்சி நெறிகளும் பிரவேச, பால, பண்டிதர் வகுப்புக்களும் எதிர்வரும் மார்ச் மாதம் 16 ஆம் திகதி நல்லூர் புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

இதுவரை காலமும் இணுவில் இளம் தொண்டர் சபை, புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் நடைபெற்றுவந்த மேற்படி வகுப்புக்கள் இனி நல்லூர் வடக்கு, புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் இடம்பெறும்.

அத்துடன் இவ்வகுப்புகள் எதிர்வரும் மார்ச் மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன எனவும் ஆரம்ப நிகழ்வில் உயர் கல்வி அதிகாரிகளும் கல்விமான்களும் கலந்துகொண்டு கருத்துரையாற்றுவர் என ஆரிய பாஷாபிவிருத்திச் சங்கப் பொதுச் செயலாளர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் அறிவித்துள்ளார். (இ-9)

# பிரபாகரனின் துப்பாக்கி ரவையில் இருக்கும் பலம் என்னிடம் உண்டு - நானே தலைவன்

## அமைச்சர் மனோகணேசன் கூறுகிறார்

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பலம் அவருடைய துப்பாக்கி ரவைகள். ஆனால் என்னுடைய பலம் வாக்குச்சீட்டுக்கள் என தேசிய சகவாழ்வு மற்றும் கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கொட்டாஞ்சேனை இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதை தெரிவித்தார்.



அக்காலகட்டத்தில் பிரபாகரனின் பலமாக அவருடைய துப்பாக்கி ரவைகள் காணப்பட்டன. ஆனால் அந்த பலம் எனக்கும் இருக்கின்றது. என்னிடம் வாக்குச்சீட்டுக்கள் இருக்கின்றன. அவற்றை முறையாக பயன்படுத்தினால் உரிய பலன் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், நாம் ஐக்கிய தேசியக் கட்சியில் தற்போது இணைந்திருப்பதால் அக்கட்சியைச் சார்ந்தவன் என்று கூற முடியாது.

நாம் தனித்துவமாகவே இருக்கின்றோம். எனக்கு எதிர்க் கட்சித்தலைவர் இரா.சம்பந்தனோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ தலைவர் இல்லை. எனக்கு நானே தலைவன் என அமைச்சர் மனோ மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# இலங்கை மீது ஜெனிவாவில் கடும் விசனம்

பெண்களுக்கு எதிரான பாகுபாடு ஒழிப்பு ஐ.நா. குழுவின் முன்னால், இலங்கை அரசாங்கம் கடுமையான விமர்சனங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இறுதிக்கட்ட போரின் போது பெண்களுக்கு எதிராக பாலியல் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டது குறித்தும் வடக்கில் இராணுவத்தினர் நீக்கப்படவில்லை என்பன தொடர்பாகவும் , ஐ.நா. குழு பிரதிநிதிகள் இலங்கை குழுவினரிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

போர்க்குற்றச்சாட்டு விசாரணை இடம்பெற வேண்டிய கலப்பு நீதிமன்றம் தொடர்பிலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜெனிவாவில் இடம்பெற்ற குழுக் கூட்டத்தில் அரசாங்கத்தின் நல்லிணக்க செயல்திறன் படை அதிகாரி ஒருவர் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)


40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற

"றோயல் குளுக்கோஸ்"

PACKED BY: ROYAL INDUSTRIES, Colombo-13 TP:- 077 727 7670

தற்போது புதிய வடிவில்!!



இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

"றோயல் குளுக்கோஸ்"

தொடர்புகளுக்கு

சிவா நறுமணப் பூங்கா, இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். TP:-021 222 2567

(சி-7659)



**CANE HOSPICE**

**No.05,Sabapathipillai Road, Uduvil, Chunnakam**

**VACANCY FOR POST OF SENIOR NURSES, DRIVER & HEALTH CARE ASSISTANTS**

CANE Hospice has started home based palliative care programme and terminal care of cancer patients and looking for the suitable person for the following posts.

**1.SENIOR NURSES**

Should be registered to practice as a Nurse. Experience in the Nursing field or in the Recognized organization will be an added qualification.

**2.DRIVER CUM HEALTH CARE ASSISTANT**

In addition to the driving experience (Three wheeler & Van) Should Preferable Nursing care experience.

**3.HEALTH CARE ASSISTANT**

Should have undergone a 01 (One) year training in a recognized training Centre and suitable qualification and experience in Health care in a recognize Organization.

**Salary:**


| | |
|---|---|
| Nurses | : 20,000.00-30,000.00 |
| Driver cum Health Care Assistant | : 10,000.00-15,000.00 |
| Health Care Assistant | :10,000.00-12,000.00 |

Salary will be based on qualification & experience

Applicants are requested to forward their application by registered post to reach by 05.03.2017 addressed to **Chariman, CANE Hospice, No.05, Sabapathipillai Road, Uduvil, Chunnakam.** (C-7643)



11 ஆம் ஆண்டு நினைவலைகள் 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் செல்லையா வீரசிங்கம்



அமரர் திருமதி இராசமணி வீரசிங்கம்

திதி: அமாவாசை 26.02.2017

ஆண்டுகள் கோடி ஓடி மறையும் அழிந்திடுமோ உம் நினைவலைகள்
நாம் வாழ்ந்திடும் காலம் முழுவதும் எம் நெஞ்சினில் நிலையாய் வாழ்வீர்
மாண்டவர் மீண்டிலர் என்பது உண்மை உம் காலடிகளை தொழுதே வாழ்கிறோம்

(சி-7664)

இல. 14, சிறிவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன் மகன் சிறிதரன்

# இலங்கைப் படைகளுக்கு அமெரிக்கா மீண்டும் பயிற்சி

## மேலதிக வாய்ப்புக்களைக் கோருகிறார் மைத்திரி



(கொழும்பு)

இலங்கைப் படையினருக்கு மீண்டும் அமெரிக்கா பயிற்சியளிக்க ஆரம்பித்துள்ளது. இதனை வரவேற்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மேலதிக பயிற்சி வாய்ப்புகளை வழங்குமாறு கோரியுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் நீதித்துறைக் குழுவின் தலைவரான பொப் குட்லட் தலைமையிலான எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசினார். இதன் போதே, ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடந்த இந்தச் சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட, அமெரிக்க நாடாளுமன்ற நீதித்துறைக் குழுவின் தலைவரான பொப்குட்லட், இலங்கை அரசாங்கம் ஜனநாயகம், தனிநபர் சுதந்திரம், நல்லிணக்கத்தை வலுப்படுத்த எடுத்துள்ள நடவடிக்கைகளையிட்டு அமெரிக்கா மகிழ்ச்சியடைவதாக தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்திக்கான சவால்மிக்க இலங்கையின் பயணத்தில் அமெரிக்கா துணை நிற்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் இருதரப்பு உறவுகளை பலப்படுத்துதல் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி புதிய அபிவிருத்தி திட்டங்களுக்காக அமெரிக்காவின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்டிருந்த இலங்கை படையினருக்கான அமெரிக்காவின் பயிற்சி வாய்ப்புக்கள் மீண்டும் வழங்கப்பட்டுள்ளமைக்கு நன்றி தெரிவித்தார், கடற்படையினருக்கான அமெரிக்காவின் பயிற்சிகளை அதிகரிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

அனைத்துலக கப்பல் போக்குவரத்து பாதையில் புவியியல் ரீதியாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடத்தில் உள்ளதால், தேசிய பாதுகாப்பில் மாத்திரமன்றி பிராந்தியப் பாதுகாப்பிலும் இலங்கைக்கு முக்கிய பொறுப்பு உள்ளது என்றும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

இலங்கை பாரிய அனைத்துலக முதலீட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பில் கவனம் எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# அம்பாந்தோட்டை துறைமுகத்துக்காக பட்டகடனில் 80 வீதத்தை இவ் வருடம் செலுத்துவோம்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதி

அம்பாந்தோட்டை துறை முகத்தின் நிர்மாணப் பணிகளுக்காக பட்ட கடன் தொகையில் 80 வீத மானவற்றை இவ்வருடத்தில் செலுத்தி முடிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை இதற்கு உதவியது எனவும் அக்மீமன பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைப் பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாமல்போன காலகட்டத்திலேயே நாம் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற



தாகவும் அவர் கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் அபிவிருத்தியடையும் போது தெற்கிற்கான சுற்றுலாத்துறையும் அபிவிருத்தியடையும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# அரசியல் லாபமீட்டும் நோக்கில் செயற்படும் விமல் வீரவன்ச

## பிரதியமைச்சர் பெரேரா விசனம்

அண்மையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகுவதாக விமல் வீரவன்ச வெளியிட்ட கருத்து தொடர்பில் பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா கருத்து வெளியிட்டுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச அரசியல் லாபமீட்டும் நோக்கில் செயற்பட்டு வருவதாக பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

களுத்துறை பிரதேசத்தில நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் பங்கேற்ற போது இதனைக் கூறியுள்ளார்.

விமல் வீரவன்ச அரசியல் லாபத்தை முன்னிலைப்படுத்தியே செயற்பட்டு வருகின்றார் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொள்கைகளை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் விமல் அரசியல் நடத்துவதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-3)

# புறக்கோட்டையில் திடீர் சுற்றிவளைப்பு!

## 1264 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்களின் போது காலாவதியான 2 ஆயிரத்து 600 கிலோகிராம் அரிசி கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சுற்றிவளைப்பு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்கும் அதிகமான விலையில் 3 ஆயிரம் கிலோகிராம் அரிசியும் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், நாடு முழுவதும் இந்த மாதம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் மூலமாக 1762 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், 1264 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாத்பதியுதீனின் டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (இ-3)

# இலங்கைப் பொலிஸாருக்கு எதிராக ஹொங்கொங் அமைச்சர்கள் புகார்

(கொழும்பு)

இலங்கை இரகசியப் பொலிஸாருக்கு எதிராக ஹொங்கொங் அமைச்சர்கள் இருவர் அந்நாட்டுப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹொங்கொங்கில் உள்ள இலங்கை இராணுவ அதிகாரி யொருவரை அந்நாட்டின் அனுமதியின்றி இலங்கை இரகசியப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டதற்காகவே இந்த அமைச்சர்கள் முறைப்பாடு செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இருப்பினும், இந்த முறைப்பாட்டை இலங்கை இரகசியப் பொலிஸார் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# தே.அ. அட்டைக்கு விண்ணப்பிக்கலாம்

க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அவர்களுக்கான விண்ணப்பங்கள் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடையாள அட்டையை பெறுக் கொள்வதற்காக 15 தொடக்கம் 16 வயதுடையவர்கள் விண்ணப்பங்களை வழங்கலாம் என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு பெற்றுக்கொள்ள விரும்பும் மாணவர்கள் அருகில் உள்ள பிரதேச செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தின் அலுவலகங்களில் சென்று முழுமையான தகவலை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், குறித்த மாணவர்களின் விண்ணப்பங்களை சரியான முறையில் பூர்த்தி செய்து பாடசாலை அதிபர்கள் அவற்றை ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்புவது அவசியமாகும் என ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்தல் விடுத்துள்ளது. (இ)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 70 | 120 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 180 | 220 | 300 | 200 |
| தக்காளி | 60 | 40 | 40 | 40 | 60 | 120 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 20 | 20 | 20 | 30 | 40 | 40 | 40 |
| கரட் | 60 | 80 | 40 | 60 | 80 | 120 | 50 |
| பூசணி | 60 | 60 | 30 | 60 | 60 | 60 | 50 |
| புடோல் | 80 | 60 | 40 | 80 | 80 | 80 | 70 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 | 60 | 80 | 30 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 110 | 80 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 180 | 200 | 150 | 150 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 100 | 100 | 120 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 50 | 60 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 160 | 200 | 200 | 180 |
| லீக்ஸ் | 50 | 100 | 60 | 60 | 80 | 80 | 60 |
| பீற்றூட் | 80 | 40 | 40 | 50 | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | 160 | 200 | 130 | 160 | 160 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 400 | 500 | 400 | 600 | 300 |
| போஞ்சி | 120 | 150 | 100 | 120 | 120 | 160 | 80 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 60 | 100 | 100 | 80 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 40 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 100 | 120 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 20-50 | 60 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 300 | 160 | 100 | 220 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 50 | 40 | 40 | 50 | 80 | 80 | 40 |
| முள்ளங்கி | 50 | 40 | 30 | 50 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 15 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 50 | 80 | 60 | 60 |

# மகிந்தவின் குடியுரிமையைப் பறியுங்கள்

## ஜனாதிபதி மைத்திரியிடம் கோரிக்கை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அடிப் படையாகக் கொண்டு அவரது குடியுரிமையை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்கத்தின் அமைச் சர்கள் சிலர் மற்றும் சிவில் அமைப்பு தலைவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளனர்.

எனினும் இந்தக் கோரிக்கையை ஜனாதி பதி நிராகரித்துள்ளதாக ஜனாதிபதி செயலக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்து கின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட அமைச் சர்கள் சிலரினால் இந்த சட்டரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜனாதி பதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுத் துள்ளனர். இந் நிலையில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அண்மையில் ஜனாதி பதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

மகிந்தவின் பிரஜா உரிமையை நீக்குவது தொடர்பில் ஆராய்ந்து பார்த்த போது, இலங்கை அரசியமைப்பின் 81 (1) ஆம் பிரிவில் உள்ள சட்டங்களுக்கமைய அதி காரத்தை தவறாக பயன்படுத்தியமை, ஊழல் மோசடி, அரசியலமைப்பை மீறல், தவறான செயற்பாடுகள் தொடர்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அடிப்படையாகக் கொண்டு இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வ தற்காக விசேட ஜனாதிபதி ஆணைக்குழு வொன்றை நியமிக்குமாறு இந்த நபர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அங்கு மகிந்த குடும்பத்தின் வங்கிக் கணக்கு மற்றும் ஏனைய ஊழல் மோசடி தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற விசா ரணை நடவடிக்கைகளில் உள்ள குறை பாடுகளை ஏற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதி, விசாரணை நடவடிக்கைகளை விரைவாக நடத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதி பதி ஆலோசனை வழங்கியுள்ளார். (இ-7)

## மூன்று தேரர்கள் காயம்

(கொழும்பு)

கண்டி வீதியிலுள்ள கட கன்னாவை 97 ஆம் கட் டைக்கு அருகில நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற வாகன விபத்தில் மூன்று தேரர்கள் காயம டைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்று தேரர்கள் பய ணித்த ஜீப் ரக வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகி யுள்ளது.

இந்த ஜீப் வண்டியில் சப்ரகமுவ பல்கலையின் வேந்தர் கும்புருகமுவே வஜிர தேரரும் காணப்பட்ட தாகவும் கூறப்படுகின்றது.


காயமடைந்த தேரர் மாவனல்லை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள் ளார். ஏனைய இரு தேரர் களும் கூட மாவனல்லை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வும் குறிப்பிடப்படுகின்றது.

தேரர்கள் கண்டிக்குச் சென்று திரும்பி வந்து கொண்டிருக்கையிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் மாவ னல்லை பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

## அடுத்தடுத்து இலங்கைக்கு வரும் அமெரிக்க நாடாளுமன்ற குழுக்கள்





அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் மற்றொரு குழு நேற்று முன்தினம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு, உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி யாக டொனால்ட் ட்ரம்ப் பதவி யேற்ற பின்னர், பீற்றர் ரொஸ் கம் தலைமையிலான நாடாளு மன்ற ஜனநாயகத்துக்கான அமெரிக்க நாடாளுமன்றக் குழு கடந்த 20 ஆம் திகதி, இலங்கைக்கு பயணம் மேற் கொண்டிருந்தது..

இந்தக் குழுவினர் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன, வெளிவிவகார அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் உள் ளிட்டோரைச் சந்தித்ததுடன், அம்பாந்தோட்டை துறை முகத்தையும் பார்வையிட்டி ருந்தனர்.

இந்த நிலையில், அமெ ரிக்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் எட்டுப் பேர் கொண்ட மற்றொருகுழு நேற்று முன்தினம் வந்துள்ளது.

இந்தக் குழுவில் பொப் குட்லெட், ஜக்சன் லீ, ஹோல் டிங், கூலர், ஸ்மித், ஜோன் சன் உள்ளிட்டவர்கள் அடங்கி யிருந்தனர்.

அமெரிக்க நாடாளுமன் றத்தில் நீதித்துறைக் குழு வின் தலைவரான பொப் குட்லட் தலைமையிலான இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் கொழும்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரை தனித் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

அமெரிக்க- இலங்கை உறவுகளை மேலும் வலுப் படுத்துவது குறித்து இந்தச் சந்திப்புகளில் கலந்துரை யாடப்பட்டுள்ளது.


வெளிவிவகார அமைச் சர் மங்கள சமரவீரவையும் பிரதி வெளிவிவகார அமைச் சர் ஹர்ஷ டி சில்வாவையும் அமெரிக்க நாடாளுமன்றக் குழுவினர் நேற்று முன்தி னம் காலை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

இருதரப்பு நலன்கள் சார்ந்த விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட தாக மங்கள சமரவீர தெரி வித்தார்.

அதிகளவிலான அமெ ரிக்க காங்கிரஸ் உறுப்பி னர்கள் இலங்கைக்கு வருகை தந்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தச் சந்திப்புகளில் இலங்கைக்கான அமெரிக் கத் தூதுவர் அதுல் கெசாப்பும் கலந்து கொண்டார். (இ-3)

## சிறையில் படம் வரையும் வீரவன்ச! கண்காட்சிக்கு 25 படங்கள் தயார்



விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச சிறைச் சாலையினுள் படம் வரை யும் நடவடிக்கையை ஆரம் பித்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

தற்போது வரையில் அவ ரால் 25 படங்கள் வரைந்து நிறைவு செய்யப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

"சிறைச்சாலை ஓவியம்" என்ற பெயரில் விமல் வீர வன்ச கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

இதேவேளை விமல் வீரவன்சவினால் இரண்டு புத்தகங்கள் எழுதி நிறைவு செய்யப்பட்டுள்ளன.

விமல் வீரவன்ச அமைச் சராக செயற்பட்ட காலப் பகுதியில் அரச வாகனங் களை தவறாகப் பயன்படுத் திய குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.(இ-3)

## 25 இலட்சம் நிதி மோசடி

(கொழும்பு)

போலி ஆவணங்களை தயா ரித்து 25 இலட்சம் ரூபா நிதி மோசடி செய்த இரண்டு பேர் கம் பஹா பிரதேசத்தில் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கம்பஹா விசேட குற்ற விசா ரணைப் பிரிவினரால் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ள துடன், போலி காணி உறுதிப் பத்திரம் தயார் செய்து இந்த மோசடியை செய்துள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

சப்புகஸ்கந்த மற்றும் யக்கல பிரதேசத்தை சேர்ந்த 33 வயது டைய இரண்டு பேரே நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-3)

## இனவாதக் கட்சிகளுக்கு ஐ.ம.சு.கூவில் இடமில்லை

### அதன் பொதுச் செயலர் அமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பில் இனவாத கட்சிகளுக்கு இனி இடமில்லை என அதன் பொதுச் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இனி இனவாத கட்சி களை இணைத்துக் கொண்டு அரசியல் நடத்தாது என அவர் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். கடந்த காலங்களில் கூட்டமைப் பில் இணைந்து கொண்ட இனவாத கட்சிகளினால் சுதந்திரக் கட்சிக் கும், கூட்டமைப்பின் எதிர்கால பயணத்திற்கும் நெருக்கடிகள் ஏற் பட்டிருந்தன.

இது குறித்து ஆராய்ந்த போது விமல் வீரவன்சவின் தேசிய சுதந் திர முன்னணி கூட்டமைப்பை விட்டு விலகியமை பொருத்தமா னதே.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்புடன் இணைந்து கொள்ள பல கட்சிகள் ஆர்வம் காட்டி வரு கின்றன. இதனால் எதிர்காலத்தில் தற்போதையதை விடவும் வலு வான வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உருவாகும்.

சுதந்திரக் கட்சி மற்றும் கூட் டமைப்பின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு நாடாளுமன்றம் சென்ற வர்கள் தற்போது விலகிச் செல் கின்றனர். இவ்வாறானவர்களுக்கு எதிர்காலத்தில் மக்களின் வாக்கு கள் கிடைக்காது.

கூட்டணியை விட்டு விலகிச் செல்வோருக்கு எதிர்கால தேர்தல் களின் போது தங்களது மெய்யான நிலை என்ன என்பது புரிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும் என மகிந்த அமரவீர மேலும் தெரி வித்துள்ளார். (இ-3)

## கல்வி அமைச்சில் கேர்ணல் நியமனம்

### முதலாம் திகதி போராட்டம்

கல்வி அமைச்சின் விளை யாட்டுப் பிரிவுக்கான புதிய பணிப் பாளராக இராணுவ கேர்ணல் ஒருவரை நியமிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை சுகயீன விடு முறைப் போராட்டமொன்றை முன்னெடுக்க கல்வி நிர்வாக சேவை ஊழியர்களின் தொழிற் சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நியமனத்துக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வுள்ளதுடன், வலய, மாகாண, தேசிய மட்ட பாடசாலை ரீதியிலான விளையாட்டுப் போட்டிகளிலிருந் தும் விலகியிருக்க தீர்மானித்துள் ளதாகவும் அச்சங்கத்தின் செய லாளர் பிரபாத் விதானகே தெரிவித் துள்ளார். (இ-3)

# உலகம் முழுவதும் யோகா கலை பரவுகிறது

## பிரதமர் மோடி மகிழ்ச்சி




உலகம்முழுவதும்யோகா கலை பரவுகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். கோவை வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் உள்ள ஈஷா யோகா மையத்தில் அமைக்கப்பட்டுள்ள 112 அடி உயர ஆதியோகி சிவன் சிலையை பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் திறந்து வைத்தார். இதில் பங்கேற்ற பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

எத்தனையோ தெய்வங்கள் இருந்தாலும் மகாதேவர் ஒருவர் தான். எத்தனையோ மந்திரங்கள் இருந்தாலும் மகா ம்ருத்யுஞ்சய மந்திரம்தான் சிவனுக்கு உகந்தது. எத்தனையோ விழாக்கள் இருந்தாலும் மகா என்ற எழுத்துடன் தொடங்குவது மகா சிவராத்திரிதான். இருளைப் போக்கி வெளிச்சத்தைக் கொண்டு வருவதுபோல, அநீதியை ஒழிப்பதை உணர்த்துகிறது மகா சிவராத்திரி.

பல நூறாண்டுகளாக ஞானிகள் வாழ்ந்துள்ளனர். வெவ்வேறு இடங்களில் இருந்து ஞானிகள் வந்துள்ளனர். அவர்களது மொழிகள் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் தெய்வீக நோக்கம் ஒன்றுதான். இங்கு 112 அடி உயர ஆதியோகி சிலையின் முன்பு நிற்கும் போது மகத்தான இருப்பு நம் அனைவரையும் அரவணைப்பதை உணர முடிகிறது. தற்போது யோகா பல எல்லைகளைக் கடந்து வந்துள்ளது. யோகாவுக்காக தற்போது பல்வேறு பாடசாலைகள், பயிற்சி முறைகள் இருந்தாலும் யோகா என்பது நிலையானது. யோகா புராதனமானது.

ஆனால் நவீனமானது. அது வளர்ந்து கொண்டே இருக்கிறது. யோகாவின் சாரம் இன்னும் மாறவே இல்லை. இந்த சாரத்தை பேணிக்காப்பது மிகவும் முக்கியமானதாகும்.

சிவனை நினைக்கும் போது கைலாய மலையும், பார்வதியை நினைத்தால் கன்னியாகுமரியும் நினைவுக்கு வரும். எனவே, சிவ சக்தி சங்கமம் என்பது மலைகள் மற்றும் கடல்களின் சங்கமமாக அமைந்துள்ளது. இதுதான் நம் நாட்டின் ஒற்றுமையைப் பறைசாற்றுகிறது. சிவன் குடும்பமே வேற்றுமையில் ஒற்றுமை என்ற மரபைக் காட்டுகிறது. கடவுள்கள் அனைவரும் விலங்கு, பறவை, மரத்துடன் இணைந்துள்ளனர். கடவுளை வணங்கும் போது அவற்றையும் வணங்குகிறோம். அதனால்தான் ஒருமை உணர்வு, கனிவு, சகோதரத்துவத்துடன் வாழ்கிறோம். இந்தப் பண்பாட்டுடன்தான் நமது முன்னோர்கள் வாழ்ந்து மறைந்துள்ளனர்.

இந்த தேசத்தில் பெண்மைக்கு முக்கியத்துவம் தருவது பாராட்டுக்குரியது. பல இறைவிகளும், பெண் துறவிகளும் நம்மை வழி நடத்தியுள்ளனர். இனி பெண்கள் மேம்பாட்டைப் பற்றிப் பேசுவதுடன், பெண்கள் தலைமைப் பண்பை ஏற்பது குறித்துதான் பேச வேண்டும். பெண்களை மதிக்கும்சமூகமே மேன்மை அடையும்.

யோகா என்பது சிறந்த அறிவியல். நமது உடலை, மனதை மேம்படுத்தும் சக்தி கொண்டது. உலகம் முழுவதும் யோகா பரவி வருகிறது. நமது மன அழுத்தத்தைக் குறைக்கும் மருந்தாகத் திகழ்கிறது.

எனவேதான், யோகாவைப் பரப்புகிறோம். ஈஷா யோகா மையத்தில் சாதாரண மனிதர்களை யோகிகளாக ஆக்குவது பாராட்டுக்குரியது என்றார்.

இந் நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, ஆளுநர் வித்யாசாகர் ராவ், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் கிரண்பேடி, மத்திய அமைச்சர்கள் பண்டாரு தத்தாத்ரேயா, பொன். ராதாகிருஷ்ணன், ஸ்ரீபத் நாயக், விஜய்கோயல் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். (இ-12)

## ஆர்ஜென்டீனாவில் பேருந்துகள் நேருக்குநேர் மோதல்-13பேர் பலி!



ஆர்ஜென்டீனா நாட்டின் சான்டா ஃபே மாகாணத்தில் இரு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக் கொண்ட கோர விபத்தில் 13 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மான்ட்டிகாஸ் நிறுவனத்தை சேர்ந்த அந்த பேருந்துகள் துறைமுக நகரமான ரோஸாரியோ நகரில் நேற்றுக் காலை எதிர்பாராத விதமாக மோதிக் கொண்டதில் 13 பேர் பலியானதாகவும் பலர் படுகாயம் அடைந்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-12)

## கார்க் குண்டுத் தாக்குதல் நாற்பது பேர் உயிரிழப்பு



சிரியாவின் அல்-பாப் நகரின் அருகில் சிரிய கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள சோசியான் கிராமத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அல்- பாப் நகரிலிருந்து வடமேற்கு நோக்கி 8 கிலோ மீற்றர் தூரத்தில், சிரிய கிளர்ச்சிக் குழுவின் பாதுகாப்பு மையத்தை இலக்கு வைத்து இந்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. தாக்குதலில் காயமடைந்த பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவின் முக்கிய நகராக விளங்கும் அல்-பாப் நகர் கடந்த வியாழக்கிழமை ஐ.எஸ். தீவிரவாதிகள் கட்டுப்பாட்டிலிருந்து துருக்கி படைகளின் ஆதரவுடன் சிரிய அரச கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மெக்ஸிக்கோவின் எல்லையில் விரைவில் சுவர் எழுப்பப்படும்

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உறுதி



திட்டமிடப்பட்டது போன்று மெக்ஸிக்கோவின் எல்லையில் சுவர் எழுப்பப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தெரிவித்துள்ளார்.

மேற்குறித்த கருத்தினை அவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பழமைவாத அரசியல் நடவடிக்கை காங்கிரஸ் (CPAC) எனும் அமைப்பால் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தெரிவித்துள்ளார்.

அத்துடன், குற்றச்செயல்களை புரிந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களும் அமெரிக்காவில் இருந்து நாடுகடத்தப்படுவர் என தெரிவித்துள்ளார். "திட்டமிட்டபடி மெக்ஸிகோவின் எல்லையில் நாம் சுவர் ஒன்றை எழுப்புவோம். உண்மையை சொல்லப்போனால் குறித்த சுவர் எழுப்பும் நடவடிக்கை வெகுவிரைவில் மேற்கொள்ளப்படும்" என தெரிவித்தார். (இ-12)

# புதிய தேர்தல் முறைமை சிறுபான்மையினரை தூக்கிச்சாப்பிட்டுவிடும்

## அமைச்சர் மனோ எச்சரிக்கை

பிரதேச, நகர, மாநகர சபைகளுக்காக முன்மொழியப்பட்டுள்ள புதிய கலப்பு உள்ளூராட்சி தேர்தல் முறை, இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவங்களைத் தூக்கி சாப்பிட்டு ஏப்பம்விட்டு விடும். ஒரு குடும்பத்தின் சர்வாதிகார ஆட்சியை வீழ்த்தி விட்டு இரண்டு பெரும்பான்மை கட்சிகளின் சர்வாதிகார ஆட்சிக்கு வழிகாட்டி விடும். இதை நாம் ஒருபோதும் இப்படியே ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் இந்த பொது நிலைப்பாட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளும் இருக்கின்றன. இது பாராளுமன்றத்தில் 19 எம்.பிக்களைக் கொண்ட அணியாகும். இதுதவிர 16 எம்.பிக்களைக் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் நமது நிலைப்பாட்டை ஆதரித்து கருத்து தெரிவித்துள்ளது. 5 எம்.பிக்களை கொண்ட ஜே.வி.பியும் முன்மொழியப்பட்டுள்ள புதிய கலப்பு முறைமையை நிராகரித்து உள்ளது என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். புதிய தேர்தல் முறை தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாடு முழுக்க ஒட்டுமொத்தமாக அனைத்து பிரதேச, நகர, மாநகர சபைகளில் சுமார் 6,000 உறுப்பினர்கள் உள்ளனர். இந்த புதிய முறையின் கீழ் இந்த தொகை சுமார் 11,000 மாக உயரப்போகிறது. உயரும் பெருந்தொகை புதிய உறுப்பினர்களுக்கான செலவு என்ற வகைகளில் பெருந்தொகை செலவு ஏற்படும். அத்துடன் கூடிய உறுப்பினர்களை அமரச் செய்ய அநேக சபை கட்டடங்களை உடைத்து புதிதாகக் கட்ட வேண்டும். இல்லாவிட்டால், சில பள்ளிக்கூடங்களில் செய்வது போல் காலையில் ஒரு தொகை உறுப்பினர்களுக்கு சபைக் கூட்டமும், மாலையில் இன்னொரு தொகை உறுப்பினர்களுக்கு சபைக் கூட்டமும் நடத்த வேண்டும். அல்லது, ஒரு உறுப்பினர் மடியில் இன்னொரு உறுப்பினர் அமர வேண்டும்.

குறிப்பாக கொழும்பு மாநகரசபையில் இன்றுள்ள சுமார் 53 உறுப்பினர் தொகை சுமார் 100ஐ அண்மிக்கும். ஆகவே கொழும்பு மாநகர மண்டபத்தை உடைத்து செய்வதா? என்ற கேள்வி எழுகிறது. ஒரு உறுப்பினர் மடியில் இன்னொரு உறுப்பினரை அமர சொல்லுவதா? என்ற கேள்விகள் எழுகின்றன.

அடுத்த பிரச்சினை ஒட்டு மொத்த தொகை உயரும் போது, அதற்கு ஏற்றாற்போல் இப்போது இருக்கும் சிறுபான்மை இன உறுப்பினர்களின் தொகையும் உயரத்தானே வேண்டும். ஆனால், புதிய முறையின் கீழ் உயரா விட்டாலும் பரவாயில்லை. அது குறையப்போகிறது என்ற ஆபத்து காத்திருக்கின்றது. இந்த சட்டத்தில் 70 விகிதம் வட்டார முறையும், 30 விகிதம் விகிதாசார முறையும் கலந்து கலப்பு முறையாக இருக்கின்றன. கடந்த பாராளுமன்றத்தில் இந்த சட்டமூல வாக்களிப்பின் மூலம் ஏற்கப்பட்ட போது அப்போதைய உள்ளூராட்சித் துறை அமைச்சர், இந்த சட்டம் அமுல் செய்யப்படும் போது, 70 விகிதம் வட்டாரத்தை 60 விகிதமாக குறைப்பதாகவும், 30 விகிதம் விகிதாசார முறையை 40 விகிதமாக உயர்த்துவதாகவும் வாக்களித்து இருந்தார். அதை நம்பியே சிறுபான்மை கட்சிகள் தமது ஆதரவை வழங்கி இருந்தன.

இன்று பிரேரிக்கப்பட்டுள்ள, புதிய எல்லை மீள் நிர்ணய முறையின் கீழ் 70 விகிதம் வட்டார முறைமை 77 ஆக கூடியும், 30 விகிதம் விகிதாசார முறைமை 23 ஆக குறைந்தும் உள்ளன. சிறுபான்மையினருக்கு சாதகமான விகிதாசார முறைமை திட்டமிட்டு மீண்டும், மீண்டும் குறைக்கப்படுகிறது. இதை எப்படி ஏற்பது? பெரும்பான்மை கட்சிகளுக்கு சாமரம் வீசி ஏதோ அவர்கள் போட்டுத் தருவதை சத்தமில்லாமல் வாங்கிச் சென்று எடுபிடி வேலை செய்யும் நபர்களுக்கு இந்த முறைமை ஒரு வேளை சரியாக அமையலாம். ஆனால், சிறுபான்மை கட்சிகளுக்கு ஒருபோதும் சரியாக அமையாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா:28செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் PR
தொ.இ: B/3164

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா: 57செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:HNDA/பிரான்ஸ் NOT PR
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/3182

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா: 34செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்
தொ.இ: B/3278

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
கி.பா: 55
உயரம்: 6'தகைமை/
தொழில்:HNDA/அரசதொழில்
தொ.இ: B/3313

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 52செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: G/4482

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்:மகம்
கி.பா: 34செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்B.Sc, M.Sc/அரசதொழில்
தொ.இ: G/4485

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:ரேவதி
கி.பா: 55சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்
தொ.இ: G/4501

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி.பா: 40சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:BBA/கணக்காளர்
தொ.இ: G/4512

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.


# பொற்பதம் அருளும் சற்குரு



சூரிய சந்திரர் வாழும் காலந்தோறும் பாரிய பேறளிக்கும் சற்குரு தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகள் ஒவ்வொன்றும் திராட்சை ரசம் ததும்புவனவாய் மிளிர்கின்றன.

இதன் நிமித்தம் இலங்கை, இந்தியா உட்பட உலகெங்கணுமே சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனையை ஆண்டின் முற்பகுதியில் வரும் பகுள பஞ்சம திதியினை அண்டிய தாய் உளமாரப் போற்றி வழிபடுகிறார்கள். அற்புத வரமருளும் சற்குருவின் திராட்சை ரசம் சொட்டும் கீர்த்தனைகளுள், பஞ்சாமிர்தமாய்த் திகழ்வன பஞ்ச இரத்தினக் கீர்த்தனைகளாகும்.

இவை ஒவ்வொன்றும் அமிர்தம் தான். வெஞ்சமரையும் தடுக்கவல்ல வல்லமை கொண்டவை. பஞ்சம், பிணி பதற்றங்களை அறவே நீக்க வல்லன.

பஞ்ச ரத்தினக் கீர்த்தனைகளைப் பாடுவோருக்கும் கேட்போருக்கும் எழுதுவோருக்கும் பிரசுரிப்போருக்கும் ஸ்ரீ ராமப் பேறுகளைக் குறைவின்றி அள்ளித் தரும் என்பது அனுபவ உண்மையே. இவரது உருப்படிகளைப் பாடித் தோற்றுப் போனவர்கள் என்று எவரையுமே உதாரணமாகச் சொல்லவே முடியாது. மாறாக சிரஞ்சீவியாகவும் சேத்திரமாகவும் வாழ்ந்தவர்களே அநேகம் அநேகம். காரணம் எதுவென ஆராயும் போது இருபத்தொரு வருடங்களில் தொண்ணூற்றாறு கோடிதரம் ஸ்ரீ ராம நாமத்தை உளமார உச்சரித்ததன் பேறாக இவரது கீர்த்தனைகள் அனைத்திலும் இராம வரமும் இராம ஒளியும் இராம வாழ்வும் இராம பக்தியும் இராம மோட்சமும் நிரம்பி வழிந்தன. மேலும் ஒவ்வொரு வாழ்வினை பக்தியோடு தரவல்லன. முதலாவது நாட்டை இராகப் பஞ்சரத்தினம் ஜகதானந்தம் விளைவிப்பவன்.

நாட்டை

இந்திர நீலமணியைப் போல, ஒளி பொருந்திய சாரீர சரீர வளமுடைய சீதா பிராட்டி நாயகனான இராமபிரான் அகில உலகத்திற்கும் சதா ஆனந்தம் அளிப்பவன், கற்பக தருவைப் போன்றவன், எதிரிகளைத் தோற்கடிப்பவன், அரக்கர்களின் வெறியை அடக்குபவன், இராமாயண காவியத்தின் சாரமானவன், இராவணனை வதம் செய்பவன், நம் நாட்டுக்கு வேண்டப்படுபவன், "ஜகதானந்தகாரக" என எங்களை அனுதினமும் மகிழ்விப்பாயாக – சீதா பிராட்டி நாயகா எம்மை உம் பாதங்களில் பரவும் படி அனுக்கிரகம் செய்வாயாக. அடுத்துள்ள இரண்டாவது பஞ்சரத்தினம் கௌளை ராகம்.

கௌளை

துடுகு என ஆரம்பிக்கும் இந்தப் பஞ்சரத்தினம் இவ்வாறு உரைக்கின்றது.

இராமா! கனத்த சிற்றின்பத்தால் இழுக்கப்பட்டு நாழிகை தோறும் மிகுந்த துடுக்குகள் புரிந்து வரும் என்னை நீதான் காப்பாற்ற வேண்டும், குதர்க்கத்தில் ஈடுபட்டேன். பிறர் பொருளுக்கு ஆசைப்பட்டேன், உனது நாமத்தை அறியாமல் நான் இறுமாப்படைந்தேன், மதம், பொறாமை, காமம், கருமித்தனம், மோகம் ஆகியவற்றுள் அகப்பட்டு மோசம் போய்விட்டேனே!, ஸ்ரீ இராமா என்னை மீட்டெடுத்துப் புனிதனாக்கிப் புண்ணியனாக்கி விடுவாயாக.

ஆரபி

மூன்றாவது பஞ்சரத்தினம் ஆரபிராகத்தில் அமைந்த - ஸாதிஞ்சனே எனத் தொடங்கும் உருப்படியாகும். இன்பத்திற்கு இருப்பிடமானவனே, யோகியரின் சித்தமிசை விளையாடுபவனே, அச்சத்தை அகற்றுபவனே, அனவரதமும் அன்பு நிறைந்த உள்ளத்தவனாகிய தியாகராஜனால் வணங்கப் பெறுபவனே, சீதை ஒய்யாரத்துடன் கடைக்கண்ணால் பார்க்கும் பேரழகனே, உன்னைப் பாடப் பாடப் பார்க்கப் பார்க்கக் கலியுகத்தின் துன்பங்கள், கொடூரங்கள், யாவுமே பறந்தோடி விடுகின்றன. கோபம் தணிக்கும் தாகம் உள்ளவனாய் நீயிருக்க, நானோ வெட்கமுடையவனாய் திருந்தி விட, ராமா நீ அருள் சொரிகிறாய், என்னைத் திருத்தி விட நீ படும் பாட்டினை எண்ணி நான் தன்னியனாக வாழ வழி தந்து விட்டாயே. அதை எண்ணி நான் பூரிப்படைகின்றேன். ராமா! என்னருகில் நீ வந்து என்னோடு நீ வாழ வேண்டும். இனிமேல் உனக்கு நான் அடிமை! தப்பான வழியில் நான் ஒருபோதும் தவறியும் செல்லமாட்டேன், ஆதலால் நீ என்னுடன் விலகாமல், சிக்கெனப் பிடிக்கும் வண்ணம், கூடவே இருந்து என்னை அரவணைப்பாயாக. நான்காவது பஞ்சரத்தினம் "வராளி" இராகத்தில் அமைந்துள்ளது கனகருசி.

வராளி

அனுதினமும் என் மனதில் அன்பு பெருகி ராமா, உன்னைக் காண ருசி அதிகரிக்கிறது. சூரிய ஒளியை உடைய ஆடை அணிந்தவனே, மணிக் கழுத்தை உடையவனே, ஆப்தர்களின் கற்பக தருவே, கருடவாகனனே! உன்னைக் காணக் காண 'கனகனருசி' அதிகரிக்கின்றது ராமா!

ஸ்ரீ இராகம்

ஐந்தாவது பஞ்சரத்தினம் 'எந்தரோ மகானு' என்ற உருப்படியாகும். மேன்மை தங்கிய மகான்கள், ராம பக்தர்கள் அனைவருக்கும் எனது இதயத் தாமரையை சமர்ப்பணமாக்குகின்றேன். எளியோரைத் தாங்கும் உன்னை யாவரும் அனுபவிக்கும்படியாக உன்னை நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்கின்றேன். இந்த உலகம் உய்ய வழிதர வேண்டும் ராமா என இரக்கின்றார். மேற்படி நாட்டை, கௌளை, ஆரபி, ஸ்ரீராகம், வராளி ஆகிய ஐந்தும் உண்மையிலே இரத்தினங்கள் தான்.

வட இலங்கைச் சங்கீத சபை, கானாநகர் கிழவன் காடு கலா மன்றம், இளங் கலைஞர் மன்றம், கம்பன் கழகம், கொழும்பு கலா மன்றம், யாழ். நுண்கலைப் பீடம் எனப் பலவற்றில் தியாகராஜ உற்சவம் நடைபெறும். அதே சமயம், ஆஞ்சநேயர் கோவில், வேங்கடாசலபதி கோவில், உடுவில் கமலையிலும் ஆராதனை நடைபெறுகிறது.

இந்தியாவில் வெகு சிறப்பாக நடைபெறுகிறது. ஆயிரமாயிரம் உருப்படிகளைச் சிருட்டித்த தியாகராஜ சுவாமிகள் 04.05.1767 இல் பிறந்து 06.04.1847 இல் சமாதியானார். வர்ணமெட்டு, சாகித்தியம், பக்தி, இராகபாவம், பொழிப்பு, செழிப்பு ஆகியவற்றை ஆசை தீர அனுபவிக்க 26.02.2017 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை மருதனார்மடம் சங்கீதசபைக்கு வாருங்கள், பேரின்பம் அடையுங் கள். பஞ்சரத்தினங்களைப் பேறாக்குங்கள்.

கே.எஸ்.சிவஞானராஜா

# உறுதியோடு போராடும் மக்களின் மண்ணில் பாதங்கள் படும் போது பரவசத்தை உணர்கிறேன்

## கேப்பாப்பிலவில் தமிழக திரைப்பட இயக்குநர் பெருமிதம்



தமிழக திரைப்பட இயக்குநரும் ஈழ உணர்வாளரும் எழுத்தாளருமான புகழேந்தி தங்கராஜ் நேற்று முன்தினம் இரவு கேப்பாப்பிலவு பிலவுக் குடியிருப்பில் தமது சொந்த நிலங்களை கையகப்படுத்தியுள்ள விமானப்படையினர் அதனை விடுவிக்கவேண்டுமெனக் கோரி போராட்டம் நடத்தி வரும் இடத்துக்கு வருகை தந்து மக்களை சந்தித்து தனது ஆதரவைத் வெளியிட்டார்.

கேப்பாப்பிலவு போராட்ட களத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட புகழேந்தி தங்கராஜ்,

உலகில் கட்டாயமாக பார்க்க வேண்டிய இடங்கள் என்று சில இடங்களை சொல்வார்கள். அந்த இடங்களுக்கெல்லாம் சென்றால் ஒரு பரவசம் தோன்றும். ஆனால் நான் இன்று கேப்பாப்பிலவில் தமது உரிமைக்காக உறுதியோடு போராடும் மக்களின் மண்ணில் எனது பாதங்கள் படும் போது அந்த பரவசத்தை உணர்கின்றேன்.

உலகில் உன்னதமான மனிதர்கள் யார் என்றால் தங்களுடைய உரிமைகளுக்காக எவரையும் எதிர்பாராமல் தாங்களாகவே அகிம்சை வழியில் போராடுபவர்கள் தான். அந்த அகிம்சை முறையில் எங்கள் நிலத்தை எங்களுக்கு கொடு என்ற ஒற்றை கோரிக்கையுடன் போராடும் இந்த குழந்தைகளுடனும் தாய்மார்களுடனும் இடையில் இருந்து பேசுகிற வாய்ப்பு இறைவன் எனக்கு கொடுத்திருக்கின்ற ஒரு அருட்கொடையாகும்.

உறுதியான, நியாயமான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இந்த மக்களினதும் குழந்தைகளினதும் பாதங்களை தொட்டு வணங்க வேண்டும் என்ற உணர்வு எனக்கு ஏற்படுகின்றது. இந்த மக்களின் உறுதியான போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும். வெற்றி பெறும் நாளில் நான் இங்கே இருக்க மாட்டேன். ஆனால் இந்த மக்கள் என்று வெற்றி பெறுகின்றார்களோ அன்று நானும் நான் சார்ந்த தமிழகமும் நிச்சயமாக கொண்டாடும் என தெரிவித்தார். (2-281)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனயீர்ப்பு ஆறாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது



கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து நேற்று சனிக்கிழமை ஆறாவது நாளாகவும் தொடர்ந்தனர்.

தங்களுக்கு உறுதியான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் இனியும் காலம் தாமதிக்க வேண்டாம்.

இலங்கை அரசுக்கு பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா. கால அவகாசம் வழங்கக் கூடாது என வலியுறுத்தியே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தங்களுக்கு உறுதியான தீர்வு கிடைக்கும் வரைக்கும் கவனயீர்ப்புப் போராட்டத்தை தொடரப் போவதாகவும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

(2-312-15)

# நெல் மூடைகளைத் திருடி கடத்த முயன்ற இருவர் கைது

## ஒருவர் தப்பியோட்டம்; நெல் மூடைகள் கைப்பற்று



வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பேயாடி கூழாங்குளம் பகுதியில் ஆலயம் ஒன்றில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகள் சிலவற்றை திருடி ஆட்டோ ஒன்றில் கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஒருவர் சம்பவ இடத்தில் இருந்து தப்பியோடிய நிலையில் ஆட்டோவுடன் களவாடப்பட்ட நெல் மூட்டைகளும் மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பேயாடி கூழாங்குளம் பகுதியில் நடப்பாண்டில் காலபோக நெற்ச் செய்கையை மேற்கொண்ட விவசாயி ஒருவர் அறுவடை செய்த நெல் மூடைகளை வயல் அருகில் உள்ள ஏ-9 வீதியில் அமைந்திருந்த ஆலயம் ஒன்றில் அடுக்கி விட்டு மீண்டும் வயலுக்கு சென்றுள்ளார்.

இந் நிலையில், அப் பகுதிக்கு ஆட்டோ ஒன்றில் வந்த இரண்டு பேரும் மற்றும் ஆட்டோ சாரதியும் இணைந்து அங்கிருந்த நெல் மூடைகள் சிலவற்றை திருடி ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த விவசாயி உடனடியாக தனது சக நண்பர்களுக்கு தொலைபேசி ஊடாக தகவல் வழங்கியதுடன் விவசாயிகளுடன் இணைந்து நெல் மூடைகளை கடத்திச் சென்ற ஆட்டோவை மோட்டார் சைக்கிள்களில் பின் தொடர்ந்து சென்று பிடித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பவ இடத்தில் இருந்து தொலைபேசி ஊடாக வவுனியா பொலிஸாருக்கு தகவலைத் தெரியப்படுத்தியதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபர்களான ஆட்டோ சாரதியையும் மற்றைய நபரையும் தடயப் பொருட்களுடன் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2 - 15)

# பேரணியில் அணி திரளுமாறு அழைப்பு

வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தக் கோரி, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா வளாகத்தின் பௌதீக விஞ்ஞான பீடத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்படவுள்ள மாபெரும் பேரணிக்கு அனைவரையும் அணிதிரளுமாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

1992 ஆம் ஆண்டு இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் பல்கலைக்கழக கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 25 வருடங்கள் கடந்துள்ள நிலையில் நாட்டின் ஏனைய மாகாணங்களின் பல்கலைக்கழக கல்லூரிகள் பல்கலைக்கழகங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ள நிலையில் வவுனியா பல்கலைக்கழக கல்லூரியானது தொடர்ந்தும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகத்தின்கீழ் வவுனியா வளாகமாகவே இயங்கி வருகின்றது.

காலத்தின் தேவை கருதி வவுனியா வளாகமானது பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இந்த பிரதேசத்தின் எதிர்கால அபிவிருத்திக்கு துறைசார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ளது. அத்துடன் வன்னிப்பிரதேசத்திற்கென தனியான பாரம்பரியம், வரலாறுகள் உள்ளன.

இவற்றையெல்லாம் ஆராய்ச்சி செய்ய நமது பிரதேசத்துக்கென தனியான பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

இவ்வாறு பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படும் சந்தர்ப்பத்தில் வன்னிப் பிரதேசத்திற்கு பொருத்தமான புதிய பீடங்களையும் இங்கே ஆரம்பிக்கமுடியும்.

மூவின மக்களும் வாழுகின்ற இந்த பிரதேசத்தின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்த அரசாங்கத்தை வலியுறுத்தி நடைபெறவுள்ள இந்தப் பேரணிக்கு அனைவரும் ஒற்றுமையுடன் ஒத்துழைப்பு வழங்கி அணிதிரண்டு ஆதரவு தெரிவிக்க வருகை தருமாறு அழைப்பு விடுத்துள்ளார். (2-15-250)



மகா சிவராத்திரி பூசைகள் நேற்று முன்தினம் நெடுங்கேணி மாறாலிப்பை நாகதம்பிரான் ஆலயத்தில் இடம்பெற்றது. இதன்போது ஆலய பிரதம குருக்களினால் முதலாம் சாமப்பூசையைத் தொடர்ந்து லிங்கோற்பவர் பூசை இடம்பெற்றது. பெருந்திரளான அடியார்கள் சிவராத்திரி பூசையில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (படம்:-மல்லாவிச் செய்தியாளர்)

# உறுதியான தீர்வு கிடைக்கும் வரையில் சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்பு

## வவுனியாவில் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது

(மல்லாவி)

வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்குத் தீர்வு கிடைக்கும் வரையில் முன்னெடுத்திருந்த சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா கந்தசுவாமி கோவிலில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் பூஜை வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக ஏ-9 வீதியின் அருகாமையில் தமது போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த உறவுகளின் போராட்டத்திற்கு பல தரப்பட்டவர்களும் ஆதரவு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முடிவு எதுவும் எட்டப்படாத காரணத்தினால் தமது தொடர்போராட்டம் ஒன்றை சுழற்சி முறையில் மேற்கொண்டு வருகின்றனர். (2-15-250)



அன்பின் மூலமே இந்த உலகை வெல்லும்
ஆன்மாவாக நம் ஆன்மாவும் மலரும்
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk

# மரணத்துக்குப் பின்பான வாழ்வு பற்றியும் நினைப்போம்

மகாத்மா காந்தியை கோட்சே என்பவன் துப்பாக்கியால் சுடுகிறான். காந்தியின் இதயத்தைத் துப்பாக்கி ரவைகள் துளைக்கின்றன. காந்திக்கு மரணம் நெருங்கிவிட்டது. அதுவும் அகால மரணம்.

இந்திய தேசத்துக்கு விடுதலை பெற்றுக் கொடுத்த மகாத்மா காந்தி அந்நியர் ஆட்சிக்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியவர்.

அப்போதெல்லாம் அவருக்கு அந்நியர்கள் உரிய மதிப்பைக் கொடுத்தனர். ஆனால் பாரத தேசம் விடுதலை பெற்று இனி நிம்மதியாக வாழலாம் என்று காந்தி நினைத்தவேளையில், பாரத தேசத்தைச் சேர்ந்த ஒருவன் பாரத பூமிக்கு விடுதலை பெற்றுக் கொடுத்த தேச பிதாவை சுட்டுக் கொல்கிறான்.

சிலவேளைகளில் இந்திய தேசத்துக்கு காந்தி விடுதலையைப் பெற்றுக் கொடுக்காமல் இருந்திருந்தால் அவர் இயற்கை மரணம் எய்தியிருப்பார் என்று கூடச் சொல்ல முடியும்.

என்ன செய்வது! சொந்த நாட்டவனால் சுட்டுக் கொல்லப்படும் நிட்டூரம் பாரத பூமிக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த அண்ணல் காந்திக்கு ஏற்பட்டது.

இஃது இந்த உலகம் முழுவதையும் துன்பத்துக்குள் ஆழ்த்திய போதிலும் தன் மரணத்திலும் காந்தியடிகள் உலகத்துக்கு ஒரு உபதேசத்தைச் தெளிவுபடுத்திச் சொல்கிறார்.

ஆம், அண்ணல் காந்தியை கோட்சே துப்பாக்கியால் சுடுகின்ற போது,

"ரகுபதி ராகவ ராஜாராம் பதீத பாவன சீதா ராம்... ராம்..." என்று காந்தியடிகள் உச்சாடனம் செய்கிறார்.

துப்பாக்கிச் சூடு நடக்கிறது. குண்டுகள் இதயத்தைப் பிளக்கின்றன. அப்படியிருந்தும் ராம நாமத்தை காந்தியடிகள் உச்சரிப்பாராயின் அதன் உட்பொருள் மரணத்துக்கு பின்பான தன் வாழ்வு பற்றி அவர் சிந்தித்திருந்தார் என்பதேயாகும்.

மண்ணுலக வாழ்வின் போது எப்படியும் நடக்கலாம். எதுவும் செய்யலாம் என்று நினைப்பவர்களுக்கு,

மரண தறுவாயிலும் இறை நாமத்தை உச்சரித்த காந்தியின் செயல் ஒரு பெரும் உண்மையை எடுத்துச் சொல்கிறது. அந்த உண்மைதான் மரணத்துக்குப் பின்பான வாழ்வு பற்றியதாகும்.

இவ்வுலகில் வாழ்ந்து போன ஞானிகளும் யோகிகளும் அதிகமாகப் போதனை செய்த விடயம் மறுமை பற்றியதுதான்.

மானிடப் பிறப்பின் மகத்துவம் பேரின்பப் பெருவாழ்வுக்கான பேற்றை அடைவது. எனினும் இந்தப் பேருண்மையை உணர்வதில் பலரும் பின்னிற்கின்றனர்.

அதிலும் குறிப்பாக அரசியல்வாதிகளும் அதிகாரத்தில் இருக்கக்கூடியவர்களும் இது பற்றி இம்மியும் நினைத்திலர்.

இந்த நினைப்பு மனிதர்களிடம் ஏற்பட வேண்டும் என்பதை காந்தியடிகள் உள்ளிட்ட பலரும் பல இடங்களில் எடுத்தியம்பியுள்ளனர்.

இப்போது இருக்கக்கூடிய பாதகமான அரசியல் சூழ்நிலையில் மரணத்துக்குப் பின்பான வாழ்வு பற்றியும் சிந்திப்பது கட்டாயம்.

அந்தச் சிந்தனைக்கு இடம்கொடாமல் தேர்தல் நடந்துவிட்டது. வெற்றி பெற்று விட்டோம். இனி நாம் செய்வதை - சொல்வதை கேட்பது தான் தமிழரின் தலைவிதி என்ற ஆணவ செருக்கில் மூழ்கி இருப்பது அவ்வளவு நல்லதல்ல என்பதை உணர்ந்து நீதியாக செயற்படுவது மிகவும் அவசியமாகும்.

இத்தத்துவம் சகலருக்கும் பொருத்தமானதே.

# பக்கச்சார்பற்ற, சுயாதீன நீதிமுறைமையை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் உள்ளேன்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

பக்கச்சார்பற்ற சுயாதீனமும் முன்மாதிரியுமான நீதிமுறைமையை நாட்டில் கட்டியெழுப்புவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

382 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள பொலநறுவை நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு அடிக்கல் நடும் வைபவத்தில் நேற்று முற்பகல் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை மிகவும் வினைத் திறனாக மேற்கொள்ளும் நோக்கில் நீண்டகாலமாக பொலநறுவை நீதிமன்ற அலுவலகங்களில் இருந்து வந்த இப்பிரச்சினைக்கு தீர்வாக இந்த புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதி நிர்மாணிக்கப்படுகிறது.

நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதிபதிகளின் உத்தியோகபூர்வ இல்லம், ஆவணக் காப்பகம், தொழில் பிணக்குகள் சபை, சட்டத்தரணிகள் அலுவலகம் உள்ளிட்ட நவீன வசதிகளைக் கொண்ட வகையில் இக்கட்டடத்தொகுதி அமைக்கப்பட உள்ளது.

கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் நாட்டின் நீதித்துறைக்கு தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படாத வகையில் செயற்பட முடிந்திருப்பது தொடர்பில் தான் மகிழ்ச்சி அடைவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி ,நீதித்துறையில் உள்ள அனைவரும் சுதந்திரமாகவும் திருப்தியுடனும் தமது கடமைகளை நிறைவேற்றக் கூடிய ஒரு சூழலை கட்டியெழுப்பும் பொறுப்பை தற்போதைய அரசாங்கம் நிறைவேற்றி வருவதாக தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த வாரம் தமது பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ள பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவனின் சேவைகளையும் ஜனாதிபதி பாராட்டினார்.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, பிரதி அமைச்சர் துஷ்மந்த மித்ரபால, வடமேல் மாகாண முதலமைச்சர் பேசல ஜயரட்ன, பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன், சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-12)

# சுவர் வேண்டாம் பாலம் கட்டுங்கள்

## பெருநாட்டு ஜனாதிபதி ட்ரம்பிற்கு அறிவுரை

(வோஷிங்டன்)

அமெரிக்கா - மெக்ஸிக்கோ எல்லையில் தடுப்பு சுவருக்கு பதிலாக பாலங்களை கட்டுங்கள் என வெள்ளை மாளிகையில் டொனால்ட் ட்ரம்ப்பை சந்தித்த பெரு நாட்டு ஜனாதிபதி அறிவுரை வழங்கியுள்ளார்.

மெக்ஸிக்கோ- அமெரிக்கா இடையே தடுப்பு சுவர் கட்டும் டொனால்ட் ட்ரம்ப்பின் திட்டத்தை அவர் ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் போட்டியிட்டபோதே பெரு நாட்டின் ஜனாதிபதியான பெட்ரோ பாப்லோ குக்சின்ஸ்கி எதிர்த்து வந்தார்.

ஒரு பேட்டியின்போது விளையாட்டாக, ஒரு வேளை டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவி ஏற்று, தனது தடுப்பு சுவர் திட்டத்தை செயற்படுத்த விரும்பினால் அந்நாட்டுடனான எங்களது உறவுகளை துண்டித்துக் கொள்ளவும் தயார் என்றும் முன்னர் பெரு ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

தேர்தலில் வென்று அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப் மெக்ஸிக்கோ - அமெரிக்கா இடையே தடுப்பு சுவரை எழுப்பியே தீர வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார். வட அமெரிக்க கண்டத்தில் உள்ள முக்கிய நாடான பெரு நாட்டுடன் நல்லுறவை பேணவே நாங்கள் விரும்புகின்றோம் என ட்ரம்ப் கூறி வருகிறார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் அரசுமுறை பயணமாக அமெரிக்காவுக்கு சென்ற பெருநாட்டு ஜனாதிபதி பெட்ரோ பாப்லோ குக்சின்ஸ்கி வோஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ட்ரம்ப்பை சந்தித்து பேசினார். பின்னர், அவர் வெளியிட்ட வீடியோ செய்தியில், 'மக்கள் சுதந்திரமாக நடமாட நாம் அனுமதிக்க வேண்டும். எனவே, மெக்ஸிக்கோ எல்லையில் தடுப்பு சுவருக்கு பதிலாக பாலங்களை கட்டுங்கள் என ட்ரம்ப்பை நான் கேட்டுக் கொண்டேன்' என்று அவர் தெரிவித்தார். (இ-12)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் தோப்பு, அச்சுவேலி நகரம், வைத்திய சாலை வீதி அச்சுவேலி, செல்வநாயகபுரம், பலாலி தெற்கு, பாரதி வீதி, பத்தமேனி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், அச்சுவேலி வல்லை வீதி, விஜிதா மில், சுன்னாகம் நகரம், கந்தரோடை, கொத்தியாவத்தை, ஜெற் மோட்டோர்ஸ், மல்லாகம், கல்லாரை, அளவெட்டி, தெல்லிப்பழை,பன்னாலை, சிறுவிளான், மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை, கார்கில்ஸ் சிலோன் பிஎல்சி சுன்னாகம், நீதிமன்றக் கட்டடத்தொகுதி மல்லாகம், மக்கள் வங்கி சுன்னாகம், இலங்கை தொலைத் தொடர்பு சேவை நிலையம் சுன்னாகம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குருமன்காடு கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# காசை கடவுளுக்கு இணையாக மாற்றாதிருப்போம்

இன்று நமக்குத் தரப்படும் பைபிள் பகுதியில் இயேசு 'எவரும் இரு தலைவருக்கு பணிவிடைசெய்ய முடியாது. ஏனெனில் ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார் அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்திற்கும் பணிவிடை செய்ய முடியாது எனவும் நாம் எம் வாழ்வில் கவலை கொள்ளத் தேவையில்லை எனவும் கூறுவதைப் பார்க்கின்றோம்.

செல்வங்களும் உலகக் கவலைகளும் கடந்த காலத்தை மறக்கச்செய்து, நிகழ் காலத்தை நாம் ஏற்காமல் வைத்து, நமது எதிர்காலத்தை உருக்குலைக்கின்றன. எனவே இவ்வுலகச் செல்வங்களின்மீது நமது வாழ்வை அமைத்துக் கொள்ளாமல் கடவுளின் வாக்குறுதி, அவரது உடனிருக்கை, அவர்

## பரமபிதா காட்டிய பாதை

நம்மைத் தேர்ந்தெடுத்தார் என்னும் தூண்களின் மீது நமது வாழ்வை அமைப்போம். நமது வாழ்வு முழுவதும், கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று தூண்களின்மீது அமைய வேண்டும். ஆண்டவரின் தேர்வு கடந்த காலம், ஆண்டவரால் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நோக்கி நடப்பது எதிர்காலம், நம்மைத் தேர்வு செய்துள்ள கடவுளுக்குப் பதிலளித்து வாழ்வது நிகழ்காலம் ஆகும்.

எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது என இன்று நமக்குத் தரப்படும் பைபிள் பகுதியின் ஆரம்பவரிகளை நோக்கும் போது இயேசு இவ் வார்த்தைகளைச் சொன்ன போது, உண்மையான தலைவன், உண்மையான பணியாளரைப் பற்றி அவர் நினைத்துப் பார்த்திருக்க வேண்டும். நல்ல பண்புகள் உள்ள ஒருவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ளும் பணியாளர், அத்தலைவன் மீது உள்ள மதிப்பினால், அன்பினால் அவருக்குப் பணிவிடை செய்வார். தலைவன் தரும் ஊதியம், அல்லது பிற பயன்கள் இவைகளுக்காகச் செய்யப்படும் பணிவிடை அல்ல இது. அவைகளையெல்லாம்தாண்டி, பணியாளரின் பணிவிடை அமைந்திருக்கும். இயேசுவின் இக்கூற்று, இன்றைய நமது அரசியல் தலைவர்கள், தொண்டர்களுக்குப் பொருந்தாது. இந்தத் தலைவர்கள், தொண்டர்கள் அனைவரும் வேறொரு தெய்வத்திற்குப் பணியாளர்கள். பணம் என்ற தெய்வத்திற்கு இவர்கள் அனைவரும் பணிவிடை செய்பவர்கள். நாங்கள் கடவுளுக்கும், செல்வத்திற்கும் பணிவிடை செய்கிறோம். ஏனெனில் எங்கள் கடவுளே செல்வம்தான், என்று சொல்பவர்கள் இவர்கள். இவர்கள் பின்னே போகலாமா?

கடவுளையும், செல்வத்தையும் இன்றைய பைபிள் பகுதியின் ஆரம்ப பகுதியில் ஒப்புமைப்படுத்தி பேசிய இயேசு, கடவுளையும், கவலைகளையும் இரண்டாம் பகுதியில் ஒப்புமைப்படுத்துகிறார். செல்வத்தைக் கடவுளுக்கு இணையாக வைத்து வழிபடுவதும், பணிவிடை செய்வதும் தவறுஎன்று இயேசு கூறுகிறார். கடவுளை நம் கண்களிலிருந்து மறைக்கும் அளவுக்கு நாம் எம் கவலைகளால் எம்மையே சூழவிடுகிறோம். சிறு சிறு துளிகளாய் சேரும் கவலைகள் விரைவில் நம்மை மூழ்கடிக்கும் என்பதை மறக்கின்றோம். கவலைப்படாதீர்கள் என்று மட்டும் இயேசு கூறிச் சென்றிருக்கவில்லை. கவலை கொள்ளாமல் இருக்க இயேசு வழிகளையும் சொல்லியிருக்கிறார். கவலைக்குப் பதில் கடவுள் நம்பிக்கையால் மனதை நிரப்புங்கள் என்கிறார். கவலைப்படுவதால்



உங்களில் யார் தன் உயரத்தைக் கூட்டமுடியும் என்ற எதார்த்தமான சவாலை முன்வைக்கிறார் இயேசு. கவலைப்படுவதால் ஒருவேளை நாம் குறுகிப் போக, உடல் நலம் குறைந்து போக அதிக வாய்ப்புக்கள் உண்டு.

இயேசு இன்று பைபிள் பகுதியின் இறுதியில் கூறும் வார்த்தைகள் எம் மனதில் ஆழமாய் பதிய வைப்போம்: 'நாளைக்காகக் கவலைப் படாதீர்கள் ஏனெனில்நாளைய கவலையைப் போக்க நாளை வழி பிறக்கும். அந்தந்த நாளுக்கு அன்றன்றுள்ள தொல்லையே போதும்." செல்வத்தை வணங்கும்,உலகக் கவலைகளில் ஆழ்ந்துவிடும் தவறை நாம் செய்யாதிருப்போம்.

**ம.பிரான்சிஸ்க்**
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# கரவெட்டி பிரதேச செயலக உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

## டயமன்ஸ்–பொம்மர்ஸ் இன்று பலப்பரீட்சை





கரவெட்டி பிரதேச செயலக அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான அணிக்கு 11 பேர் கொண்ட உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் 25 கழகங்கள் பங்குபெற்றியது இன்று ஞாயிற்றுக் கிழமை பரபரப்பான இறுதிப்போட்டி வதிரிடயமன்சை எதிர்த்து வதிரி மொமர்ஸ் அணிகள் மோதவுள்ளது. (க)

## வதிரி டயமன்ஸ் அணியை வீழ்த்தி இமையாணன் மத்தி சம்பியன்



கரவெட்டி பிரதேச செயலக உதைப்பந்தாட்ட சம்பியனாகியது இமையாணன் மத்தி பெண்கள் அணி. கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழா மிகவும் பரபரப்பாக நடைபெற்று வருகின்றது. இதில் மாலு சந்தி மைக்கல் விளையாட்டுகழக மைதானத்தில் (24.02.2017) அன்று காலை 8-00 மணியளவில் ஓவர் ஓல் சம்பியன் பட்டத்துக்கான முக்கிய போட்டியாக மகளிர்களுக்கான உதைப்பந்தாட்ட போட்டி நடைபெற்றது.

இதில் வெல்லும் அணிக்கே ஓவர் ஓல் சம்பியன் ஆகும் நிலையில் போட்டி நடைபெற்றது. முதலாவது போட்டியில் மாலு சந்திமைக்கல் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இமையாணன் மத்தி அணி இறுதிப் போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து மோதியது. இமையாணன் மத்தி இறுதி வரை பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் 0-0 என்ற கோல் கணக்கில் போட்டி நிறைவு பெற்றது. இறுதியில் வெற்றியை தீர்மானிக்க பனால்டி உதை வழங்கப்பட்டது இதில் 3-2 என்ற கோல்க் கணக்கில் இமையாணன்மத்தி அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. (க)

## விக்ரம், ராஜன், கங்கு கிரிக்கெட் இறுதிப்போட்டி

யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகம் நடத்தும் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது

இவ் இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் K.C.C.C விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

## வல்வை விளையாட்டுக்கழகம் நடத்தும் பெண்களுக்கான உதைபந்தாட்டம்

### இளங்கதிர் சம்பியன்




வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டுப்போட்டியின் ஓர் அங்கமான பெண்களிற்கான 5 நபர் கொண்ட உதைப்பந்தாட்ட போட்டியானது கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக் கிழமை அன்று இடம்பெற்றது. இவ் இறுதியாட்டத்தில் ரேவடி அணியினை எதிர்த்து இளங்கதிர் அணி மோதியது விறு விறுப்பாக இடம்பெற்ற இவ்வாட்ட நேர இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது இளங்கதிர் அணி. அணி சார்பாக வனிதா 2 கோல்களைப் பெற்றுக் கொடுத்தார். (க)

## சென்மேரிஸ் (B) அணி வெற்றி

கிளிநொச்சி லீக்கின் அனுமதியுடன் நடை பெற்று வரும் FUTSAL உதைபந்தாட்ட போட்டியில் நேற்று உதய சூரியன் அணியை எதிர்த்து சென்மேரிஸ் (B) அணி மோதியது.

மிகவும் பரபரப்பான போட்டியில் சென்மேரிஸ் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



சென்மேரிஸ் அணி சார்பாக மெடன்3கோலினையும் யோனிஸ்ரன் ஒரு கோலினையும் போட்டனர். (க)

## ரூ.40 இலட்சம்...

வடமராட்சி கட்டைக்காடு கடற்தொழிலாளர்கள் அங்குள்ள கடற்படை கண்காணிப்பு சாவடியினை முற்றுகையிட்டதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று சனிக்கிழமை அதிகாலையில் நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப்படகுகள் கட்டைக்காட்டு பிரதேச கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்துள்ளனர்.

கரையில் இருந்து 200 மீற்றர் தூரத்திற்கு வந்த இழுவைப் படகுகளினால் உள்ளூர் மீனவர்களின் 40 இலட்சத்திற்கும் அதிகமான வலைகள் அறுக்கப்பட்டதுடன் வலைகள் பல இழுவைப்படகுகளுடன் அள்ளுண்டு சென்றுவிட்டன.

தமது மீன்பிடி வலைகள் அறுக்கப்பட்டமை தொடர்பில் கட்டைக்காட்டில் உள்ள கடற்படையினரின் கண்காணிப்பு சாவடியில் தெரியப்படுத்திய போதிலும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கடற்தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அறுக்கப்பட்ட வலைகளுடன் வந்த கடற்தொழிலாளர்கள் தமக்கு நீதி கிடைக்கவேண்டும் எனத் தெரிவித்து அறுத்த வலைகளையும் சாவடி முன்பாக போட்டு சாவடியினை முற்றுகையிட்டனர்.

சம்பவத்தினை அறிந்து அப்பகுதிக்கு உடன் விரைந்த மருதங்கேணிப் பிரதேச செயலர் கோ.கனகேஸ்வரன் சேத மதிப்பீடுகளை மேற்கொண்டதுடன் இது தொடர்பில் யாழ். அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அரச அதிபர் இது தொடர்பில் வட மாகாண கடற்படை தளபதியுடன் தொடர்பு கொண்டு நிலைமையினைத் தெரியப்படுத்தியதையடுத்து வடமாகாண கடற்படை தளபதியின் உத்தரவுப்படி இரண்டு கடற்படை படகுகள் அப்பகுதியில் பாதுகாப்பிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பிரதேச செயலகர் தெரிவித்தார்.

மேலும் இது தொடர்பில் மாகாண சபை உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிற்கும் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார். (செ-60)

## கேப்பாப்பிலவு...

க்கப்பட்டு வருகின்றது.

89 குடும்பங்களிற்கு சொந்தமான காணிகளை விமானப்படையிடமிருந்து விடுவிக்குமாறு வலியுறுத்தி கடந்த 31ஆம் திகதி தொடக்கம் மக்கள் தொடர் போராட்டத்தை இரவு பகலாக முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கு, கிழக்கு மாத்திரமின்றி தென்னிலங்கை மக்களும் இதற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

எனினும் இதுவரை நல்லாட்சி எனக் கூறும் அரசாங்கம் மக்களின் போராட்டத்திற்கு தீர்வை முன்வைக்காத நிலையில் தொடர் போராட்டம் குறித்து பாராமுகமாகவும் நடந்து வருகிறது.

இந் நிலையில் கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வீட்டிற்கு ஒவருவரேனும் போராட்ட களத்திற்கு வரவேண்டும் என இளைஞர்கள் பலரும் அழைப்பு விடுத்துள்ளனர்.

கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டத்தில் நேற்றைய தினம் ஒன்றுகூடியபெருமளவான இளைஞர்கள் அப்பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துடன் பேராட்டத்திற்கு ஆதரவும் தெரிவித்திருந்தனர்.

அதேவேளை போராட்டம் தொடர்ந்து இடம்பெற்றுவருவதனால் பிலவுக்குடியிருப்பு பாடசாலை மாணவர்களும் தமது கற்றல் செயற்பாடுகளை புறக்கணித்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழக திரைப்பட இயக்குநரும் ஈழ உணர்வாளரும் எழுத்தாளருமான புகழேந்தி தங்கராஜ் நேற்றையதினம் இரவு கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பிற்கு விஜயம் செய்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

தமது சொந்த நிலங்களை கையகப்படுத்தியுள்ள விமானப்படையினர் அதனை விடுவிக்க வேண்டும் என கோரி போராட்டம் நடத்திவரும் இடத்துக்கு சென்று மக்களை சந்தித்து தனது ஆதரவையும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இன மத பேதமின்றி கேப்பாப்பிலவு மக்கள் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் மக்களை சொந்த நிலத்தில் குடியேறும் வரை போராட்டத்திற்கு இளைஞர்களை ஆதரவு வழங்குமாறும் சமூக வலைத்தளங்கள் ஊடாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (செ-281)

## பல்கலை மாண...

பொலநறுவை ரோயல் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்று முற்பகல் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

பெற்றோர்களினதும் நாட்டினதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் மனிதாபிமானத்துடனும் சகோதரத்துவத்துடனும் ஒரு சிறந்த மாணவராக தனது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு உலகுக்கு ஒரு முன்மாதிரியான மாணவ தலைமுறையாக இருக்குமாறு அனைத்து பல்கலைக்கழக மாணவர்களிடமும் கேட்டுக்கொள்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எழுச்சிபெறும் பொலநறுவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டாகும்போது பொலநறுவை மாவட்டத்தில் அனைத்து பாடசாலைகளிலும் பௌதிக தேவைகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டின் ஏனைய மாவட்டங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் நிலவும் பௌதிக வளப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் விசேட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி இருப்பதாக குறிப்பிட்டார்.

தமது கோரிக்கையின் பேரில் இந்திய அரசாங்கத்தின் அன்பளிப்பில் பொலநறுவை நகரில் நிர்மாணிக்கப்படவுள்ள நல்லிணக்க பாடசாலையின் நிர்மாணப்பணிகளை இவ்வருடம் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, சீன அரசாங்கத்தின் அன்பளிப்பில் அனைத்து சிறுநீரக நோயாளிகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் பொலநறுவையில் நிர்மாணிக்கப்படவுள்ள சிறுநீரக வைத்தியசாலையின் நிர்மாணப்பணிகள் இவ்வருடம் ஜூன் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும் எனவும் கூறினார். (செ-11)

## தேயிலை தோட்ட...

பட்ட கூட்டு உடன்படிக்கையை மீறி நடப்பதால், தொழிலாளர்களினால் தங்களுக்குரிய சம்பளத்தை முழுமையாக பெற முடியாதிருப்பதாக பிரதான தொழிற்சங்கமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குற்றச்சாட்டியுள்ளது.

ஏற்கெனவே தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளம் 490 ரூபாய் உட்பட நாட்கூலியாக 620 ரூபாய் நிரணயம் செய்யப்பட்டிருந்தது.

நாளொன்றுக்கு அவர்கள் பறிக்க வேண்டிய தேயிலை கொழுந்தின் எடை 12 கிலோ ஆகும். அதற்கு மேலதிகமாக பறிக்கப்படும் கொழுந்துகளுக்கு மேலதிக கொடுப்பனவு கிடைக்கும்.

இறுதியாக செய்து கொள்ளப்பட்ட கூட்டு உடன்படிக்கையின் பிரகாரம் அடிப்படை சம்பளமாக 550 ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உற்பத்தித்திறன் கொடுப்பனவு 140ரூபாய் மற்றும் ஏனைய கொடுப்பனவு அடங்கலாக நாட்கூலியாக 730 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தித்திறன் கொடுப்பனவு தொடர்பாக தோட்ட நிர்வாகங்களும் தொழிற்சங்களும் முரண்பாடான போக்கை கடைப்பிடிப்பதால் கடந்த ஐந்து மாத காலமாக தொழிலாளர்கள் முழுமையாக கூலியை பெற முடியாத நிலை தொடருகின்றது.

நாளொன்றுக்கு 18 கிலோ தேயிலை பறித்தால் தான் அக்கொடுப்பனவு வழங்க முடியும் என தோட்ட நிர்வாகங்கள் கூறுகின்றன.

கூட்டு ஒப்பந்தத்தில் 18 கிலோ பறிக்க வேணடும் என எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்று தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

தோட்ட நிர்வாகங்கள் உற்பத்தித்திறன் கொடுப்பனவு தொடர்பாக கொண்டுள்ள நிலைப்பாடு இரு தரப்பு கூட்டு ஒப்பந்தத்தை மீறும் செயல் என பிரதான தொழிற்சங்கமான இ.தொ.கா தொடர்ந்து வலியுறுத்துகின்றது.

இது தொடர்பாக தொழில் அமைச்சரை சந்தித்து பேச இ. தொ. கா நேர ஒதுக்கீடு கேட்டுள்ள போதிலும் இதுவரை நேர ஒதுக்கீடு கிடைக்கவில்லை என கூறப்படுகின்றது.

அமைச்சருடன் இடம் பெற உத்தேசிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தையில் சாதகமான பதில இல்லையேல் அடுத்த கட்டமாக நீதிமன்றத்தை நாடப்போவதாக இ.தொ.கா பொதுச்செயலாளர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்திருக்கின்றார். (செ-11)

# வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் காலவரையற்ற போராட்டம்!

## யாழ்.மாவட்ட செயலகம் முன் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் நாளை 27ஆம் திகதி தொடக்கம் கால வரையற்ற போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்கக்கோரி மத்திய, மாகாண அரசுகளிற்கு கடந்த காலங்களில் பல வழிகளிலும் கோரிக்கை விடுத்த போதும் இன்று வரை வடமாகாணத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு என்பது எட்டாக்கனியாகவுள்ளது.

இந்த நிலையில் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினால் யாழ்.மாவட்ட செயலக முன்றலில் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.அக்கலந்துரையாடலின் அடிப்படையில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி போராட்ட அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தம்மால் இதுவரை விடுவிக்கப்பட்ட கோரிக்கைகளை பரிசீலித்து கால இழுத்தடிப்புக்களின்றி தீர்க்கமான எழுத்து மூலமான பதிலினை மேற்குறித்த துறைசார் உயர்அதிகாரிகள், மத்திய, மாகாண அரசுகள் உடனடியாக வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வேலையற்ற பட்டதாரிகளால் யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகம் முன்பாக நாளை 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் பகல், இரவு தொடர் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட உள்ளது.

எனவே போலி வாக்குறுதிகளால் ஏமாற்றம் அடைந்து நீண்ட காலம் வேலையில்லாது காத்திருப்பினால் மன உளைச்சல்களிற்கு உள்ளாகியுள்ள அனைத்துப் பட்டதாரிகளும் இப்போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் அணிதிரளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனவும் ஏற்பாட்டாளர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (செ-4)

# வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக விக்ஸ்காடு மக்கள் போராட்டம்

## 4ஆவது நாளாக நேற்றும் தொடர்கிறது

(மல்லாவி)

வவுனியா மாவட்டத்தில் உள்ள இராசேந்திரகுளம், விக்ஸ்காடு மக்கள் தாம் வாழும் காணிகளை தமக்கு உரித்தாக வழங்குமாறு கோரி வவுனியா மாவட்ட செயலகம் முன்னால் நேற்று சனிக்கிழமையும் நான்காவது நாளாகவும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

யுத்தம் காரணமாக பல்வேறு இடப்பெயர்வுகளை சந்தித்த நிலையில் காணியற்ற சுமார் 44 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த 6 வருடங்களுக்கு மேலாக இப்பகுதியில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்களை வெளியேற்ற வன இலாகா திணைக்களத்தினர் எடுத்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தாங்கள் குடியிருக்கும் காணிகளை தமக்கே வழங்குமாறு கோரியும் வவுனியா மாவட்ட செயலகம் முன்னால ஆரம்பித்த போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்துள்ளது,

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 07 மணியளவில்நேரில்சென்று சந்தித்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இம் மக்களின் பிரச்சினை தொடர்பில் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா ஆகியோருடன் குறித்த விடயம் தொடர்பில் தொலைபேசியில் உரையாடியிருந்தார்.

இதனையடுத்து காணிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான உறுதி மொழிகளை எழுத்து மூலம் போராட்டக்கார்களுக்கு வழங்க அதிகாரிகள் இணங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் எழுத்துமூலமான உறுதி மொழி கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லை எனத் தெரிவித்த அப்பகுதி மக்கள் தமது போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர். (செ-15)

## பொது அமைப்பு...

யிருப்பு மக்களின் நில மீட்புக்கான தொடர் போராட்டம் நீடித்து வரும் நிலையில், நேற்றையதினம் அவசரமாகக் கூடிய தமிழ் மக்கள் பேரவையின் செயற்குழு அனைத்து பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் கலந்தாலோசித்து ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வழங்கக்கூடிய ஆதரவு பற்றி ஆராய்வதென முடிவெடுக்கப்பட்டது.

இதேவேளை இக் கலந்துரையாடலில் அனைத்துப் பொது அமைப்புக்களையும் கலந்து கொள்ளுமாறும் தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. (செ)

## பகுதியளவில்...

இதில் கலந்துகொண்ட நாடாளுமன்றம் மற்றும் சிவில் விவகார மேலதிகச் செயலாளர் ஏ.பி.ஆர்.ராஜபக்ஷ, மேற்படி கேப்பாப்புலவு காணி விவகாரம் தொடர்பில் மேலும் கூறியதாவது,

பிலவுக்குடியிருப்பு விமானப்படை முகாம் அமைந்துள்ள காணியானது, அரசாங்கத்துக்குச் சொந்தமானதாகும். அதில், ஒரு பகுதி வனஇலாகா திணைக்களத்துக்குச் சொந்தமாக இருக்கின்றது. யுத்தம் நிலவிய காலப் பகுதியில், குறித்த பகுதிக் காணிகளை, மாவீரர் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால், மாவட்ட அரசாங்க அதிபருக்கு அதிக அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. இந்த அழுத்தம் காரணமாக அக்காணி, 2005ஆம் ஆண்டில் அரசாங்க அதிபரினால் அரசாங்கத்துக்குச் சொந்தமாக எழுதிக்கொடுக்கப்பட்டது. அவ்வாறு அரசாங்கத்துக்குச் சொந்தமாக்கப்பட்ட காணியிலேயே, விமானப் படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இதில், 40 ஏக்கர் காணி, பொது மக்களுக்குச் சொந்தமாக இருக்கின்றதென கண்டறியப்பட்டுள்ளது.

அதில் 54 குடும்பங்களுக்குரிய அந்தக் காணியை, அம்மக்களிடமே பகுதியளவில் கையளிப்பதற்கு அல்லது நட்டஈடு வழங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. மாவட்ட அரசாங்க அதிபரும், அதனையே வலியுறுத்தியுள்ளார்.

எனவே, வெகு விரைவில் அக்காணி, பொது மக்களிடம் பகிர்ந்தளிக்கப்படும். அல்லது, அக்காணிக்கான நட்டஈடு வழங்கப்படும். காணி பகிர்ந்தளிக்கப்படும் பட்சத்தில், அரசாங்கத்துக்கும் வனஇலாகாவுக்கும் சொந்த மாக எஞ்சியுள்ள காணியில் விமானப்படை முகாம் அமைந்திருக்கும் என்று அவர் மேலும் கூறினார். (செ-11)

## வடக்கு சபையா...

வுள்ள மாகாணசபை அமர்வில் இம் மகஜர் அங்கீகரிக்கப்பட்டு மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

வடமாகாண சபையின் சமகால நிலைமைகள் தொடர்பாக நேற்றைய தினம் யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். குறித்த விடயம் தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஜெனிவா அமர்வு தொடர்பான விடயங்களை கையாள்வதற்காக குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்த குழு தற்சமயம் மகஜரை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டிருப்பதுடன், நாளை அந்த குழுவின் சந்திப்பும் நடக்கவுள்ளது.

இந்நிலையில் இந்த மகஜரில் தமிழ் மக்களுடைய நலனசார்ந்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் எடுக்க வேண்டிய நடவடிக்கை களை கோரிக்கையாக உள்ளடக்கப்படவுள்ளது.

அத்துடன், மகஜர் தயாரிக்கப்பட்டு முடிந்ததும் 9-ம் திகதி நடக்கவுள்ள மாகாண சபையின் அமர்வில் அங்கீகரித்து ஜெனிவா செல்லவுள்ள உறுப்பினர் ஒருவர் ஊடாகவும் நேரடியாகவும் கையளிக்க தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் கூறியுள்ளார். (செ-4)


CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress
(சி-7662)



100% புலமைப் பரிசில்

முற்றிலும் வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சிநெறி

மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா?

அல்லது

ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்கவேண்டுமா?

அரிய ஓர் சந்தர்ப்பம்!!

தகமை : க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருத்தல்
பயிற்சி நிலையம் : யாழ்ப்பாணம்
பயிற்சிக் காலம் : 6 மாதங்கள் (ஏப்ரல் 2017 தொடக்கம் ஒக்டோபர் 2017)
விண்ணப்பிக்கும் முறை : www.uki.life/apply
விண்ணப்ப இறுதித்திகதி : 18 March 2017

உள்ளடக்கம்
Software Development
Business English
Business Management
Personal Coaching

UKI மேலதிக தகவல்களுக்கு www.uki.life 0775694587 info@uki.life
(8013)



சுன்னாகத்தில் கடை வாடகைக்கு

சுன்னாகம் பஸ் நிலையத்திற்கு முன்பாக 3 மாடி கட்டடத்தின் கீழ்ப்பகுதி 33 அடி, 12 அடி விஸ்தீரணமான கடை வாடகைக்கு உண்டு. கடைக்கு முன்பாக 55 அடி, 25 அடி வாகன தரிப்பிடம் உள்ளது.

தொடர்பு: 076 749 0219
(சி-7667)



காணி விற்பனைக்கு

சங்கானை சந்தை சதுக்கத்தில் அமைந்துள்ள முன்னாள் தனியார் வைத்தியசாலை ஆதனம், கிணறு கட்டிடங்களுடன் விற்பனைக்குள்ளது. தயவு செய்து மேலதிக விபரங்களுக்கு நேரடியாக அணுகவும். தரகர்களை தவிர்க்கவும். உரிமையாளர்கள் சங்கானையில் இருப்பதால் உடன் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய எண்:- 0777748404, 0716810996
(8035)


## ஜனாதிபதி மார்...

கைக்கு நன்மை ஏற்படக்கூடிய சில முக்கிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட உள்ளதாக ரஷ்யாவிற்கான இலங்கை தூதுவர் டாக்டர் சமன் வீரசிங்க தகவல் தெரிவித்துள்ளார்.

சுகாதாரம், கல்வி மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகள் தொடர்பில் இருதரப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட உள்ளன.

அதிகளவில் தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக ரஷ்யா திகழ்கின்றது எனவும், ஏனைய சிறுபோக உற்பத்திகளும் ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ரஷ்ய விஜயத்தின் ஊடாக உச்ச அளவில் நன்மைகளை பெற்றுக்கொள்ளும் முனைப்புக்கள் எடுக்கப்பட்டு வருவதாக தூதுவர் சமன் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-ரி)

## யாழ்.பல்கலையி...

வுறுவதை அடுத்து புதிய துணை வேந்தரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலே இன்று இடம்பெறவுள்ளது.

இந்தப் பதவிக்காக யாழ் பல்கலைக்கழகத்தில் தற்போது பீடாதிபதிகளாக இருக்கும் பேராசிரியர் மிகுந்தன், பேராசிரியர் வேல்நம்பி, பேராசிரியர் சிறிசற்குணராஜா, வைத்திய கலாநிதி ரவிராஜ், பேராசிரியர் விக்னேஸ்வரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். (செ)


வீடு/கடை வாடகைக்கு தேவை


கல்வி நிலையம் ஒன்றுக்கு கணணி மற்றும் ஆங்கில வகுப்புக்கள் நடாத்துவதற்கு வீடு அல்லது கடை வாடகைக்குத் தேவைப்படுகிறது. யாழ்.நகருக்கு அருகாமையில் அல்லது யாழ். நகரின் பிரதான வீதி ஒன்றுக்கு அருகில் அமைந்திருப்பின் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- 0779713221
(7998)



KINGS ELECTRONICS (PVT) LTD
கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்

SPECIAL OFFERS
LED TV'S



| | |
|---|---|
| Samsung 32" | -29900 |
| Hisence 32" | -24500 |
| Sony 40" | -64900 |
| Hisence 24" | -17900 |
| Tcl 32" | -21900 |
| Panasonic 32" | -28500 |

WARRANTY 3 YEARS

அழகிய, அதிநவீன தரத்தோடு மின் உபகரணங்கள், தளபாடங்கள், மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்

INNOVEX WASHING MACHINE
FIVE YEARS WARRANTY
34500/=

SAMSUNG R19 REFRIGERATOR
34900/=
WARRANTY 10 YEARS

SONY DVD Player
ONE YEAR WARRANTY
PRICE RS 5,250/=

Furnitures
Toys
Electronics
Baby Care

Glass TV Stand
10,200/=

WEB: WWW.MYKINGS.lk
021-4546699
Facebook/kingsjaffna
12A, Point Petro Road, Jaffna
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
(சி-7663)



தேவை

யாழ். நகரில் பிரபல வியாபார நிறுவனத்துக்கு கணக்கு லிகிதர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அனுப்பவேண்டிய முகவரி.

விளம்பர இல : சி-7665
இல.3, 2-ம் ஒழுங்கை,
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

UK-550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500
021 221 5656

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட

அண்ணா அன் கோ
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்

எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்



V2 TRAVELS

தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி



அதிஸ்ட எண் - N/13JAN17/1371/152


சி.தேவராசா
கரணவாய், கரவெட்டி

இவர் 13-01-2017 அன்று ஜேர்மனிக்கு அனுப்பினார்

தங்கமும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல வாய்ப்புக்களுக்கு: 0768226240


# மரண அறிவித்தல்

## அமரர் வல்லிபுரம் கந்தசாமி



யாழ்ப்பாணம் கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, வட்டக்கச்சி இல.909, கட்சன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கந்தசாமி அவர்கள் நேற்று முன்தினம் (24.02.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சியாமளா (கிளிநொச்சி), காந்தறூபன் (கிளிநொச்சி), ஜெயரூபன் (தபாலக ஊழியர் - கிளிநொச்சி), மஞ்சுளா (கிளிநொச்சி), உதயரூபன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் - கிளிநொச்சி), விஜயரூபன் (முழுமடு), கோமளா (கனகராயன்குளம்), சேவரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வட மாகாண முதலமைச்சர் அலுவலகம்), பாலரூபன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வட்டக்கச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்சன் வீதி, வட்டக்கச்சி. தகவல்: குடும்பத்தினர் - 0777710660

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 106

வள்ளுவர் ஆண்டு 2048 | 26.02.2017 | தொலைபேசி : 021 222 3378





# சொந்தமண்ணை மீட்டெடுக்கும் நம் சொந்தங்கள்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்றனர்.

**ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்...** என்ற பாடலை வாத்தியார் வைத்திலிங்கம் பாடினார். **யாரிடம் செல்வோம் இறைவா...** மூப்பரின் தோத்திரத்தோடு இறைவணக்கம் முடிவுற்று அனைவரும் ஆலடியில் அமர்ந்தனர்.

**பண்டிதர்:** என்ன வாத்தியார் வழமையில தேவாரம் பாடுகிற நீங்கள் இன்றைக்கு இராமலிங்க வள்ளலாரின் திருப்பாடலைப் பாடியிருக்கிறியள். இதுக்குள்ள ஏதோ சூக்குமம் இருக்கு எண்டு தான் நினைக்கிறன்.

(பண்டிதரின் கேள்விக்கு வாத்தியார் சடுதியாகப் பதிலளிக்காமல் மௌனம் காத்தார். பின்னர் நிதர்னமாக, ஓம் பண்டிதர் எனக்கு இந்த நாட்டில ஒண்டும் பிடிக்கிறதா இல்லை என்றார்.

வாத்தியாரின் வெறுப்புக்கலந்த இந்த வார்த்தைகள் அவரின் மனதில் மிகப்பெரும் குறையொன்று இருப்பது தெரிந்தது. அதனை உணர்ந்து கொண்ட விதானையார் விசுவலிங்கம் திருவாய் மலர்ந்தார்.)

**விதானையார்:** வாத்தியார் எதையும் தெளிவாச் சொல்லுங்கோ. ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் என்று நீங்கள் பாடியதற்குள் ஏதோ உட்கருத்து இருக்கத்தான் செய்யுது. அதை ஆலடியில சொல்லுறதுதான் முறை.

**வாத்தியார்:** விதானையார் எனக்கு என்ர தனிப்பட்ட வாழ்க்கையில ஒரு குறையுமில்லை. என்ர கவலையெல்லாம் பொது வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டதுதான். அதிலும் எங்கட தமிழ் இனத்தை நினைத்தால்தான் வேதனை. எத்தனை இழப்புகள், எத்தனை பாடுகள் எல்லாம் வீணாய்ப் போயிடுமோ என்ற ஏக்கம்.

எங்கட தமிழினத்திற்கு இப்படியொரு நிலை ஏன் வரவேணும். எங்கட தாய்மார் இன்றுவரை கண்ணீரும் கம்பலையுமாக ஏன் அலைய வேணும். இந்தக் கேள்விகள் எனக்குள்ள மேலெழுந்து கொண்டேயிருக்குது.

**பண்டிதர்:** வாத்தியார் இதுதானே எங்களுக்கும் இருக்கிற கவலை. விடுதலைப்போராட்டத்தில தங்களைத் தியாகம் செய்த இளைஞர்கள் எத்தனை ஆயிரம். மண்மீட்புப் போருக்காக தங்களை ஆகுதி ஆக்கிய தமிழ் மக்கள் எத்தனை ஆயிரம்.

தமிழினம் வாழ வேணும் என்பதற்காக ஊரிழந்து, சொத்திழந்து, சொந்தம் இழந்து ஒட்டுமொத்தத்தில எல்லாம் இழந்தவர்கள் வேதனையில வாட, சுகபோக சீவியம் நடத்தியவர்கள்தான் இப்ப எங்கட அரசியல் தலைமையாம்.

**கங்காணி:** நாங்கள் தானே வாக்களித்து அவையள பாராளுமன்றத்திற்கு அனுப்பினனாங்கள்.

**மூப்பர்:** விடுதலைப் புலிகளால பாவ மன்னிப்புக் கொடுக்கப்பட்டு ஞானஸ்தானம் வழங்கப்பட்ட அமைப்புத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று நம்பினம். விடுதலைப்புலிகளின்ர கொள்கைகளை அவர்களும் அரசியல் வழியில் தொடருவினம் என்று நினைத்து வாக்களித்தம். எங்கட வாக்குகளைப் பெற்று எங்களுக்கே துரோகம் செய்வினம் எண்டு நாங்கள் என்ன கனவோ கண்டனாங்கள்.

**சாத்திரியார்:** கனவு காணத்தேவையில்லை. தேர்தலில போட்டியிடுகிறவர் எப்படிப்பட்டவர்கள் என்பதை நிதானமாகச் சிந்திக்க வேணும். விடுதலைப்புலிகள் இருந்திருந்தால் அவர்கள் தங்களால் நியமிக்கப்பட்டவர்களின்ர செயற்பாட்டைக் கண்காணித்திருப்பினம்.

அவையள் இல்லாத போது நாங்கள்தானே அவர்களைக் கண்காணிக்க வேணும். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று ஆராயவேணும். இதைவிட்டிட்டு எடுத்த எடுப்பில வாக்களித்து விட்டு இப்ப என்ன நடக்குது என்பது தெரியும் தானே!

**விதானையார்:** தேர்தல் காலத்தில விடுதலைப் புலிகளின்ர நாமத்தை முப்பொழுதும் உச்சரித்தவியள் இப்ப, நல்லாட்சியினர் விடுதலைப்புலிகள் போல செயற்படக்கூடாது எண்டு சொல்லுகினம் எண்டால் நிலைமை எப்படி எண்டு பாருங்களன்.

**பண்டிதர்:** விடுதலைப் புலிகளுக்கு எதிராக சம்பந்தனார் எவ்வளவுதான் கடுமையாகப் பேசினாலும் அது எங்கட தமிழ் மக்களுக்குத் தெரியவராது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

**கங்காணி:** விடுதலைப் புலிகளை மட்டுமல்ல கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தையுமல்லோ அவர் கடுமையாகச் சாடுகிறார்.

**விதானையார்:** தமிழினத்திற்காகக் குரல் கொடுத்ததால கஜேந்திரகுமாரின்ர தந்தை குமார் பொன்னம்பலம் துப்பாக்கி ரவைகளைத் தன் நெஞ்சில் தாங்கிக் கொண்டு உயிர் துறந்தவர். குமார் பொன்னம்பலத்தின் தமிழ்ப்பற்றை விடுதலைப் புலிகளும் போற்றி மாமனிதர் பட்டமும் வழங்கி கௌரவித்தவியள்.

இப்ப சம்பந்தனார் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை பாராளுமன்றத்தில வைத்து விமர்சிக்கிறார். பாராளுமன்றத்தில பேசுவதற்கு அவருக்கு வேறு ஒண்டும் கிடைக்கல்லப்போல.

**மூப்பர்:** பகிரங்க விவாதத்திற்கு வரவேணும் எண்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சம்பந்தமானவருக்கு அழைப்பு விடுத்தவரல்லோ. அதற்கேனும் பதில் சொன்னவரோ.


**பண்டிதர்:** பகிரங்க விவாதத்திற்கு அவையள் வராயினம். அவையளைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழரசுக் கட்சி- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எண்டால் எங்கட தமிழ்ச்சனம் வாக்களிக்கும்தானே!

பிறகென்ன பகிரங்க விவாதம். இதெல்லாம் தேவையற்ற வேலை எண்டு நினைப்பினம்.

**வாத்தியார்:** இதுதான் நான் ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேணும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் என்று பாடினனான். எங்களுக்கு ஒரு கதை, அரசுக்கு ஒரு கதை எண்டால் தமிழினம் தழைக்குமோ.

வாத்தியார் வேதனையோடு கேட்க மாற்று அரசியல் தலைமை சிந்தியாத தமிழினமே உம் பிரச்சினை தீருமா என்ன? என்று கேள்வி கேட்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



## நேரடி விவாதத்திற்கு சம்பந்தர் தயாராமோ?

# வாழ்விடத்தை மீட்டெடுக்கும் வலிமைமிகு மக்கள் போராட்டம்

தமிழ்மக்களின் பிரச்சினைக்கு இன்றுவரை தீர்வு காணப்படவில்லை. தீர்வு காணுகின்ற நினைப்பும் நல்லாட்சியிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தும் நல்லாட்சியைக் காப்பாற்றுவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மிகவும் உறுதியாக இருக்கிறது.

நல்லாட்சியைக் காப்பாற்றுவதன் ஊடாக தமிழ் மக்கள் உரிமைகளைப் பெற்றுவிட முடியும் என்ற நோக்கம் கூட்டமைப்பிடம் இருக்கிறதா? என்றால் அதுவும் இல்லை.

அப்படியானால் நல்லாட்சியைக் காப்பாற்றுவதன் தேவை என்ன என்ற கேள்வி எழும். இந்தக் கேள்விக்கு விடை தேடினால் கிடைப்பது தங்கள் பதவியைத் தக்க வைப்பது என்பதாகவே இருக்கும்.

அதாவது எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தக்க வைப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லாட்சிக்கு முண்டு கொடுக்கிறது. இது இந்தப் பக்கம் என்றால் அரச பக்கத்தில் சம்பந்தர் போன்ற எதிர்க்கட்சித் தலைவரை இலங்கை ஆட்சியாளர்கள் எந்தக் காலத்திலும் சந்தித்திருக்கமாட்டார் என்று கூறலாம்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியில் இருக்கும் ஒருவர் ஆளுங்கட்சியின் விசுவாசியாக இருக்கிறார் என்றால் அத்தகையவரை இந்த உலகம் எந்தக் காலத்திலும் கண்டிருக்க முடியாது என்பதே உண்மை.

ஆக, இப்போது இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர்; தான் சார்ந்த இனத்திற்கோ அல்லது ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கோ பொருத்தமானவர் என்று கூற முடியாதுள்ளது.

மாறாக ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் செய்த பூர்வ புண்ணிய பயனாக அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் கிடைத்துள்ளார். எனவே நல்லாட்சியின் ஆயுள் பலமடைந்துள்ளது என்று சொல்ல முடியும்.

இவை ஒரு புறம் இருக்க கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பரவிப்பாஞ்சானுக்கு அந்த ஊர்மக்கள் சென்று பார்வையிடுவதற்கும் குடியிருப்பதற்குமான அனுமதியை இராணுவம் வழங்கியுள்ளது.




தமது சொந்த இடங்களில் குடியிருப்பதற்கு அனுமதிக்கவேண்டும் என்று பரவிப்பாஞ்சான் மக்கள் போராட்டம் நடத்தியதன் காரணமாக அந்த மக்கள் தங்கள் சொந்த மண்ணை மீட்டுள்ளனர்.

இதில் ஒருபுறம் சாதனையும் மறுபுறம் வேதனையும் இருப்பதைக் காண முடியும். தமது தண்ணை மீட்டெடுப்பது என்ற மன உறுதியோடு போராடி தங்கள் சொந்த நிலத்தை படையினரிடம் இருந்து மீட்டதென்பது சாதனை. அதேநேரம் தமிழ்மக்கள் வாக்களித்து தங்களின் பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்திலும் சர்வதேசத்திடமும் கதைப்பார்கள் என்று நம்பிய தமிழ் அரசியல் தலைமை கேவலம் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக எதுவும் பேசாமல் கொழும்பைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் போது தமிழ் மக்கள் உணவொழித்து, பசியிருந்து உறக்கமின்றி பகலிரவாக போராடி தங்கள் சொந்த நிலத்தை மீட்பதைப் பார்க்கும்போது இதயம் நெகிழ்ந்து போகிறது.

அட ஒரு பெரும் தமிழ்த் தலைமைக்குக் கீழிருந்த மக்கள் இன்று நிர்க்கதியாகியிருக்கின்றனரே என்பது வேதனை.

யுத்தத்தில் எல்லாம் இழந்த போதிலும் அச்சமின்றி தங்கள் நிலத்தை மீட்பதற்காக அகிம்சை வழியில் நின்று போராட்டம் நடத்தி அதில் வெற்றி காண்பதென்பது மகத்தான சாதனை.

## தமிழ் மக்களை ஒன்றிணைப்பது தமிழ்மக்கள் பேரவையின் கடமை



இவ்வாறு சாதனையும் வேதனையும் என்ற அட்டவணையை தயாரிக்க முடியும். இதை நாம் கூறும் போது கேப்பாப்பிலவு மக்களின் தொடர் போராட்டமே சொந்த மண்ணை மீட்டெடுத்தல் என்ற போராட்டத்திற்கு வழிவகுத்ததெனலாம்.

கேப்பாப்பிலவு மக்களின் உரிமைக்கான போராட்டம் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்மக்களின் நிலங்களின் விடுவிப் புக்கு நிச்சயம் வலுச்சேர்க்கும் என்று கூறுவது சாலப் பொருத்துடையது. எனினும் தமிழ் மக்களின் நிலமீட்பு போராட்டத்தில் தமிழ் அரசியல் தலைமையின் பங்கு எதுவுமில்லை என்பதே உண்மை.

இப்போதைக்கு அந்த உண்மைகள் பெரிது படாமல் போகலாம். ஆனால் அடுத்த தேர்தலின்போது மக்களைத் தேடிச் செல்வதென்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைக்கு மிகப் பெரும் சவாலாக இருக்கு மென்பது மறுக்கமுடியாத உண்மை.

இது ஒருபுறமிருக்க தமிழ்மக்களின் நியாயபூர்வமான போராட்டத்திற்கு தமிழ் மக்கள் பேரவையின் எழுச்சிப் பேரணிகள் ஊக்கசக்தியாக இருந்தன என்பது ஏற்புடையதே. தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கத்தின் உதிப்பானது, தமிழரசியல் தலைமை செய்யும் என்பதை நம்பியிருந்து காலம் போக்குவதை விடுத்து எங்கள் உரிமைக்காக நாங்கள் குரல் கொடுப்போம்; எங்களுக்காக இன்னொருவரை நம்புவதை விட எங்களை நாங்கள் நம்புவோம் என்ற நம்பிக்கையை தமிழ்மக்களிடம் ஏற்படுத்திய ஒரு பலமான மக்கள் இயக்கமாக தமிழ் மக்கள் பேரவையைப் பார்க்க முடியும்.

தமிழ் மக்கள் பேரவை வடக்கிலும் கிழக்கிலும் நடத்திய எழுக தமிழ் எழுச்சிப் பேரணியின் வெற்றி என்பது தமிழ் மக்களுக்கான ஒரு பலமான சக்தியாக மாறியுள்ளது. இதனால்தான் தமிழ் மக்கள் பேரவையின் எழுச்சி தமிழின விரோத சக்திகளுக்கு குழப்பத்தைக் கொடுத்துள்ளது.

எது எவ்வாறாயினும் தமிழ்மக்களின் நியாயபூர்வமான போராட்டங்களுக்கு ஒட்டுமொத்தத் தமிழ் மக்களதும் பூரண ஆதரவைத் திரட்டி இலக்கையடையச் செய்வது தமிழ்மக்கள் பேரவையின் தனித்துவமான பணியாக இருக்கவேண்டும்.

விதுரன்




# கூட்டுயர்வே நாட்டுயர்வு

அரச்சலூர் என்னும் கிராமம் ஒன்று இருந்தது.அந்தக் கிராமத்தில் ஏராளமான வீடுகள் இருந்தன.

அங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வந்தனர்.

இருந்தாலும் அந்த ஊரில்.ஆறுகளோ குட்டைகளோ இல்லை. கிணற்றைத் தோண்டித்தான் நீர் எடுத்து குடி நீருக்கும். விவசாயத்திற்கும் பயன்படுத்துவர். வசதியற்ற விவசாயிகள் மழை நீரை நம்பியே இருந்தனர்.

மழை பெய்யத் தவறி விட்டால் அந்தப் போகம் அவர்களுக்கு விளையாமல் போய் விடும். இதனால் வறுமை அவர்களை வந்து சூழ்ந்து கொள்ளும்.

அந்தக் கிராமத்தில் கஞ்சப்பன் என்னும் ஏழை விவசாயி ஒருவன் இருந்தான். அவன் பொது நலனைப் பற்றியே சிந்திப்பவன்.

அவனும் மழையை நம்பியே விவசாயம் செய்து வந்தான்.அவனுக்கு ஏழை விவசாயிகள் அனைவருக்கும் பொதுவான கிணறு தோண்டி, ஏழை விவசாயிகள் அனைவரும் விவசாயம் செய்ய வேண்டும் என்று ஆசை. ஆசை இருந்து என்ன பயன். மற்ற விவசாயிகளும் இதற்கு ஒத்துழைக்க வேண்டுமே? அவர்களைக் குறை கூறவும் முடியாது, காரணம் அன்றன்று ஏதோவொரு வேலைக்கு போனால்தான் அன்றாடம் சாப்பாட்டுக்காவது வழி பிறக்கும். அப்படி இருக்கையில் கஞ்சப்பனைப் போல அவர்களுக்கு அதைப்பற்றி சிந்திக்க நேரமுமில்லை. வழியுமில்லை. கஞ்சப்பனுக்கோ அது கனவாகவே இருந்தது.

இப்படி இருக்கையில் அந்த ஊருக்கு துறவி ஒருவர் வந்தார். அவர் போகும் இடமெல்லாம் மனிதன் எப்படி வாழவேண்டும் என்ற உபதேசம் மட்டுமே செய்து வந்தார். யார் எந்த எளிய உணவைக் கொடுத்தாலும் முகம் சுழிக்காமல் உண்டு உறங்குவார். அவரைக் காண வசதியானவர்கள் உயரிய பொருட்களைக் கொண்டு வந்தாலும் கையால் தொட்டு ஆசீர்வாதம் செய்து விட்டு அதை ஏழைகளுக்கு கொடுத்து விடுவார்.



ஒருநாள் அவர் தியானத்தில் இருந்த பொழுது கஞ்சப்பன் அவரை காண்பதற்காக வந்தான். அவர் தியானத்தில் இருப்பதால், அவர் கண் விழிக்கும் வரை காத்திருந்தான். கண் விழித்த துறவி கஞ்சப்பனைப் பார்த்து என்ன வேண்டும் என்று கேட்டார். ஐயா எங்களைப்போல உள்ள விவசாயிகள் மழையை மட்டும் நம்பாமல் விவசாயம் செய்ய ஒரு கிணறு வேண்டும் என்று அவனது ஆசையை அவரிடம் சொன்னான். அவர் புன்னகையுடன் உன் ஒருவனால் கிணறு தோண்ட முடியுமா? என்று கேட்டார்.

முடியும் ஐயா, ஆனால் அதற்கு என் உழைப்பை மட்டுமே கொடுக்க முடியும். அதனால் நீண்ட காலம் ஆகி விடும் என்று சொல்ல, உன் தன்னம்பிக்கையை பாராட்டுகிறேன் என்று சொன்னவர் உன் நிலத்துக்கு அருகில் பொதுவான இடம் உள்ளதா? என்று கேட்டார். உள்ளது ஐயா என்றவனிடம், வா வந்து காட்டு என்று சொல்லி அவனுடன் கிளம்பி விட்டார்.

கஞ்சப்பனுடன் துறவி நடந்து செல்வதைப் பார்த்தவர்கள் இவர்கள் எங்கு செல்கிறார்கள் என்று ஆவலுடன் அவர்களை பின் தொடர்ந்தனர். கஞ்சப்பன், தன் நிலத்துக்கும், சுற்றியுள்ளவர்கள் நிலத்துக்கும் பொதுவான இடத்தை காண்பித்தான். துறவி அந்த இடத்தை பார்வையிட்டு, அங்கு கிணறு இருந்தால் அதை சுற்றியுள்ள இடங்களுக்கு நீர் வசதி கிடைக்குமா? என்று கணக்கிட்டுப் பார்த்தார். கிடைக்கும் என்று முடிவு செய்தவர் அந்தப் பொதுவான இடத்தில் நின்று சில நிமிடங்கள் கண்ணை மூடி மந்திரங்கள் சொன்னார்.

இவர் என்ன செய்கிறார் என்று ஊர் மக்கள் ஆவலுடன் பார்த்தனர். அதற்குள் அவரைச் சுற்றி ஊர் மக்கள் திரண்டு வேடிக்கை பார்த்தனர்.

இந்த இடம் யாருக்குச் சொந்தம் என்று உரத்த குரலில் கேட்டார். அனைவரும் அமைதியாக நின்றனர். ஊர்ப் பெரிய மனிதர் முன்னால் வந்து ஐயா இது ஊர் பொதுவான இடம் என்று சொன்னார். இந்த இடத்தில் புதையல் இருப்பது என் கண்களுக்கு தெரிகிறது. ஆனால் அது அடி ஆழத்தில் இருக்கிறது. என்று சொன்னவுடன் "புதையலா" என்று ஊர் மக்கள் ஆவலுடன் கேட்டனர். ஆம் ஆனால் இந்த புதையலை எடுத்தால் இந்த ஊருக்கே பொதுவாகிவிடும்.

ஐயா நாங்கள் செலவு செய்து எடுக்கிறோம் என்று வந்த வசதியான விவசாயிகளை இவர் தடுத்து "அந்தப் புதையல் எடுக்க எல்லாரும் பாடுபட்டால்தான் கிடைப்பேன் என்கிறது என்றார்.

அதற்கு என்ன செய்வது என்று ஊர் மக்கள் திகைத்து நின்றனர்.

துறவி எல்லோரையும் பார்த்து சொன்னார்; ஒரு வழி இருக்கிறது. இந்த ஊர்க்காரர்கள் குடும்பத்திற்கு ஒருவர் தினமும் ஒரு மணி நேரம் இந்தப் புதையல் எடுப்பதற்கு உதவ வேண்டும்.

ஏழை விவசாயிகள் மட்டும் தினமும் மூன்று மணி நேரம் இந்தப் புதையலை எடுக்க உதவ வேண்டும்.

அவர்களுக்கு மட்டும் ஏன் மூன்று மணி நேரம் என்று கேட்டார்கள் ஊர் மக்கள். அவர்கள் இந்த நிலத்திற்கு அருகில் இருப்பதாலும், காலையில் மற்ற தோட்டங்களுக்கு வேலைக்கு சென்று விடுவதாலும். ஒரு நாளில் எப்பொழுது வேண்டுமானாலும் வேலை செய்யலாம் என்ற அடிப்படையில் அவர்களுக்கு மூன்று மணி நேரம் ஒதுக்கி உள்ளேன். வசதி உள்ளவர்கள் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் உதவி செய்தால் போதும்.

ஐயா கிடைக்கும் புதையல் பொதுதானே என்று ஊர் மக்களில் சிலர் கேட்டனர். துறவி சிரித்துக்கொண்டு பொதுதான், ஆனால் இவர்கள் மூன்று மணி நேரம் உழைப்பதால், கிடைக்கும் புதையலில் நான்கில் இரு பங்கை இவர்களுக்கு கொடுத்து விடலாம், மற்ற இரண்டு பங்கை ஊர் மக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம், என்ன சொல்கிறீர்கள்.

துறவியின் பேச்சுக்கு ஊர் மக்கள் எதுவும் சொல்லாமல் மௌனமாக நிற்க, என்ன சொல்கிறீர்கள்? இவர்களை வேலை ஆரம்பிக்க சொல்லி விடலாமா?

நீங்கள் சரி என்றால் தான் இந்த புதையலே இங்குள்ள மக்களுக்கு கிடைக்கும். சொல்லி விட்டு அவர்கள் முகத்தை பார்க்க அவர்கள் சரி...சரி...என்று சொன்னார்கள்.

நான் இன்னும் நான்கு மாதங்கள் கழித்து இங்கு வந்து உங்கள் புதையலை பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு கிளம்பினார்.

கஞ்சப்பனை சுற்றியுள்ள அவனது பக்கத்து நிலத்துக் காரர்களும், வேலைக்கு சென்று வந்தது போக மற்ற நேரங்களில் புதையல் கிடைக்கும் என்று வேலை செய்தனர்.

கஞ்சப்பனுக்கு துறவி நல்லதுக்குத்தான் சொல்லியிருப்பார் என்ற நம்பிக்கையில் இரவும் பகலும் புதையல் எடுக்க வேலை செய்தான்.துறவி சொன்னது போல ஊரில் உள்ள அனைத்து குடும்பத்தில் இருந்து ஒருவர் தினமும் ஒரு மணி நேரம் இந்தப் புதையல் எடுப்பதற்கு உதவி புரிந்தனர்.

நான்கு மாதம் கழித்து அங்கு வந்த துறவியிடம் ஐயா நீங்கள் சொன்ன புதையல் கிடைக்கவேயில்லை. அதற்கு மேல் எங்களால் தோண்டி பார்க்க முடியவில்லை, காரணம் அந்தக் குழிக்குள் தண்ணீர் நிறைந்து விட்டது.அதை தினமும் கஞ்சப்பன் மற்றும் சுற்றுப்புறமுள்ள நிலங்களுக்கு பாய்ச்சியும் பார்த்தாகி விட்டது. தண்ணீர் மட்டும் குறையவே இல்லை. இனி எப்படி புதையலை எடுப்பது என்று கேட்டனர்.

துறவி சிரித்துக்கொண்டே பரவாயில்லை, அந்தப்புதையல் கிடைக்கவில்லை என்றாலும் இந்த தண்ணீர் உங்களுக்கு கிடைத்ததே என்று சந்தோசப்படுங்கள்.

இந்த குழியைச் சுற்றியுள்ள நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சியும் மிச்சம் இருக்கிறதா? ஆம் ஐயா என்று சொன்ன மக்களிடம் இனிமேல் அதை ஊர் மக்கள் குடி நீராகவும் பயன்படுத்தலாமே? என்று கேட்ட துறவியிடம் இவர்கள் ஆமாம் பயன்படுத்தலாம் என்று சம்மதம் தெரிவித்தனர்.

காலப்போக்கில் இந்த தண்ணீர்தான் துறவி சொன்ன புதையல் என்று ஊர் மக்கள் புரிந்து கொண்டனர்.

கஞ்சப்பனும், அவன் அருகில் இருந்த ஏழை விவசாயிகளும், துறவி சொன்ன "நாளில் இரு பங்கு தண்ணீரை" மட்டும் விவசாயத்திற்கு எடுத்துக் கொண்டு மற்ற நீரை ஊரின் குடிநீர் தேவைக்கு கொடுத்து மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

**என்ன குட்டீஸ் பார்த்தீர்களா? ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை இக்கதை உங்களுக்கு உணர்த்தியிருக்குமே...!**








## கோப்பாப்பிலவு மக்களுக்கு நீதி கிடைக்குமா?

## இலங்கை கிரிகெட் அணியில் தமிழ் வீரர்கள் இணைக்கப்படாதது ஏன்?

## அம்மா- சின்னம்மா, பன்னீர்-எடப்பாடி எதுகை மோனை எப்படியிருக்கிறது?

**பகீர்துசன் — தெல்லிப்பழை**

விபத்தைத் தடுக்க முடியாதா?

டிரைவர் என்பதை கொஞ்சம் அழுத்தி உச்சரித்துப் பாருங்கள்.இறைவர் என்று பொருள் படும். பெரும்பாலான சாரதிகள் இதைச் சிந்திப்பதில்லை. போட்டி போட்டு வேகமாக செல்லும் ஒருவரின் பின் சாதாரண வேகத்தில் சென்று பாருங்கள். அதிவேகமாக செல்பவருக்கும் சாதாரண வேகத்தில் செல்பவருக்கும் அளவில் சில நிமிட வித்தியாசங்களே இருக்கும். இதைப் புரியாமல், இறைவர் என்கின்ற வார்த்தையின் தத்துவத்தை உணராமல் பல உயிர்கள் இறப்பதற்கு காரணமாக இருக்கப்போகிறீர்களா என்பதை இறைவர்களே சிந்தியுங்கள், செயற்படுங்கள்.

**புஸ்பன் — வவுனியா**

எப்படி இருக்கிறது எம் தமிழ் தலைமையின் நிலை?

எனக்குத் தெரிந்தவர் ஒருவர் இருக்கிறார். போதை போட்டு விட்டால் மற்றவர்களுடன் வம்பிழுப்பதே வேலை. யாரும் வீடு தேடி வந்தால் வீட்டுக்குள் போய் ஒளிந்து விடுவார். அவர்கள் சென்றதும் வெளியே வந்து பெரிய சத்தம் வைப்பார். நல்லவேளை என்னை மனைவி அறையில் வைத்து பூட்டி விட்டாள் இல்லையேல் அவர்களை இங்கேயே வைத்துப் பிளந்திருப்பேன் என வீரம் பேசுவார். அது போல் தானையா இதுவும் புலி இருக்கும் வரை புலியைப் புகழ்ந்து புலியின் பாதைதான் நாம் என வீர வசனம் பேசி விசுவாசம் போல் நடித்துவிட்டு இப்போ புலி இல்லை என்றதும் புலியை விமர்சிக்கிறார்கள். பிரபாகரா இதற்காகவாவது நீங்கள் ஒருமுறை வந்து போவீர்களா... பிளீஸ்.

**சயன் — யாழ்ப்பாணம்**

உங்களுக்கும் மகிந்தவுக்கும் தொடர்பாமே?

நானொன்றும் வாசுதேவ நாணயக்காரவோ விமல் வீரவன்சவோ இல்லை. மகா பாரதக் கதையை முழுமுதல் கடவுளைக் கொண்டு எழுதுவித்த வியாசர்.

**ருக்மணி — அரியாலை**

இராவணன் நல்லவனா? கெட்டவனா?

ஒருவன் ஆயிரம்தான் நல்லவனாக இருந்தாலும் பிறர் மனைவி மீது மனதளவிலேனும் ஆசை கொண்டால் அவர் மனிதர் என்கிற வரைவிலக்கணத்திலிருந்து விலகி விடுகிறார். யார் பிழை செய்தாலும் குற்றம் குற்றமே.

**கலர் — மானிப்பாய்**

அம்மா-சின்னம்மா, பன்னீர்-எடப்பாடி எதுகை மோனை எப்படியிருக்கிறது?

தமிழ்நாட்டு அரசியல் சட்டசபையில் இப்போது நடைபெற்ற நிகழ்வுகளின் போது கலைஞர் கருணாநிதி இருந்திருந்தால் அழகு தமிழ், எதுகை மோனை, நக்கல், நையாண்டி என சட்டசபையே கதிகலங்கியிருக்கும்.

**நித்திலன் — பண்டத்தரிப்பு**

இலங்கைக் கல்வித் திட்டம் பற்றி?

வெளிநாடுகளில் சிறுவயதிலேயே ஒரு பிள்ளை என்ன துறையில் ஆர்வமாக இருக்கிறது என்பதை கண்டுபிடித்து அந்தத்துறையில் அவர்களை வளர்த்து விடுகிறார்கள். அதனால் அந்தத் துறையில் அவர்களால் சாதனை படைக்க முடிகிறது. ஆனால் இங்கோ பெற்றோரின் கௌரவத்திற்காக பிள்ளைகள் பலிக்கடா ஆக்கப்படுகிறார்கள்.

பிள்ளைக்கு கலைத்துறையில் ஆர்வம் அதிகமாக இருக்கும். ஆனால் பெற்றோர் உயிரியல், கணிதத்துறைகளை தேர்ந்தெடுக்க அதில் ஆர்வமின்றி பிள்ளைகள் கற்பதால் அதிசுவடிய திறனைப் பெறாமல் போகின்றது. இவை ஏன் பல்கலைக்கழகத்தில் நடனத்துறையில் பட்டம் முடித்தவர்கள் பலர் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் இருக்கிறார்கள். என்ன கொடுமை முறைமையோ...!

குறுந்தகவல்
(SMS)
உங்கள் கேள்விகளை
அனுப்புங்கள்
021 567 1532

**தம்பி — கலட்டி**

வியாசர் அழகென்பது எதுவோ?

பிழை தான், ஆனால் ரசிக்கின்றோம். வலது கால் செருப்பை இடது காலிலும் இடது கால் செருப்பை வலது காலிலும் மாட்டி தான் பெரிய மனிதர் என வலம்வரும் குழந்தைகளைப் பார்த்து.

**கமல் — மிருசுவில்**

அரசியல்வாதி ஆவதற்கு என்ன தகுதி வேண்டும்.

சுவனி வாழ்ந்தால் கோடி நன்மை.

**நிவேத் — உடுப்பிட்டி**

தந்தையின் அன்பு எப்படிப்பட்டது?

முட்கள் நிறைந்த பலாப்பழத்தை பிரிந்தால் இனிமையான சுளை நிறைந்த பழம் வரும் அதுபோல்தான்.



**மதீஸ் — நல்லூர்**

அதிகாரத்தைக் கையிலெடுத்து அட்டகாசம் செய்பவர்களைப் பற்றி?

அவர்களுக்கு ஒரு பாழடைந்த கோட்டையை காட்டுங்கள். ஒரு காலத்தில் அதிகாரத்தின் உச்சம் நினைத்தனை முடிக்கும் அதிகாரம் என அத்தனை இருந்தும் இன்று அனைத்தும் இழந்து பாழடைந்து பிறர் பிரவேசிக்கவே பயங்கொள்ளும் இடமாக மாறி இருக்கிறது. இதை புரிந்து கொண்டால் எல்லாம் சரி.

**காயு — பருத்தித்துறை**

கோப்பாப்பிலவு மக்களுக்கு நீதி கிடைக்குமா?

நீதிக்கான போராட்டம் ஒருநாளும் தோற்றதாக வரலாறு இல்லை. கோப்பாப்பிலவு மண் மீட்புக்கான இந்தப் போராட்டம் தமிழனின் தன்மானத்தை மீண்டும் நிரூபித்துள்ளது.

ஆனால் எம்முடன் இருந்த எம் ஓட்டுக்கள் மூலம் கதிரை பிடித்தவர்களின் பேச்சுக்களும் செயற்பாடுகளும் மக்களுக்கானதா என்ற கேள்வி ஒவ்வொரு தமிழன் நெஞ்சங்களிலும் எழ ஆரம்பித்து விட்டது. இந்த எழுச்சி நிச்சயம் ஒரு நல்ல மாற்றத்தைத் தரும் என்பதில் சந்தேகமில்லை என்பது மட்டும் தான் இப்போதைய தெம்பு.

**ஸ்ரீராம் — பருத்தித்துறை**

தமிழ்நாடு அரசியல் நிலை எப்படி இருக்கிறது?

எமது ஆட்சியாளர்கள் எம்மை காலத்திற்கு காலம் வதைத்து வஞ்சகம் செய்துவரும் வேளைகளில் பாரத ஆட்சியல்லோ ஆட்சி. ஜனநாயகத்தின் உச்சம் என சிந்தித்துப் பூரிப்படைந்ததுண்டு. ஆனால் அண்மைக் காலமாக தமிழ் நாடு சட்டசபை சர்சைகளைப் பார்க்கும் போது மனம் நொந்து செத்து போகிறது.

**சங்கர் — கொம்மாந்துறை**

இலங்கை கிரிக்கெட் அணியில் தமிழ் வீரர்கள் இணைக்கப்படாதது ஏன்?

முதலில் சில யதார்த்தங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். சர்வதேச கிரிகெட் முறையில் ஆடுகளம் ரேவ் என்கின்ற புற்றரை முறையில் விளையாடுவதே. ஆனால் வடக்கில் எமது மாணவர்கள் மற்றிங் என்கின்ற கயிற்றுப் பாயில்தான் விளையாடுகிறார்கள். இந்தக் கயிற்றுப் பாயில் விளையாடும் வீரர்கள் புற்றரை ஆடுகளங்களில் ஆடுவது சாதாரணமானதல்ல. முதலில் எமது பாடசாலைகளில் புற்றரை (ரேவ்) ஆடுகளங்களைத் தயார் செய்யுங்கள். அதில் எமது வீரர்களை திறம்பட பயிற்றுவியுங்கள். அதன்பின் எமது வீரர்களுக்கு இடம் கிடைக்கவில்லையென்றால் பார்த்துக் கொள்ளலாம்.

# கவிதைக் கலசம்



## வேண்டுதல்

சிதறிக்கிடந்த கைகளிலே
கழராத கௌரிக்காப்புகள்
கரம்பிடித்த செபமாலைகள்
காரணம் தெரியுமா கடவுளே
நாம் சிதறியும்
உன்னில் சிதறாத நம்பிக்கை
பிரதட்டை கோலத்தில்
பூமி பார்த்தும்
மேகம் பார்த்தும் கிடந்த
பிணவரிசைகள்
மரணத்திலும் மாறவில்லை
வேண்டுதல்கள்
ஒரு மிருகபலிக்கு
ஆயிரம் வரங்கள்
அன்று கொடுத்தீர்
இன்று அதிலுமுயர்
நரபலிகள் பலாயிரம்
தந்துவிட்டோம்
ஒரு வரம் மட்டும் கேட்கிறோம்
எம் சொந்த நிலத்தில்
நிம்மதியாய் வாழ

அச்சுவேலி முகுந்தன்

## கைக்குட்டை

தினம் அவள் கைகோர்த்து
அவள் வியர்வையில் குளித்து
அவள் கலங்கும் வேளையில்
கண்ணீர் ஏந்தி அவள்
உதட்டையும் தொட்டு
விளையாடுகிறேன்
நான் அவளின் காதலன்
என்று அவள் கணவனும்
அறிவான் இருந்தும்
தினமும் நடக்கிறது
எங்கள் கள்ளக் காதல்
இப்படிக்கு நான்
சாதாரண கைக்குட்டை

ஆனந்த் அபி
பருத்தித்துறை

## ஏக்கம்

காலங்கள் காற்றாய்
கடந்து போகின்றதே
ஞாலத்தார் வினாவுக்கு
விடை கேள்விக்குறியே
நாளும் சுமைகள்
தாங்காத தாங்கியாய்
பேயாய் அலைகிறார் மக்கள்
பேசியென்ன பயன்
பேறுகள் தான் இல்லையே
நோய் நொடியானால்
மாத்திரைகள் பதில் சொல்லும்
காயாய் தொங்குகின்ற தீர்வு
கனிவது தான் எப்போ?

மானந்தன்
அல்வாய்

இதோ இதுதான்
என் இனத்து வீரர்கள்
மண் மீட்புக்காய் மாண்ட இடம்
அவர் குருதி எங்கும் சிந்தி
உயிர் பெற்றுக் கிடக்கிறது புற்தரை

இதோ இந்த வீதிதான்
என் இனத்து வீரர்கள்
அணிவகுத்துச் சென்ற வீதி
மண்மீட்கும் கனவுகளுடன்
சிரித்தபடி கை அசைத்த நினைவுகள்
இன்றும் அழியாதிருக்கிறது

இதோ இந்த மரநிழலில்தான்
ஓடிவிளையாடி களைதீர
ஓய்வெடுத்து மகிழ்ந்திருந்தோம்

இதோ இந்த முள்வேலிதான்
என் இனம் முழுவதையும்
அகதியாக்கியது

இதோ இந்த இடந்தான்
அறவழிப்போர் ஆரம்பித்த இடம்
எத்தனை வஞ்சனைகள்
எத்தனை போலி வேசங்கள்
எத்தனை பொய் வார்த்தைகள்

அத்தனையும் உடைத்து
எம் சொந்த நிலம் செல்ல
திடம் கொண்ட இடம்

இதோ இதுதான் அது
எம் வீரர்கள் வா(வீ)ழ்ந்த இடம்

மாவை. நா.கஜேந்திரன்



## முட்கம்பி வேலிக்குள் எங்கள் நிலம்

முட்கம்பி வேலிக்குள்
எங்கள் நிலம்
முடங்கிப் போனதே
வாழ்வாதாரம்
வீடு கட்ட நிலமிருக்கு
விளையாட முற்றமிருக்கு
ஆனாலும் அது
வான் படையிடமிருக்கு...
பயிர்செய்ய
விவசாய நிலமிருக்கு
படையினரிடம்
பறிகொடுத்துவிட்டு
பசியால் வாடுகிறோம் நாம்!
நிரந்தரமாய் நிலமிருக்க
நீரோடும் வாய்க்காலில்
நாமெதற்கு
உறங்க வேண்டும்
நாடெங்கும் நல்லாட்சி
எங்களுக்கு மட்டும்
என்ன பொல்லாட்சியா?
முட்கம்பி வேலியறுத்து
முழுவதுமாக
தந்துவிடு
எங்கள் நிலத்தை

எளிமைக்கவி றொபின்
புன்னாலைக்கட்டுவன்

# மௌனத்தின் தேடல்– 342

## அடக்கு முறை வேண்டாம்

துள்ளி ஓடித் திரியும்
பள்ளிப் பருவமதில்
முட்கம்பி வேலிக்குள்
முடங்கிக் கிடக்க வைத்து
எமது உரிமைகளையும்
காணிகளையும் அபகரித்து
கல்வியைத் தொடர விடாது
கடுங்காவல் போட்டுள்ளார்கள்
கல்வியைத் தடுக்கலாம்
நாம் படும்
இன்னல்களால்
உள்ளத்தில் மூண்டெழும்
உணர்ச்சியைத் தீயை
அணைக்க முடியாது
தடைகளைத் தகர்த்தெறிந்து
வெற்றிச் சிகரத்தில் துணிவோடு
ஏறிச்செல்வர் அந்நாள்
வெற்றித் திருநாள்

துரை, தென்மட்டுவில்

## தடைகளை தகர்த்தெறி

சின்னஞ் சிறுசுகளே
முள்வேலிகள் உங்கள்
கனவுகளுக்கு
முட்களானதா?
சிறகு விரித்து பறக்க
ஆசைப்படுகிறீர்கள்
விடாமுயற்சியுடன் போராடுங்கள்
தடைகளை தகர்த்தெறியுங்கள்
உங்கள் கனவுகள் மெய்ப்படும்

சி.பிரியங்கா
மட்டுவில் தெற்கு

## தாக்கம் ஏன்?

முட்டி மோதி
விளையாடும் பருவம்
முச்சுவிட முடியாமல்
தவிக்கின்ற சோகம்
முட்கம்பி வேலிக்குள்
முடக்கப்பட்டதால்
மூவர் முகத்திலும்
தெரியுது வாட்டம்
தடையை உடைத்து
வெளியே வருவதில்
என்ன தயக்கம்
துப்பாக்கி குண்டுகள்
பாயுமென்ற அச்சமோ

யோ.நாண்டீபன், மானிப்பாய்

## காலப்போர்

காலப்போர் கடந்தும்
வாழ்க்கைப் போர்
கடக்கவில்லையே
இவ் அவல நிலை தீரும்
என்று நினைக்க அடுத்த போர்
தொடங்கியதே– எம்மண்
என்று எத்தனை போர்
நடந்தாலும் எங்களது சிறுபான்மை
மக்களது துயரம் தீரவில்லையே
இதை தீர்க்கும் வழி எதுவென்று
எம் அன்பர்களே கூறுங்கள்


ந.வேணுஜன்
புனித ஹென்றியரசர் கல்லூரி

## அடேய் மனிதா!

அடேய் மனிதா!
தெய்வ மறு உருவங்களை
நீ முள்வேலிக்குள்
முடங்கச் செய்கின்றாய்
இதனுடைய பொருள்
உன் சந்ததி முறிவுக்கு
வித்திட்டுச் செல்லும்
சிறார்கள் சிறகடித்து
பறக்கும் வயதுதனில்
சிறகொடிந்து அவர்களை
ஒதுக்கி ஆண்டுள்ளாய்
மூடா உன் செயல் கண்டு
நரகமே திகைத்தாடுகிறது
எதிர்கால தலைவர்களை
நன்றுருவாக்கி
முன்செல்ல விடுவாயாக

இ.தனஞ்ஜயன், யா/உ.அ.மி.க

# மௌனத்தின் தேடல் –343



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 01.03.2017ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

## சீன எழுத்துருக்கள்



எழுத்துகள் என்றால் என்ன? அவை சில அடையாளங்கள். ஒவ்வொரு அடையாளமும் ஓர் ஒலியைக் குறிக்கிறது. ஒரு வார்த்தையைப் பல ஒலிகளாக பிரித்து, ஒவ்வொரு ஒலிக்கும் ஓர் எழுத்தைப் பயன்படுத்துகிறோம். ஆகவே, மிகச்சில எழுத்துக்களிலேயே அனைத்தையும் எழுதிவிட முடிகிறது.

ஆங்கில எழுத்துக்கள் 24 மட்டுமே. ஆனால், சீன எழுத்துகள் ஒரு வார்த்தைக்கு ஓர் எழுத்து. ஆகவே, பல இலட்சம் எழுத்துகள் அந்த மொழியில் உள்ளன.

மரம் என்றால், மரத்தையே கோடுகளாக வரைந்துவிடுவார்கள். மனிதன் என்றால், மனிதனைப் போல ஒரு வடிவமே எழுத்தாக இருக்கும். மரத்தின் மேல் மனிதன் இருக்கிறான் என்றால், இரண்டையும் சேர்த்துவிடுவார்கள். அப்போது, ஒரு சொற்றொடரே ஒரு எழுத்தாக இருக்கும். கற்கால மனிதன் இப்படித்தான் அடையாளங்களை எழுத்துகளாக எழுதினான்.

பின்னர், ஒலிகளாக எழுதுவது எளிது என கண்டு கொண்டான். ஆனால், சீன மொழி அப்படி மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாமல் சித்திரங்களையே எழுத்துகளாகப் பயன்படுத்தியது.

மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகங்களில் கிடைத்த மண்பானைகளில் உள்ளவை ஒரு வகை சித்திர எழுத்துகள்தான். அவையெல்லாம் இன்று மறைந்து விட்டன.

சீன மொழியின் சித்திர எழுத்து முறையே கொரியா, ஜப்பான் ஆகிய மொழிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

மேலே உள்ள எழுத்துகளைப் பாருங்கள்... மனிதன் என்ற எழுத்து, ஒரு சீனப்படை வீரன் போல இருக்கிறது.

மரம் ஒரு தேவதாரு மரம் போலவே உள்ளது இல்லையா?

## அந்த்ரே ழாக் கார்னே (André-Jacques Garnerin)



நாம் இன்றும் பயன்படுத்தும் பரசூட்டைக் கண்டுபிடித்தவர், அந்த்ரே ழாக் கார்னே. பிரான்ஸில் 1769ஆம் ஆண்டு பிறந்தார். கார்னேவின் வாழ்க்கை, போருடன் பின்னிப் பிணைந்தது. 1792 இல் நடந்த பிரெஞ்சுப் புரட்சியில் பிரிட்டிஷ் படைகள் அவரைச் சிறைபிடித்தன. அப்போது அவருக்கு 23 வயது. மூன்று வருடங்கள் கைதியாக இருந்தார். அன்று சூடான காற்று நிறைத்த பைகளைப் பயன்படுத்தி வான ஊர்திகளை உருவாக்கும் முயற்சிகள் நிறைய நடந்தன. கார்னே புகழ்பெற்ற காற்றுப்பை நிபுணர்களிடம் உதவியாளராகச் சேர்ந்தார். காற்றுப்பைகளை வானத்தில் ஓட்டுபவராகப் பணியாற்றினார். அப்போதுதான் பரசூட்களை உருவாக்கும் எண்ணம் அவருக்கு வந்தது. முதலில் கம்பிகள் வைத்து குடைபோன்ற பரசூட்களை உருவாக்கினார். பின்னர் எந்தச் சட்டகமும் இல்லாமல் காற்றிலேயே விரியும் தோல் பைகளை வடிவமைத்தார். 1797 ஒக்டோபர் 22 ஆம் திகதி பாரிஸில் முதன்முதலாக பரசூட்டில் இருந்து குதித்தார். 3,200 அடி உயரத்தில் பறந்த ஒரு பலூனில் இருந்து அவர் கீழே பத்திரமாக வந்து சேர்ந்தார். கார்னேவைப் புகழ்ந்து நிறைய கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. 1823ஆம் ஆண்டு அவர் மறைந்தார். கிட்டத்தட்ட 80 ஆண்டுகள் கழித்து 1902ஆம் ஆண்டில், ரைட் சகோதரர்கள் உருவாக்கிய முதல் இயந்திர விமானம் பறக்கவிடப்பட்டது

## லாப்ரடார் ரெட்ரீவர்



நாய்களிலேயே புத்திசாலியானது லாப்ரடார் நாய்தான். 'ரெட்ரீவர்' என்றால், மீட்பவன் என்று அர்த்தம். ஆடு, மாடு மேய்ப்பவர்கள், தொலைந்துபோன ஆடு, மாடுகளை மீட்க இந்த நாயைப் பயன்படுத்துவார்கள். ஆயிரக்கணக்கான ஆடு, மாடுகளின் மணங்களை இது நினைவில் வைத்திருக்கும். வழிதவறி உறைபனியில் புதைந்துபோய்விட்டவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கவும் இந்த நாய்தான் பயன்படுத்தப்படும். பனிக்குள் புதைந்திருந்தாலும் கண்டுபிடித்துவிடும்.

மிகக்கூர்மையான மோப்பசக்தி உள்ள நாய் இது. ஆகவே, இதுதான் பெரும்பாலும் பொலிஸ் நாயாகப் பயன்படுகிறது. கண்தெரியாதவர்களுக்கு இந்த நாயைத்தான் துணையாக பழக்குகிறார்கள். எப்போதும் அவர்களின் கூடவே இருந்து வேண்டியதை எல்லாம் செய்யும். மிக அன்பான நாய் இது. குழந்தைகளுடன் விரும்பி விளையாடும். வீட்டில் வளர்க்க ஏற்றது. ஆனால், மிக அதிகமாகச் சாப்பிட்டு குண்டாகிவிடும். நிறைய உடற்பயிற்சி அளிக்கவேண்டும்.

செயின்ட் ஜான்ஸ் நீர்நாய் என்னும் நாய் வகையில் இருந்து செயற்கையாக உருவாக்கப்பட்டது. கனடாவில் உள்ள லாப்ரடார் என்னும் ஊரில் இதை உருவாக்கினார்கள்.

## க்யூ மம்மி





இமாச்சலப்பிரதேசத்தில் உள்ள 'ஸ்பிடி' சமவெளியில் உள்ளது 'க்யூ' என்னும் கிராமம். 1975ஆம் ஆண்டு இங்கே இருக்கும் பழைமையான பௌத்த மடாலயத்தை சீரமைப்பதற்காகத் தோண்டினார்கள். அப்போது உள்ளே ஒரு பாடம் செய்யப்பட்ட உடல் கிடைத்தது. முதலில், யாரோ ஒருவரைக் கொன்று புதைத்திருப்பதாகவே நினைத்தார்கள். ஆனால், அது 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு மம்மி என்பது நிரூபணம் ஆயிற்று.

மடாலயக் குறிப்புகளின்படி அந்த பிட்சுவின் பெயர், சாங்கா டென்சிங். [Sangha Tenzin]. 500 ஆண்டுகளுக்கு முன்பு அந்த மடாலயத்தில் வாழ்ந்தவர். தியானம் செய்துகொண்டிருந்தபோது உயிரிழந்தார். அவர் உடலை பாடம் செய்து அங்கே வைத்து வழிபட்டார்கள்.

100 ஆண்டுகளுக்கு முன் பூகம்பத்தில் அந்த மடாலயம் இடிந்தபோது, மம்மி மண்ணுக்குள் சென்றுவிட்டது. ஆனால், கடுங்குளிர்ப் பகுதி என்பதால், மக்காமல் மண்ணுக்குள் இருந்தது. அதை எடுத்து வெளியே கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்திருக்கிறார்கள். ஆனால், வெளியே எடுத்தபின் மக்க ஆரம்பித்திருக்கிறது.

இன்று கிடைக்கும் பௌத்த மரபைச் சேர்ந்த ஒரே பழங்காலத்து மம்மி இதுதான்.

# ஒரு கல்... பல சாதனைகள்





ஒரு சிறிய கல்லை வைத்து என்ன செய்யலாம்? "ஊரையே திரும்பிப் பார்க்கச் செய்யலாம்" என்கிறார் ராக்கி பியான் (Rocky Byun). தென் கொரிய நாட்டின் தலைநகர் சியோலைச் சேர்ந்தவர். ஒற்றைக் கல்லின் முனையில் சைக்கிள், வாஷிங்மெஷின், லேப்டாப், முட்டை என எந்தப் பொருளையும் சாய்வான கோணத்தில் நிற்க வைத்து அசத்துகிறார். "புவியீர்ப்பு விசையோடு போட்டிப் போட்டு ஜெயிக்க எனக்கு ஒன்பது வருடங்கள் பிடித்தன. பயிற்சியின்போது உடைந்த கண்ணாடி போத்தல்கள், வீணான பொருட்களுக்குக் கணக்கே இல்லை. ஆனாலும் மனம் தளராமல் முயன்றேன். யாரும் செய்யாத, வித்தியாசமான விடயத்தைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வமே இதற்குக் காரணம். புவியீர்ப்பு விசை என்னுடைய உழைப்புக்குச் செவிசாய்த்து என்னிடம் சரணடைந்துவிட்டது" என்கிறார் புன்னகையுடன்.



# கறுப்பு கோழி




நாட்டுக் கோழி, புரோயிலர் கோழி, அனைத்தையும் ஒரு கை பார்த்திருக்கிறோம். கறுப்புக் கோழி பற்றிக் கேள்விப்பட்டிருக்கீங்களா? Ayam cemani என்ற இந்த வகைக் கோழிகளுக்கு இந்தோனேஷியாதான் பூர்வீகம். **இதன் ஜீனில்** உள்ள நிறக்குறைபாடு **காரணமாக இந்தக்** கோழி இனமே அட்டைக் கறுப்பு கலரில்தான் பிறக்கிறது. கோழிகளின் கறியும் கறுப்புதான். இந்த ஸ்பெஷல் கலர் காரணமாகவே இவற்றை மதச் சடங்குகளில் பயன் படுத்துகிறார்கள் இந்தோனேஷிய மக்கள்.

இந்தோனேஷியாவில் இருந்து மெள்ள மெள்ள நெதர்லாந்து, ஜேர் மனி, செக் குடியரசு எனப் பல நாடுகளுக்குப் பரவியது இந்தக் கோழியினம் உலகம் முழுவதும் வித்தியாசமான உயிரினங்களை வளர்ப்பதற்காகவே ஒரு பணக்காரக் கூட்டம் உண்டு.

# அம்மா என்றால் அன்பு

சிறுகதை





அப்பொழுது ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காலம். இந்திய அமைதி காக்கும் படையும் இலங்கைப் பாதுகாப்பு படையும் உலாவித் திரிந்த காலம். மாலை ஐந்து மணிக்குப் பின் எவருமே வீட்டுக்கு வெளியில் செல்வதில்லை. இருளில் அவசியமாகச் செல்லவேண்டுமானாலும் டோர்ச்லைட் பாவிக்கக்கூடாது. "அரிக்கன்லாம்பு"தான் பாவிக்க வேண்டும். டோர்ச்லைட் பாவிப்பவர்கள் விடுதலைப்புலிகள் பங்கரவாதிகள் அல்லது அவர்களின் உதவியாளர்கள் என்பதே படையினரின் கருத்து. பாவித்து தண்டனை பெற்றோரின் செய்திகளைப் பத்திரிகையில், வானொலியில் கேட்பதால் வெளியில் செல்வதற்குப் பயம்.

அலுவலகங்களுக்குச் செல்பவர் யாவரும் மாலை மூன்று, நான்கு மணிக்கு வீடு திரும்பி விடுவார்கள். அதனால் வீட்டில் எல்லோரும் தங்கள் தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். வானொலி கேட்பார்கள்.

பலாலி படைத்தளத்திலிருந்து (ரெலிகாஸ்ற்) அஞ்சல் செய்யும் திரைப்படங்களை தொலைக்காட்சி யில் பார்க்கலாம். தமிழ்த் திரைப் படங்களும் அஞ்சல் செய்யப்படும். அதனால் தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருப்பவர்களின் பொழுது மாலையில் குதூகலமாகப் போய்க் கொண்டிருக்கும். எங்கள் வீட்டிலும் அது நடந்து கொண்டிருந்தது.

கார்த்திகை மாதமாகையால் மழை நன்றாகப் பெய்து எங்கும் வெள்ளம். கிணறு குளங்கள் எல்லாம் நிரம்பியிருந்த நேரம். அன்றும் மழை மேகம் மூடியிருந்ததால் நான்கு மணிக்கே மெல்லிய இருள் கவிந்திருந்தது. பிள்ளைகள் எல்லோரும் வீட்டிற்குள்ளேயே அடங்கியிருந்ததால் நொறுக்குத்தீனி, தேநீர் என்று கேட்டபடி சமையலறைக்குள் வந்து தேடிக்கொண்டிருந்தார்கள். நானும் முறுக்கு இருந்தகரப்பேணியை எடுத்துக் கொடுத்துப் போய்ச்சாப்பிடுங்கள். தேத்தண்ணி ஊற்றித் தருகிறேன் என்று சொல்லிக்கொண்டு தேநீர் தயாரிப்பதற்கான வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். தகப்பனும் பிள்ளைகளும் முறுக்குடன் தொலைக்காட்சி படத்தில் மூழ்கியிருந்தார்கள். தேநீர் தயாரித்து எடுத்துக்கொண்டு கொடுப்பதற்காக அவர்கள் இருந்த முன்பக்க அறைக்குச் சென்றேன். அப்பொழுது தெருப்பக்கமாக ம்மா... ம்மா என்று சத்தம் கேட்டது. மகனைப் பார்த்து எங்கள் பசு வெளியில் நிற்கிறதா? ஏன் உள்ளுக்குள் விட்டுக் கட்டவில்லை என்றேன், மகன் நான் அப்போதே கட்டி விட்டேன் என்றதும் சரி சரி தேநீரைக் குடித்து விட்டுப் படத்தைப் பார்த்து விட்டு கைகால் முகம் கழுவி சாமிக்கு விளக்கேற்றி விட்டு பாடத்தைப் படியுங்கள் என்றேன்.

பாடசாலையில் கடைசித் தவணை மீட்டல் வகுப்புத்தான். வீட்டுப் பாடங்கள் இல்லை. படம் பார்த்து விட்டுப் படிக்கிறேன் என்று பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து சொன்னார்கள். தகப்பனும் சரி இன்றைக்கு ஒருக்கா பார்க்கட்டும்.

இன்றைக்கு அவங்கட படம் ரீவியில் வடிவாக வருகுது என்றார். நான் அடுத்த இரவுச் சாப்பாட்டு வேலைக்காக சமையல் அறைக்குச் சென்று வேலையைத் தொடங்கினேன்.

மீண்டும் படலைப் பக்கமாக ம்மா... ம்மா... என்ற சத்தம் கொஞ்சம் பெரிதாகக் கேட்டது. நானும் 5.30 மணிக்கு பேலாகி விட்டதால் பயந்து கொண்டு மெல்லப் படலையைத் திறந்து பார்த்தேன். ஒரு பசு என்னைப் பார்த்து என்னமோ கேட்பது போல் மீண்டும் ம்மா... ம்மா... என்றது. எனக்கு மனதில் பாவம் என்ற எண்ணம் தோன்றியது. வெளியே செல்லப் பயந்து ச்சூ... ச்சூ என்று சொல்லி விட்டுப் படலையை மூடிவிட்டு வந்து எனது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

சில நிமிடங்கள் சென்றிருக்கும். அடுத்த வீட்டுப் படலையில் நின்று அந்தப் பசு ம்மா... ம்மா... என்று தவிப்பதுபோல் கதறுவது கேட்டது. இருந்தாலும் இனி வெளியே போக முடியாது. ஒருவரையும் வெளியே விடக்கூடாது; பயம். என்னவோ கத்துது பாவம், என்னவென்று தெரியவில்லை என மனதில் கவலைப்பட்டுக் கொண்டே சமையல் செய்து கொண்டிருந்தேன். அப்போது அடுத்த வீட்டுக்காரரும் அதன் சத்தத்தைப் பொறுக்க முடியாமலோ ஏனோ ச்சூ... ச்சூ... என்று துரத்துவது கேட்டது.

என்ன செய்வது பேசாமல் என் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரம் செல்ல மீண்டும் எங்கள் வீட்டுப் படலையில் வந்து நின்று பசு ம்மா.. ம்மா... என்று பலமாகக் கதறியது. என்னால் தாங்கமுடியவில்லை. தகப்பனும் பிள்ளைகளும் அந்தச் சத்தம் தங்களுக்கு இடைஞ்சலாக இருந்ததால் என்ன இந்த மாடு சும்மா கத்திக் கொண்டே நிக்குது என்று எழுந்து சென்று, படலையைத் தட்டி ச்சூ ச்சூ என்று சத்தமிட்டு விட்டு வந்து தமது படம் பார்க்கும் படலத்தில் இறங்கி விட்டார்கள். எனக்கு என்னவோ செய்தது. ஏன் இந்தப் பசு இப்படிக் கதறுகிறது. ஏதோ நடந்து விட்டது. எப்படி வெளியில் போய்ப் பார்ப்பது. கணவரைக் கேட்டால் பேசுவாரோ என்னவோ என்று பயந்தாலும் எனக்கும் தாயின் தவிப்பு இருக்கிறது தானே எனத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அப்பா அந்த மாடு கனநேரமாகக் கதறுகிறது. கன்றை எங்கேயோ விட்டு விட்டுது போல. ஒருக்கால் வெளியில் போய்ப் பார்ப்பமே என்று கேட்டேன். என்னம்மா இருட்டி ஆறு மணியாகி விட்டது. அவங்கட ஜீப் வந்தாலும் றோட்டுக்கு வெளியில போகலாமே என்னவென்று பார்க்காமல் சுட்டுப் போடுவாங்கள் என்று எல்லோரும் ஒருசேரக் கூறினார்கள்.


ஆனால் பசுவின் தவிப்பு உறுமல் ம்மா...ம்மா....ம்மா... என்று கேட்டது. நான் சொன்னேன். பாவம் நான் என்னவென்று போய்ப் பார்க்கப் போறன். ஆநிரை மேய்க்கும் ஆண்டவன் கண்ணன் எனக்கு அருள்புரிவான். ஒருவரும் வரமாட்டாங்கள் என்று சொல்லிவிட்டு அரிக்கன் லாம்பை எடுத்துக்கொண்டு படலையைத் திறந்து வெளியே சென்றேன். நான் தன்னிடம் வருவதைக் கண்டதும் பசு தன் உடலை எக்கி குலுக்கி மூச்சு விட்டபடி எனக்கு முன்னே சென்றது. நான் அதன் பின்னே சென்றேன். தெருவைக் கடந்து எங்கள் வீட்டுக்கு முன்பாக உள்ள வளவிற்கு சென்றது. அதனுடன் சென்றேன். ஆ... அங்குள்ள கட்டு இல்லாத கிணற்றுக்குள் தண்ணீரில் நீந்தியபடி பசுவின் சிறிய கன்று. ஐயோ.... கடவுளே.... நாராயணா... அப்பா... தம்பி... ஒரு கயிறும் சாக்கும் பின்னால் இருக்கு. பயப்படாமல் எடுத்துக்கொண்டு வாருங்கள். கெதியாய் வாருங்கள் என்று கத்தினேன். ஜீப் வந்தாலும் அம்மா... ஜீப் வந்தாலும் அம்மா... என்றார்கள். பயப்படாதீர்கள் என்றேன்.

அவர்களும் கயிறு சாக்குடன் விரைந்து வந்தார்கள். கண்ணா... கோவிந்தா... கோபாலா கன்றை மீட்கும் வரை ஒன்றும் வராது. அப்பா கயிற்றை வளைத்துப்போட்டு கன்றைத் தூக்குங்கள் என்றேன். அவரும் துணிவுடன் கன்றைத் தூக்கி சாக்கில் போட்டார். நாங்கள் சாக்கினால் கன்றைச் சுற்றி நன்றாகத் துடைத்தோம். பசு ம்... ம்... என்று மெல்லிய சத்தத்துடன் கண்களில் நீர்வடிய பொறுமையாக நின்றது. தனது பிள்ளைக்கு ஏதோ செய்யிறம் என்று மாடு பேசாமல் எங்களை ஒன்றும் செய்யாமல் நிக்குதம்மா நாங்கள் பள்ளிக்கூடம் போகும் போது வழியில் நின்று தன் கன்றை பிடிக்கப் போகிறோம் என்று முட்ட வரும் அம்மா என்று மகன் சொன்னான். அது தான் மகனே தாயின் பாசம் அன்பு தவிர்ப்பு என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் சென்று ஒரு மண்சட்டியில் நெருப்புத் தணலைப் போட்டு எடுத்து வந்து அதில் வேப்பிலை. காய்ந்த இலைகள் சாம்பிராணித் தூள் இட்டு கன்றுக்குப் புகை பிடித்தேன். சிறிது சிறிதாக கன்று உடலை அசைத்து மெல்ல எழுந்து நின்றது. தாய்ப்பசு கிட்ட வந்து தன் நாக்கால் பிள்ளையை தடவி தடவி நக்கிக் கொடுத்தது. நன்றி கூறுவது போல் ம்..ம்.. என்று தன் வயிற்றை எக்கி கூறிக் கொண்டே இருந்தது. தன் பாலைச் சுரந்து கன்று குடித்த பின் கூட்டிச் சென்றது. அப்பாவும் பிள்ளைகளும் அம்மாவுக்குத் தான் தெரியும் மாடு என்றாலும் தாய்தான். எதற்கோ தவிக்கின்றது என்று அம்மாவின் தாய்ப்பாசம் அன்பு, தவிப்பு எது என்பதை இன்று நன்றாக அறிந்து கொண்டோம் என்று கூறி மகிழ்ந்தார்கள்.

திருமதி .ச. சந்திரபாலா
[illegible]

# ஜெ.வைத்த துளசி மாடத்தை சுற்றிவரும் சசிகலா

## அக்ரஹாரா ஜெயில் வாழ்க்கை


சிறைக்குள் செல்லும் சசிகலா, இளவரசி...


சசிகலா

தமிழகத்தைத் தாண்டி பெங்களூரிலும் ஆயிரம் வாட்ஸ் கேள்வியாக இருப்பது, 'சிறைக்குள் சசிகலா என்ன செய்துகொண்டிருக்கிறார்' என்பதுதான். "ஆடைகளும் இடமும் மட்டுமே சக கைதிகளுக்கு வழங்கப்பட்டிருப்பவை போல இருக்கின்றன. இவை தவிர, 'சிறப்பு ஏற்பாட்டில்' எல்லா வசதிகளும் இவர்களுக்குக் குறைவில்லாமல் கிடைக்கின்றன" என்கிறார்கள் இந்தச் சிறையை நன்றாக அறிந்தவர்கள்.

சசிகலா சிறைக்குள் சென்ற முதல் நாளில், கடுமையாக நடந்துகொள்வதைப் போல சிறைத்துறை காட்டிக்கொண்டது. ஒரே நாளில், சிறையின் நெளிவு சுளிவுகளை சசிகலா தரப்பு கண்டுகொண்டது. அதன்பின், அவர்களுக்கான பாத்திரங்கள், பொருட்கள் அனைத்தும் புதியதாக வெளியில் இருந்து வாங்கிக் கொடுக்கப்பட்டன. மருந்துகள், புரோட்டீன் பவுடர் ஆகியவை வெளியில் இருந்தே போகின்றன.

சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய மூவரும் தங்கி இருக்கும் அறைகள் கொஞ்சம் விசாலமானது. இங்கே படுத்துக்கொள்ள இரும்புக் கட்டில்களும் போடப்பட்டுள்ளன. குளிர் அதிகமாக இருப்பதாக சசிகலா தெரிவித்ததையடுத்து, அவர்கள் அறைக்கு இரண்டு போர்வைகள் கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

### சசிகலாவின் ஒருநாள் அட்டவணை

காலை 5.00 மணிக்கு எழுந்துகொள்ளும் சசிகலா, ஒரு மணி நேரம் அறையிலேயே அமர்ந்து தியானம் செய்கிறார். 6:30 மணிக்கு வெந்நீரில் குளித்து, இளவரசியோடு சிறைக்குள் இருக்கும் அம்மன் கோயிலுக்குச் சென்று சாமி கும்பிட்டுவிட்டு, அங்கு ஏற்கனவே ஜெ. வைத்த துளசி மாடத்தைச் சுற்றி வருகிறார். பிறகு செய்தித்தாள்கள் படிக்கிறார். 8.30 மணிக்கு மேல் காலை உணவு சாப்பிட்டு முடிக்கிறார். பிறகு டி.வி. பார்க்கிறார்கள். மதிய உணவை 2 மணிக்குச் சாப்பிடுகிறார்கள். பிறகு இருவரும் குட்டித் தூக்கம் போடுகிறார்கள். அதன் பிறகு வேறு பொழுதுபோக்கு இல்லாததால் மீண்டும் டி.வி பார்த்து நேரத்தைக் கழிக்கிறார்கள். மாலை 5- 6 மணி வரை இளவரசியின் மகன் விவேக் மற்றும் அவரோடு உறவினர்கள் இரண்டு பேர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் கொண்டு வரும் உணவை சசிகலாவும், இளவரசியும் 7.30 மணிக்குச் சாப்பிட்டுவிட்டுத் தூங்குவதற்கு இரவு 11 மணி ஆகிறதாம்.

### பெங்களூரிலேயே தங்கிவிட்ட இளவரசியின் மகன் விவேக்

சசிகலா சிறை சென்ற அன்று பெங்களூர் வந்த நடராசன், மறுநாளே சென்னை திரும்பிவிட்டார். ஆனால், இளவரசியின் மகன் விவேக் தன் மனைவியோடு பெங்களூரிலேயே தங்கிவிட்டார். தினமும் மாலை 5 மணிக்குச் சிறைக்குள் சென்று அத்தை சசிகலாவிடமும், அம்மா இளவரசியிடமும் பேசிவிட்டு இரவு 7 மணிக்குத் தான் வீடு திரும்புகிறார்.

ஆனால், சுதாகரனை யாரும் கண்டுகொள்வது இல்லை. அவரும் அலட்டிக்கொள்ளவில்லை. "சிறை விதிகளின்படி என்ன உணவு தருகிறீர்களோ, அதையே சாப்பிடுகிறேன். தனிப்பட்ட உணவு வேண்டாம்" என்று சிறைக்காவலர்களிடம் கூறிவிட்டார். களியையும் சப்பாத்தியையும் விரும்பிச் சாப்பிடுகிறார். வருடத்துக்கு ஐந்து கிலோ வீதம் நான்கு வருடங்களில், 20 கிலோ உடல் எடை குறைக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்.

### மிரட்டும் சுதாகரன்

சுதாகரன் சிறைக்குள் சென்றதும் முதல் வேலையாகச் சிறைக் காவலர்களிடம் 'திருநீறு வேண்டும்' என்று ஒரு பாக்கெட் கேட்டு வாங்கிக்கொண்டார். நெற்றி முழுக்க திருநீறு பூசிக்கொண்டு, தன் சட்டை பாக்கெட்டில் வைத்திருக்கும் காளி படத்தை எடுத்து தனக்கு முன்பாக வைத்து, 'ஓம் காளி, ஓம் மாரி, பத்திரகாளி' என மந்திர உச்சாடனம் செய்ய ஆரம்பித்திருக்கிறார். இவர் தங்கி இருக்கும் அறையில் ஏற்கனவே இரண்டு கைதிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சுதாகரன் செய்வது அச்சத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அவர்கள் சிறைக் காவலர்களிடம், "சுதாகரன் ஒரு மந்திரவாதியைப் போல நடந்துகொள்கிறார். எங்களுக்கு பயமாக இருக்கிறது. அவரது வழிபாடு எங்களை மிரட்டுவது போல இருக்கிறது. அவரை வேறு அறைக்கு மாற்றுங்கள்" என்று மிரட்சியோடு சொல்லியிருக்கிறார்கள்.

### நடுங்கும் சசிகலா

பெண்கள் சிறையின் பகுதி-2 பிரிவில் சசிகலாவும், இளவரசியும் ஒரே அறையில் தங்கி இருக்கிறார்கள். இந்தப் பிரிவில் மொத்தம் 20இற்கும் மேற்பட்ட அறைகள் இருக்கின்றன.

ஆனால், இதில் நான்கு அறைகளில் மட்டுமே பெண் கைதிகள் இருக்கிறார்கள். மற்ற அறைகள் காலியாக உள்ளன.

சிறையில் இருவர் ஒன்றாக இருக்க முடியாது. தனியாக இருக்கலாம். இல்லை என்றால் மூன்று அல்லது அதற்கும் மேற்பட்டவர்கள் இருக்கலாம். 15 ஆம் திகதி இரவு உள்ளே வந்ததும், இரண்டு பேரையும் ஒரே அறையில் தங்க அனுமதித்தார்கள். மறுநாள் இவர்களை "தனித்தனி அறையில் இருந்துகொள்ளுங்கள். வசதியாக இருக்கும்" என்று சிறை அதிகாரிகள் சொன்னார்கள். ஆனால் சசிகலா, "மொழி பிரச்சினையாக இருக்கிறது. தனி அறையில் இருக்க பயமாக இருக்கிறது. இரண்டு பேரும் ஒன்றாக இருந்து கொள்கிறோம்" என்று கூறியதையடுத்து அனுமதி கிடைத்திருக்கிறது. இருந்தபோதும், "எங்கே... இருவரையும் பிரித்து விடுவார்களோ" என்று சசிகலா கவலையில் இருக்கிறார். அவரை நடுங்கவைக்கும் இன்னொரு பெயர், சயனைடு மல்லிகா.

### சயனைடு மல்லிகா

கர்நாடக மாநிலம் சித்ரதுர்கா பகுதியைச் சேர்ந்தவர் மல்லிகா என்கிற கெம்பம்மாள். ஆடம்பரமாக வாழ ஆசைப்பட்ட இவரை, வசதியில்லாத ஒருவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். கணவர் வேலைக்குச் சென்ற பிறகு வீட்டின் அருகே உள்ள வசதியான குடும்பத்துப் பெண்களிடம் சென்று அன்பாகப் பேசிப் பழகுவார். அவர்கள் வீட்டில் தனியாக இருக்கும்போது, நைசாகப் பேசி உணவில் சயனைடு வைத்து கொன்றுவிட்டு, வீட்டில் இருக்கும் நகைகளைத் திருடி வந்துவிடுவார். ஒரு கட்டத்தில் கெம்பம்மாளின் நடத்தையில் சந்தேகம் அடைந்த கணவர், வீட்டை விட்டுத் துரத்திவிட, அவருக்கு காவி ஆடையும் சாமியார் வேடமும் கை கொடுத்தது.

ஏதாவது ஊரில், கோயிலில்போய் தங்குவார். கோயிலுக்கு வரும் வசதியான பெண்களைக் குறிவைத்து, பக்திக் கதைகள் சொல்லிப் பழகுவார். குடும்பக் கஷ்டங்கள் தீர வழிகாட்டுவதாகச் சொல்வார். உடல் முழுக்க நகைகளைப் போட்டுக் கொண்டு மதிய நேரத்தில் கோயில் குளக்கரைக்கு வரச் சொல்வார். நகைகளைக் கழற்றி வாங்கிக் கொண்டு, திருநீறைக் கொடுத்து, "இதை சாப்பிட்டுக்கொண்டே குளத்தைச் சுற்றிவந்து குளி" என்று சொல்வார். அவர் கொடுக்கும் திருநீறில் சயனைடு கலந்து இருக்கும் என்பதால், குளத்திலேயே பரிதாபமாக இறந்துவிடுவார்கள். நகைகளோடு கெம்பம்மாள் வேறு கோயிலுக்கு ஓடிவிடுவார். இங்கே குளத்தில் பெண் தடுமாறி விழுந்து இறந்ததாகப் பொதுமக்கள் நம்பிவிடுவார்கள். இப்படி ஆறு கொலைகளைச் செய்தவர்தான் கெம்பம்மாள்.

2006ஆம் ஆண்டு இவர் கைது செய்யப்பட்டு, பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டார். கேடி கெம்பம்மாள், 'சயனைடு மல்லிகா' என்ற புனைப்பெயரிலும் அழைக்கப்பட்டார்.

இவருக்கு 2010இல் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. 2012இல் அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

கடந்த 2014இல் ஜெயலலிதா இந்த சிறையில் இருந்தபோது கேடி கெம்பம்மாள், "நான் ஜெயலலிதாவின் தீவிர ரசிகை. அவரைப் பார்க்க வேண்டும்" என்று சிறைக் காவலர்களிடம் அடாவடி செய்ததோடு, ஜெயலலிதாவைச் சந்திக்க கடும் முயற்சி மேற்கொண்டார்.

ஆனால், இறுதிவரை ஜெயலலிதாவைப் பார்க்கமுடியவில்லை. இவர் பகுதி-2 பிரிவில் சசிகலாவின் பக்கத்து அறையில் இருந்தார். இதனால், சசிகலா குலை நடுங்கி வந்தார். 18 ஆம் திகதி வாக்கெடுப்பில் எடப்பாடி பழனிச்சாமி முதல்வரானது உறுதியானதையடுத்து, அன்று மாலை சசிகலாவும் இளவரசியும் முதல் மாடிக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். சயனைடு மல்லிகா பெயரைச் சொல்லியே தமிழக சிறைக்கு மாறிவிட சசிகலாவுக்கு திட்டமும் உண்டாம்.

### ஜெ. வைத்த துளசி மாடம்

ஜெயலலிதா, போயஸ் கார்டனில் காலையில் எழுந்ததும் துளசி மாடத்தைச் சுற்றுவது வழக்கம். கடந்த முறை பரப்பன அக்ரஹாரா சிறையில் இருந்தபோது, ஜெயலலிதா, சசிகலா, இளவரசி மூன்று பேரும் சிறைக்குள் இருக்கும் ராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்குச் சென்று வருவார்கள். அவர்களோடு சிறைக் காவலர்களும் செல்வார்கள். அப்போது, ஜெயலலிதா சில பெண் காவலர்களிடம், "இந்த அம்மன் கோயில் முன்பு துளசி மாடம் வைத்தால் நன்றாக இருக்குமே" என்றார்.

அந்தப் பெண் பாதுகாவலர்கள் தங்கள் உயர் அதிகாரிக்குத் தகவல் கொடுக்க, உடனே மாடம் ரெடியானது. அடுத்த நாள் கோயிலுக்குவந்த ஜெயலலிதா, அதைப் பார்த்து வியப்படைந்தார்.

"நான் சொன்னதைப் போல மாடம் கட்டி இருக்கீங்க. இதில் துளசிச் செடியைக் காணோமே" என்று புன்னகைக்க, அந்தப் பாதுகாவலர்கள், "மேடம், உங்கள் கையால் நடுவதற்காகத் தான் வெயிட் பண்ணிட்டு இருக்கிறோம்" என்று துளசி செடியைக் கொடுத்தனர்.

ஜெயலலிதா அதை வாங்கி மாடத்தில் நட்டார். அவர் விடுதலையானபிறகும் அந்த துளசி மாடத்தை சிறை ஊழியர்கள் பராமரித்து வந்தார்கள்.

இந்த முறை சிறைக்கு வந்திருக்கும் சசிகலாவும் இளவரசியும் 16 ஆம் திகதி காலை எழுந்ததும், அம்மன் கோயிலுக்குச் சென்றனர். அந்த துளசி மாடத்தைப் பார்த்து, "அக்கா வைத்த துளசி மாடம்" என்று கண் கலங்கிய சசிகலா, நாள்தோறும் காலையில் எழுந்து இந்த துளசி மாடத்தைச் சுற்றி வருகிறார்.

ஜூனியர்விகடன்


பரப்பன அக்ரஹாரா சிறை முகப்பு...

# சிறார்களை ஆளுமைமிக்க மனிதர்களாக்கும் வாசிப்பு

வாசிப்பு என்பது ஒரு பிள்ளை தனது தாயின் கருவறையில் இருக்கும் போதே ஆரம்பிக்கப் படவேண்டும். அதாவது சிசுவை சுமக்கும் தாயானவள் நல்ல நூல்களை தேடி வாசிக்க வேண்டியது அவசியமாகின்றது.

வாசிப்பானது சந்தோசம், பொழுதுபோக்கு தகவல் தேவைக்காக வாசித்தல், அறிவுக்காக வாசித்தல் போன்ற நோக்கங்களுக்காக நடைபெறலாம். வாசிப்பு மகிழ்ச்சிகரமானதும் சுவாரஸ்யமானதுமான ஒரு செயற்பாடாகும். இதை ஆங்கிலத்தில் (Read for fun) என்றும் (Read for pleasure) என்றும் கூறுவார்கள். வாசிப்பு ஒரு முக்கிய திறனாகும். இது பிள்ளைகள் வாழ்வில் வெற்றிபெற ஓர் ஆயுதமாகவும் விளங்குகிறது. ஒரு பிள்ளை நிறைய விடயங்களை வாசிப்பதனூடாக அவர்களது படைக்கும் ஆற்றல் வளர்ச்சியடைகின்றது.

ஒரு பிள்ளையானது தனது கல்வியில் மேம்பாடடைய வாசிப்பு இன்றியமையாத தாகின்றது. வாசிப்பு ஒருமனிதனை பூரணமனிதனாக உருவாக்கும். வாசிப்பதன் மூலம் பல பயன்களை பிள்ளைகள் பெற்றுக் கொள்ள முடியும். மொழித்திறன் சொல்வன்மை, சொல்லாட்சி, சொல்வளம் என்பன விருத்தியடைகின்றன. வாசிப்பின் மூலம் சிறு பிள்ளைகளின் மொழித்திறன் விருத்தி, கேட்டல் திறன் என்பன அதிகரிக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் பொது அறிவு வளர்ச்சியும் ஏனையவர்களின் கலாசாரம், பாரம்பரியம் போன்றவற்றை அறியும் வாய்ப்பும் கிடைக்கின்றது. தன்னம்பிக்கை, ஆளுமை விருத்தி, ஞாபக சக்தி அதிகரிப்பு, கிரகித்தல்திறன், கற்பனைத்திறன் என்பன விருத்தியடைகின்றன.

பிள்ளைகளிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த சில தந்திரோபாயங்களை கையாளலாம். அதாவது பெற்றோர் பிள்ளைகளுக்கு அன்பளிப்பாக புத்தகங்களை வாங்கிக் கொடுக்கலாம். படுக்கைக்குச் செல்வதற்கு முன் ஏதாவது வாசிப்பதைப் பழக்கமாக்கி கொள்ளலாம். வீட்டில் அதிகளவு வாசிப்புச் சாதனங்களைச் சேர்த்துவைக்கும் வீடுகளில் உள்ள பிள்ளைகளைப் பரீட்சைகளில் அதிகளவு புள்ளிகளைப் பெறுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.



வாசிப்புச்சாதனங்களை பிள்ளைகள் படிக்கும் பிள்ளையின் புத்தகறாக்கை, மேசை போன்றவற்றில் மட்டுமல்ல படுக்கையறை, சாப்பாட்டறை, ஏன் தொலைக் காட்சிக்கு பக்கத்தில் கூட வைக்கலாம். இது அவர்களின் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டும் செயலாக அமையும்.

செய்தித்தாள்கள் போன்றே இணையமும் வாசிப்புப்பழக்கத்தை ஏற்படுத்தும் ஒரு கற்றல் சாதனமாகும். இணையத்தை முறையாகப் பாவிப்பதன் மூலம் வாசிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்தலாம். நூலகத்தைப் பாவிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த பிள்ளைகளை வாரத்துக்கு ஒருதடவையாவது நூலகத்துக்கு அழைத்துச் சென்று வாசிக்கச் செய்வதன் மூலம் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கலாம்.

வாசிப்பு என்பது பாடசாலை செல்லும் ஒரு தனி நபரின் வெற்றிக்கு இன்றியமையாத ஒன்றாகும். முதலில் வாசிப்பின் முக்கியத் துவத்தினையும் அது ஒரு மகிழ்ச்சிகரமான செயல் என்பதையும் பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். பிள்ளைகளுக்கு அவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க ஆசிரியர்களும் பெற்றோர்களும் சில வசதிகளை ஏற்படுத்துவதுடன் அவர்களுடன் சேர்ந்து வாசிப்பில் ஈடுபடுவதன் மூலம் வாசிக்கும் பழக்கத்தினையும் ஆர்வத்தினையும் தூண்ட முடியும், வாசிப்புக்குத் தடையாக இருக்கும் வீட்டுச் சூழலாக இருந்தாலும் பிள்ளையின் உடல் உளம் சார் காரணிகளாக இருந்தாலும் அவை அடையாளம் காணப்பட வேண்டும்.

பிள்ளைகள் எப்போதும் பாடப் புத்தகத்தை மட்டும் வாசிக்க விரும்ப மாட்டார்கள். சிறு வர்களுக்கான கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள், கவிதைகள், வீரதீரச் செயல்கள், வரலாறுகள், சமயம் சார்ந்த புத்தகங்கள், பொது அறிவுப் புத்தகங்கள் போன்ற வெவ் வேறான விடயங்களை வாசித்து மகிழ்வதற்கு சந்தர்ப்பங்கள் கொடுப்பது பெற்றோரின் கடமையாகும்.

மா.சிவகுமார்
ஆசிரியர்,
யா/ உசன் இராமநாதன்
மகா வித்தியாலயம்.

# ஏன்?



சார் நம்ம கம்பனி குடோன்களுக்கு காவலுக்கு செக்யூரிட்டிகள் வேணும் என்று விளம்பரம் குடுக்கச் சொன்னீங்க.

விளம்பரம் குடுத்திருந்தோம். நிறையப் பேர் வந்திருக்கிறாங்க. இண்டர்வியூ பண்ணிட்டீங்களா? கம்பெனி எம்.டி ராஜசேகரை வினவினான் சுரேந்தர்.

உள்ளே ஒவ்வொருத்தரா அனுப்பு என்றார் ராஜசேகர். சற்று நேரத்தில தேர்வானவர்கள் லிஸ்ட்டை சுரேந் தரிடம் கொடுத்தார் ராஜசேகர். லிஸ்ட்டை கையில் வாங்கிய சுரேந்தரின் புருவம் உயர்ந்தது. ராஜசேகரை கேட்டான். சார் லிஸ்ட்டுல ஏகப்பட்ட இளைஞர்கள் பெயர் இருக்கும் போது நீங்க ஏன் சார் வயசான ஆட்களா செலக்ட் பண்ணியிருக்குறீங்க? கேட்ட சுரேந்தருக்கு பதில் கூறினார் ராஜசேகர்.

சுரேந்தர் நம்ம வேலைக்கு எடுக்கிறது குடோனுக்கான வாட்ச்மேன். எப்பவாவது குடோனுக்கு வர்ற லொரிகளை உள்ளே அனுப்ப கேட்டை திறந்து விடுறதுக்கு இளைஞர்கள் எதுக்கு? மேலும் இளைஞர்களோட ஆற்றல் இப்படி ஒரே இடத்துல வாட்ச்மேனா நின்னு விரயமாகிறதுல எனக்கு உடன்பாடு இல்லை.

வாட்ச்மேன் வேலை வயசானவங்களுக்கான வேலை. அதனால வயசானவங்களைத் தேர்வு செய்தேன். நான் செய்தது சரிதானே?

நூறு சதவீதம் சரி சார் என்றான் சுரேந்தர்.



# 2017 ஐ.பி.எல். வீரர்களின் ஏலம்

## ஒரு பார்வை

2017 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் வீரர்களின் ஏலவிற்பனை தொடர்பான ஒரு கண்ணோட்டம்.

குப்ரில்:- நியூசிலாந்தின் அதிரடி தொடக்க வீரர் குப்ரிலை முதலில் எந்த அணியும் சேர்த்துக்கொள்ளவில்லை. பின்னர் தொடர்ந்து நடந்த ஏலத்தில் இவரை 50 இலட்சத்திற்கு ஏலத்தில் எடுத்தது கிங்ஸ் லெவன் பஞ்சாப்.

ஜேசன்ராய் :- இங்கிலாந்தின் தொடக்க வீரர் ஜேசன் ராய். மறு ஏலத்தில் இவரை குஜராத் ஒரு கோடிக்கு எடுத்துள்ளது.

சவரப் திவாரி:- மும்பை அணி 30 இலட்ச ரூபாய்க்கு இவரை எடுத்தது.

கிறிஸ் ஜோர்டான்:- இங்கிலாந்தின் பந்துவீச்சு ஆல்ரவுண்டர் கிறிஸ் ஜோர்டான் கடந்த சீஸனில் பெங்களூர் அணிக்காக விளையாடினார். இம்முறை ஐதராபாத் அணிக்காக ஆடப்போகிறார். அவருக்கு கிடைத்த தொகை 50 இலட்சம்.

கவுல்டர் நைல்:- அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் கவுல்டர் நைலை ஏலத்தில் எடுக்க போட்டி ஏற்பட்டது . கொல்கத்தா இவரை 3.5 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது.

பிரவீன் துபே:- 10 இலட்சத்திற்கு இவரை எடுத்து பெங்களூர் ராயல் சலஞ்சர்ஸ்.

பில்லி ஸ்டான்லேக்:- 22 வயது அவுஸ்திரேலிய பவுலர் இவர். 30 இலட்சத்திற்கு எடுத்தது பெங்களூர்.

பென் லாஃபிளின்:- 34 வயது பவுலரான பென்னை சன்ரைஸர்ஸ் ஐதராபாத் 30 இலட்சத்திற்கு எடுத்தது.


முகமது சிராஜ்:- வேகப்பந்து வீச்சாளரான இவரை எடுக்க சன்ரைஸர்ஸ், புனே, பெங்களூர் மோதின. இறுதியில் 2.6 கோடிக்கு ஐதராபாத்துக்கு விலை போனார்.

அசலா குணரத்னா:- சமீபத்தில் தென்னாப்ரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய அணிகளுக்கு எதிரான இருபது-20 தொடரில் சிறப்பாக விளையாடிய இந்த இலங்கை வீரர், பெரிய தொகைக்கு ஏலம் போவார் என எதிர்பார்க்கப்பட்டது. மும்பை அணி 30 இலட்சத்திற்கு இவரை அணியில் சேர்த்துக் கொண்டது.

ரோவ்மன் பவல்:- மேற்கிந்தியத்தீவு மண்ணில் இருந்து வரும் இன்னொரு இருபது- 20 ஸ்பெஷலிஸ்ட் இவர். 30 இலட்சத்திற்கு இவரை எடுத்தது கொல்கத்தா.

டேரன் சமி:- கோடிகளில் விலை போவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், யாருமே போட்டி போடாததால் வெறும் 30 இலட்சத்திற்கு பஞ்சாப் அணிக்கு ஏலம் போனார். இரண்டு இருபது-20 உலகக் கோப்பையை வென்ற ஒரே தலைவன்.

உலகின் நம்பர் 1 பவுலரான இம்ரான் தாஹீரை எந்த அணியும் எடுக்கவில்லை. சமீபத்தில் நடந்து முடிந்த நியூசிலாந்துக்கு



எதிரான ஒரு இருபது-20 போட்டியில் கூட 5 விக்கெட்டுகளை எடுத்து சாதனை படைத்திருந்தார் ஒருநாள் மற்றும் இருபது-20 இரண்டிலும் ஐ.சி.சி தரவரிசையில் நம்பர் 1 இடத்தில் உள்ள இம்ரான். ஐ.பி.எல்லில் யாரும் ஏலம் எடுக்காதது கிரிக்கெட் உலகை அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது.

நாது சிங் :- ஐம்பது இலட்ச ரூபாய்க்கு இவரை ஏலத்தில் பெற்றது குஜராத் லயன்ஸ்.

ரஷீத் கான் :- ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த இளம் பவுலர் ரஷீத் கான் இன்று நான்கு கோடிக்கு ஏலம் போயிருக்கிறார். மும்பை, புனே, ஐதராபாத் உள்ளிட்ட அணிகள் கடும் போட்டி போட்டன. கடந்த உலகக்கோப்பை இருபது-20 தொடரில் கலக்கிய இந்த சுழற்பந்துவீச்சாளரை நான்கு கோடிக்கு ஏலத்தில் எடுத்தது ஐதராபாத்.

பேசில் தம்பி:- எர்ணாகுளத்தைச் சேர்ந்த பேசில் தம்பியை குஜராத் அணி 85 இலட்ச ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்திருக்கிறது.

தேஜாஸ் சிங் பருக்கா:- பத்து இலட்ச ரூபாய்க்கு குஜராத் அணிக்காக விளையாடப் போகிறார் பருக்கா.

பிரவீன் தாம்பே:- சன் ரைஸர்ஸ் இவரை பத்து இலட்ச ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்திருக்கிறது. கடந்த வருடம் இவர் குஜராத் அணிக்காக ஆடியது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ் வோக்ஸ்:- இங்கிலாந்து பவுலர் கிறிஸ் வோக்ஸ்க்கு இரண்டு கோடி ரூபாய் அடிப்படை விலையாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஐதராபாத், கொல்கத்தா இரண்டு அணிகளும் போட்டி போட்டன. 4.20 கோடி ரூபாய்க்கு கொல்கத்தா அணிக்காக விளையாடப் போகிறார் கிறிஸ் வோக்ஸ்.

கார்ன் ஷர்மா:- ஆல்ரவுண்டர் கார்ன் ஷர்மாவை மும்பை அணியும், குஜராத் அணியும் ஏலத்தில் எடுக்க போட்டி போட்டன. இறுதியில் 3.2 கோடிக்கு மும்பை அணிக்கு ஆட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

ரிஷி தவான்:- பஞ்சாப் அணிக்காக ஆடி வந்த ரிஷி தவான் இந்த சீஸனில் 55 இலட்சத்திற்காக கொல்கத்தா அணிக்கு விளையாடவுள்ளார்.

வருண் ஆரோன்:- இந்தியாவின் அதிவேக பந்துவீச்சாளர் வருண் ஆரோனை ஏலத்தில் எடுக்க பஞ்சாப் அணியும், குஜராத் அணியும் கடும் போட்டி போட்டன. 2.8



கோடிக்கு இவரை பெற்றது பஞ்சாப் அணி.

முருகன் அஷ்வின்:- கடந்த ஆண்டு புனே அணிக்கு 4.5 கோடிக்கு விலை போன தமிழக வீரர் முருகன் அஸ்வின், இந்த முறை டில்லி அணிக்காக ஆடப்போகிறார். அவரை ஒரு கோடிக்கு ஒப்பந்தம் செய்திருக்கிறது டில்லி அணி.

Uncapped Players என சொல்லப்படும் ஐ.பி.எல்/ சர்வதேச போட்டிகளில் ஆடிய அனுபவம் இல்லாத வீரர்களுக்கான ஏலம் தொடங்கியது.


இதில் சேலத்தைச் சேர்ந்த பவுலரான நடராஜனை எடுக்க பல்வேறு அணிகளும் போட்டி போட்டன. புனே, டில்லி, பஞ்சாப், கொல்கத்தா, ஐதராபாத் ஆகிய அணிகள் முட்டி மோதின. இறுதியில் மூன்று கோடிக்கு ஏலத்தில் எடுத்திருக்கிறது பஞ்சாப் அணி. நடராஜனை ஏலத்தில் எடுக்க பஞ்சாப் சார்பாக வந்திருந்த ஷேவாக் மிகவும் ஆர்வம் காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சாளர்கள் மற்றும் விக்கெட் கீப்பர்களுக்கான முதற்கட்ட ஏலம் நடந்து முடிந்திருக்கிறது.

ககிஸோ ரபாடா :- தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ககிசோ ரபாடாவை ஏலத்தில் எடுக்க பல அணிகள் போட்டி போட்டன. இறுதியில் ஐந்து கோடி கொடுத்து ஏலத்தில் எடுத்திருக்கிறது டில்லி டேர்டெவில்ஸ்.

டிரென்ட் போல்ட் :- ஐதராபாத் அணிக்காக கடந்த சீஸனில் விளையாடினார் டிரென்ட் போல்ட். நியூசிலா ந்து வீரரான போல்ட் இறுதி ஓவர்களில் சிறப்பாக பந்து வீசக்கூடியவர். விக்கெட் வேட்டை நடத்தும் இந்த பவுலரை ஐந்து கோடி க்கு ஏலத்தில் எடுத்திருக்கிறது கொல்கத்தா.

டைமல் மில்ஸ் :-இங்கிலாந்து வீரர்



டைமல் மில்ஸ் உலகம் முழுவதும் இருபது-20 லீக் போட்டிகளில் சிறப்பாக விளையாடி வருபவர். இந்தியாவுக்கு எதிரான தொடரிலும் இவர் சிறப்பாக விளையாடியுள்ளார். இவரை ஏலத்தில் எடுக்க மும்பை, பஞ்சாப், கொல்கத்தா, பெங்களூர் உள்ளிட்ட அணிகள் கடும் போட்டி போட்டன. இறுதியில் பெங்களூர் அணி இவரை 12 கோடிக்கு ஏலத்தில் எடுத்திருக்கிறது.

கம்மின்ஸ் : -அவுஸ்திரேலிய வீரர் கம்மின்ஸ் இந்த அளவுக்கு விலை போவார் என யாரும் நினைத்துக் கூட பார்த்திருக்க முடியாது. இவரை ஏலத்தில் எடுக்க ஐதராபாத் அணியும், டில்லி அணியும் கடும் போட்டி போட்டன. இறுதியில் டில்லி அணி 4.5 கோடிக்கு இவரை ஏலத்தில் எடுத்தது.

மிச்சேல் ஜான்சன் :-சர்வதேச போட்டிகளில் ஓய்வுபெற்று விட்டாலும் ஜான்சனுக்கு மவுசு குறைய வில்லை. இவருக்கு அடிப்படை விலையாக இரண்டு கோடி ரூபாய் நிர்ணயிக்கப் பட்டிருந்தது. இவரை மும்பை அணி இரண்டு கோடிக்கு ஏலத்தில் எடுத்தது.

விலை போகாத பவுலர்கள்:- இஷாந்த் ஷர்மா, கைல் அபாட், கவுல்டர் நைல், பிரக்யான் ஓஜா, லக்ஷன் சடங்கன், இஷ் சோதி உள்ளிட்ட பவுலர்கள் இதுவரை விலை போகவில்லை. அணி உரிமையாளர்கள் விரும்பினால் இன்று மீண்டும் இவர்கள் மதியம் ஏலத்துக்கு வருவார்கள்.

விக்கெட் கீப்பர்கள்:- ஜானி பேர்ஸ்டோ, சந்திமால், ஜான்சன் சார் லஸ், பென் டங்க், ஆண்ட்ரே பிளட்சர் உள்ளிட்ட வீரர்கள் விலை போகவில்லை. நிக்கோலஸ் பூரான் மட்டும் மும்பை அணிக்கு முப்பது இலட்ச ரூபாய்க்கு விலை போனார்.

ஐ.பி.எல். 2017 சீஸன் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்க உள்ளது. 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐ.பி.எல்லுக்கு இது பத்தாவது சீஸன்.இன்று காலை முதல் ஐ.பி.எல். ஏலம் நடந்து வருகிறது. துடுப்பாட்டக்காரர் மற்றும் ஆல்ரவுண்டர்கள் ஏலம் இதுவரை



முடிந்திருக்கிறது.

விலை போகாத வீரர்கள்:- அலெக்ஸ் ஹேல்ஸ். ஜேசன் ராய், மார்ட்டின் கப்தில், ராஸ் டெய்லர், கிறிஸ் ஜோர்டான், இர்பான் பதான்.ஃபைசல், சவுரப் திவாரி, சீன் அபாட் உள்ளிட்ட வீரர்களை யாரும் எடுக்கவில்லை. இவர்கள் மதியம் மீண்டும் ஏலத்துக்கு வருவார்கள் என எதிர் பார்க்கலாம்.

பவான் நெகி:-கடந்த வருடம் அதிக தொகைக்கு ஏலத்தில் எடுத்திருந்த டில்லி அணி இவரை இந்த ஆண்டு கழற்றிவிட்டது. இந்த முறை குஜராத், புனே, ஐதராபாத், பெங்களூர் உள்ளிட்ட அணிகள் இவரை ஏலத்தில் எடுக்க போட்டி போட்டன. இறுதியில் பெங்களூர் அணி இவரை ஒரு கோடிக்கு ஏலத்தில் எடுத்தது.

ஏஞ்சலோ மத்யூஸ் :-இலங்கை வீரர் ஏஞ்சலோ மத்யூஸ்க்கு இரண்டு கோடி அடிப்படை விலையாக நிர்ணயிக் கப்பட்டது. இவரை ஏலத்தில் எடுக்க யாரும் போட்டிக்கு வரவில்லை. கடைசி நேரத்தில் டில்லி அணி இவரை இரண்டு கோடிக்கு எடுத்தது.

கோரே ஆண்டர்சன் :- மும்பை அணி இம்முறை இவரைக் கழற்றிவிட்டது. இந்த ஏலத்தில் டில்லி அணி ஒரு கோடிக்கு இவரை எடுத்திருக்கிறது. ஆல்ரவுண்டர் ஆண்டர்சனை வெறும் ஒரு கோடிக்கு எடுத்ததில் மகிழ்ச்சியில் இருக்கிறது டில்லி அணி.

பென் ஸ்டோக்ஸ் :- கடந்த ஆண்டு இறுதிப் போட்டியில் கடைசி ஓவரில் பென் ஸ்டோக்ஸ் ஓவரில் தான் நான்கு சிக்ஸர்களை விளாசி மிரட் டனார் கார்லஸ் பிராத் வெயிட். இந்தியச் சுற்றுப் பயணத்தில் இவருக்கும் கோலிக்கும் தொடர்ந்து மோதல் இருந்தது குறிப்பிடத் தக்கது. இந்தியத் தொடரில் இந்திய வீரர்க ளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியதால் ஸ்டோக்ஸ்க்கு மவுசு அதிகரித்தது. இந்த ஐ.பி.எல்லில் அதிக தொகைக்கு ஏலம் போவார் என எதிர்பார்க்கப்பட்டது. அதேபோல இன்றைய தினம், இதுவரை அதிக தொகைக்கு ஏலம் போன வீரராக இவர் விளங்குகிறார். இவருக்கு அடிப்படை தொகையாக இரண்டு கோடி நிர்ணயிக்கப் பட்டிருந்தது. ஆரம்பத்தில் இருந்தே மும்பை அணியும் பெங்களூர் அணியும் இவரை ஏலத்தில் எடுக்கப் போட்டி போட் டன. ஒரு கட்டத்தில் பெங்களூர் விலக, டில்லி போட்டிக்கு வந்தது. பத்துக் கோடி வரை முட்டிப்பார்த்த மும்பை பின்பு பின்வாங்கியது. டில்லிக்கு ஏலம் போவார் என எதிர்பார்க்கப்பட்ட அந் நிலையில் ஐதராபாத் திடீரென போட்டி யில் நுழைந் தது. ஐதராப்பாத்துக்கு ஏலம் போகும் தறுவாயில் இருந்தபோது திடீரென புனே போட்டிக்கு வந்தது. இறுதியில் 14.5 கோடிக்கு புனே அணி அவரை ஏலத்தில் எடுத்தது. • (க)

# வீரப்பனை கொன்றது எப்படி விபரிக்கிறார் விஜயகுமார்



சடலமாக வீரப்பன்...

சந்தனக் கடத்தல் வீரப்பனை சுட்டுக் கொன்று 12 ஆண்டுகள் கழித்து, அந்த வேட்டையை நடத்திய அதிரடிப்படைத் தலைவர் விஜயகுமார் புத்தகம் எழுதியிருக்கிறார். வீரப்பனை ஓர் அம்புலன்ஸில் அழைத்து வந்து வீழ்த்திய இறுதி நிமிடங்களை முதல்முறையாக விஜயகுமார் விபரித்திருக்கிறார். அந்தப் புத்தகத்திலிருந்து வீரப்பனின் திக்திக் க்ளைமாக்ஸ் நிமிடங்கள் இங்கே...

2004, ஒக்டோபர் 18,
இரவு 10 மணி

இன்னும் 60 நிமிடங்கள்!

அமாவாசை முடிந்து நான்காவது நாள். எங்கும் கும்மிருட்டு. நாங்கள் காத்திருந்த பகுதியில் நான்கு பெரிய புளிய மரங்கள் கிளை பரப்பி, அந்தப் பகுதியை இன்னும் இருட்டாக்கி இருந்தன. ஆனாலும், கமாண்டோக்கள் தங்கள் கஷ்டத்தை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. சில நொடிகளில் எதிரியைத் தாக்கிக் கொல்ல வேண்டிய தருணத்துக்காக, பல மணி நேரம் இருட்டில் காத்திருப்பது அவர்களுக்குப் பழகிப் போன ஒன்று. இதைவிட மோசமான சூழல்களில் எல்லாம் அவர்கள் பணிபுரிந்திருக்கிறார்கள்.

தர்மபுரியிலிருந்து 12 கி.மீ தூரத்தில் இருக்கும் பாடி கிராமம். கண்ணனும் (அதிரடிப் படை எஸ்.பி. செந்தாமரைக் கண்ணன்) நானும் வீதியோரத்தில் இருக்கும் சிறிய பாடசாலைக்கு அருகே நின்றிருந்தோம். மறைந்திருந்து சுடுவதற்கு ஏற்றபடி, அந்தப் பாடசாலையின் கூரை, பாதுகாப்பு அரணாக இருந்தது. ஆறு கமாண்டோக்கள் அங்கு பதுங்கி, துப்பாக்கிகளோடு வீதியைக் குறிவைத்தபடி படுத்திருந்தனர். பழுதாகி நிற்பது போன்ற தோற்றத்தில், வீதியின் பெரும்பகுதியை அடைத்துக்கொண்டு ஒரு லொறியை நிறுத்தி வைத்திருந்தோம். பார்ப்பதற்கு, சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஏற்றிச் செல்லும் லொறி போலத் தெரியும். இதற்கு, 'ஸ்வீட் பாக்ஸ்' எனப் பெயர் வைத்திருந்தோம். வீரப்பனை அழைத்து வந்த 'பட்டுக்கூடு' எனப் பெயரிடப்பட்ட அம்புலன்ஸ், அந்த இடத்தில் சந்தேகம் ஏற்படாதவாறு வேகத்தைக் குறைத்து நிற்க வேண்டும் என்பது திட்டம். அதற்காகவே, அந்த லொறியை அங்கு நிறுத்தியிருந்தோம். லொறிக்குள் எங்கள் வல்லுநர்கள் மூன்று பேர் பதுங்கி இருந்தார்கள். அம்புலன்ஸ்'க்குள் நாங்கள் ரகசியமாகக் கண்காணிப்பு கமராவைப் பொருத்தியிருந்தோம். லொறியை அம்புலன்ஸ் நெருங்கியதும், கமராவின் சிக்னல்களைப் பெற்று, அம்புலன்ஸ் உள்ளே வீரப்பன் கும்பல் இருக்கிறதா எனப் பார்த்து உறுதிசெய்ய வேண்டியது லொறியில் இருந்த வல்லுநர்களின் பணி. அதன்பிறகே நாங்கள் தாக்க வேண்டும். சற்றுத் தள்ளி, மரங்களின் மறைவில் இன்னொரு லொறி நிறுத்தப்பட்டு இருந்தது. 'நடமாடும் தடுப்பரண்' என அதற்குப் பெயர் வைத்திருந்தோம். அதில் மணல் மூட்டைகள் இருந்தன. சந்திரமோகன் தலைமையிலான கோப்ரா படையினர் அதில் பதுங்கியிருந்தனர்.

இன்னும் சற்றுத் தள்ளி, அதே வீதியில் டி.எஸ்.பி. திரு தலைமையில் அதிரடிப்படை, சாதாரண கார் ஒன்றில் காத்திருந்தது. அம்புலன்ஸ் அந்த இடத்தை நெருங்கும்போது, அதை இவர்களின் கார் பின்தொடரும். வேறு எந்த வாகனமும் இடையில் சிக்கி விடாமல் தடுக்கவும், அம்புலன்ஸ் அவசரமாக ரிவர்ஸ் எடுத்து அங்கிருந்து சென்றுவிடாமல் தவிர்க்கவுமே இந்த ஏற்பாடு. எல்லாம் திட்டமிட்டபடி நடந்தால், நான்குபுறமும் இருக்கும் பொலிஸ் படைகளுக்கு நடுவே அம்புலன்ஸ் வந்து சிக்கிக்கொள்ளும்.




வீரப்பன் வேட்டைக் காட்சி...

தர்மபுரி நகரத்தில் இன்னொரு டி.எஸ்.பி காத்திருந்து, அம்புலன்ஸ்'க்கு எதிர்த் திசையில் வாகனங்கள் எதுவும் வராமல், எல்லாவற்றையும் வேறு வீதியில் திருப்பி விட்டுக் கொண்டிருந்தார். வேறு எந்த வகையிலும் இடையில் யாரும் சிக்கி, உயிர்ச்சேதம் ஆகிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தோம்.

எங்களிடமிருந்து வெகு தூரத்தில், அதிரடிப் படையில் ரகசியமாகப் பணியாற்றும் வீரரான குமரேசன், தனியாக வீதியோரம் இருளில் மறைந்து காத்திருந்தார். அம்புலன்ஸ் வருவதை உறுதி செய்து எங்களுக்குத் தகவல் சொல்ல வேண்டியது அவருடைய பணி. நான், அம்புலன்ஸ் டிரைவர் சரவணன், அம்புலன்ஸில் வந்த வெள்ளத்துரை மற்றும் கண்ணன் ஆகியோர் தவிர, 'இந்த ஆபரேஷன், வீரப்பனைப் பிடிப்பதற்காக' என்ற ரகசியம் தெரிந்த ஐந்தாவது நபர், குமரேசன்.

குமரேசன் இங்கு காத்திருப்பது, வீரப்பன் கும்பலை அம்புலன்ஸில் கூட்டிவரும் வெள்ளத்துரைக்குத் தெரியும். அம்புலன்ஸ் அந்த இடத்தை நெருங்கியதும், வெள்ளத்துரை கையை வெளியில் நீட்டி, தன் கட்டை விரலை உயர்த்திக் காண்பித்தார்.



சென்னையில் நடந்த புத்தக அறிமுக விழாவில் விஜயகுமார், தேவாரம், எம்.கே நாராயணன்

வழக்கமாக விழிப்போடு இருக்கும் வீரப்பன், அன்று இயல்புக்கு மாறாக அலட்சியத்தோடு இருந்தான். அவன், இதைக் கவனிக்கவில்லை. ஆனால், இருளில் காத்திருந்த குமரேசன் கவனித்தார்.

வேறு இரண்டு விடயங்களையும் அவர் கவனித்தார். அம்புலன்ஸின் மேலே நீல நிற சுழல்விளக்கு எரிந்து கொண்டிருந்தது. 'வீரப்பன் குழுவில் எல்லோருமே உள்ளே இருக்கிறார்கள்' என்பதற்கான சிக்னல் அது. அம்புலன்ஸின் முகப்பு விளக்கோடு, பனிமூட்டம் மற்றும் மழைநாட்களில் எரியவிடும் மஞ்சள் விளக்கும் சேர்ந்து எரிந்தது. அது உணர்த்திய சிக்னல், 'வீரப்பன் குழுவில் எல்லோருடைய கைகளிலும் ஆயுதங்கள் உள்ளன' என்பது தான்!

குமரேசன் உடனே செல்போனை எடுத்து, சங்கேத மொழியில் தகவல் சொன்னார். "தபால் அனுப்பியாச்சு!"

இன்னும் 10 நிமிடங்கள்!

குமரேசன் போன் செய்தது கண்ணனுக்குத்தான். தகவலைக் கேட்டதும் கண்ணன் என் பக்கம் திரும்பி, கட்டை விரலை உயர்த்திக் காண்பித்தார். அதே நேரத்தில், சத்தம் குறைத்திருந்த எங்களின் வயர்லெஸ்ஸில் 'க்ளிக்' சத்தம் கேட்டது. அது, திரு அனுப்பியிருந்த சிக்னல். அம்புலன்ஸ் அவர் பார்வைக்குள் வந்துவிட்டது. அவர் அதை தன்னுடைய வாகனத்தில் பின்தொடரப் போகிறார்.

"பட்டுக்கூடு இன்னும் 10 நிமிடங்களில் இங்கு வந்துவிடும்" என்றார் கண்ணன்.

ஆனாலும், வீரப்பன் எந்த நிமிடத்திலும் தன் திட்டங்களை மாற்றக்கூடியவன். பாப்பாரப்பட்டி ஜங்ஷனில் அவன் பாதை மாறிப் போகச் சொல்லலாம். அல்லது பல்லியின் குரல் கேட்டு திரும்பிப் போகலாம். 'அங்கிருக்கும் அதிரடிப் படையை சேர்ந்த நவாஸையும், ஒகேனக்கல் வீதியில் இருக்கும் சண்முகவேலையும் அலெர்ட்டாக இருக்கச் சொல்லுங்கள். எப்போது என்ன நடக்கும் எனத் தெரியாது' என கண்ணனிடம் கிசுகிசுப்பான குரலில் சொன்னேன்.

இன்னும் 5 நிமிடங்கள்!

கடைசி முறையாக, படையினரைச் சுற்றிலும் பார்த்தேன். இரண்டு நாட்களுக்கு முன்பே ரிகர்சல் செய்து குறித்துவைத்த பொசிஷன்களில் எல்லோரும் தயாராக இருந்தனர்.

ஒவ்வொரு நொடியும் ஒரு யுகமாக நகர்ந்தது. 'ஏன் அம்புலன்ஸ் வர இவ்வளவு நேரமாகிறது?' என இதயம் துடிதுடித்தது. 'அமைதியாக இரு' என மனம் கட்டளையிட்டது.

(நாளை தொடரும்)

ஜூனியர் விகடன்

# தனுஷ் மீது புகார் எழுப்பிய சுசித்திரா



## பதிலளித்த கணவர்

சில பிரபலங்கள் சமூக வலைத்தளங்களில் மிகவும் நேர்மையாக நடந்து கொள்வார்கள். ஒரு சிலர் தான் சரியாக பேசுகிறேன் என்று கூறி ரசிகர்களின் கிண்டலுக்கு ஆளாவார்கள்.

இந்நிலையில் பாடகி சுசித்ரா தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், தன் கணவரை விவாகரத்து செய்ய போகிறேன், தனுஷ் என்னை தாக்கினார் என பல அதிர்ச்சியான டுவிட்டையே போட்டு வந்தார்.

இதைப் பார்த்த ரசிகர்கள் அவருக்கு என்ன ஆனது, குடித்துவிட்டு இப்படி டுவிட் செய்கிறாரா என பலர் கேள்வி எழுப்பினர்.

தற்போது சுசித்ராவின் கணவரும், நடிகருமான கார்த்திக் குமார் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், சுசி டுவிட்டரில் கூறுவது எல்லாம் ஆதாரமற்றது. இது வேற பிரச்சினை மற்றும் தனிப்பட்டது. தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள் என்று தெரிவித்திருந்தார். கார்த்திக் இன்று இந்த பிரச்சினைகள் குறித்து பேஸ்புக்கில் ஒரு பதிவு செய் துள்ளார்.

## உண்மையில் இதனால்தான் திருமணம் நின்றதா?

நடிகர் நாகர்ஜுனாவின் இளைய மகன் அகில் மற்றும் ஸ்ரேயா பூபால் ஆகியோரின் திருமணம் வரும் மே மாதம் ரோமில் நடைபெறுவதாக இருந்தது. இந்நிலையில் அவர்கள் திருமணம் நின்றுவிட்டதாக அதிர்ச்சி செய்தி சில நாட்களுக்கு முன்பு வெளிவந்தது. அதற்கான காரணம் தெளிவாக கூறப்படாத நிலையில், தற்போது ஒரு புதிய தகவல் வந்துள்ளது.

அகிலுக்கு வயது 22, மற்றும் ஸ்ரேயாவுக்கு 24 - இரண்டு வயது மூத்த பெண்ணை காதலித்து திருமணம் வரை சென்றாலும், அந்த விழாவை ஏற்பாடு செய்யும் பணிகளில், இரு வீட்டிற்கும் மோதல் வந்துள்ளது. மேலும் அதனால் அகில்-ஸ்ரேயா இடையே பிரச்சினை வந்துள்ளது, அதுவே திருமணம் நிற்க காரணமாகவும் அமைந்துவிட்டது. நாகர்ஜுனாவின் மற்றொரு மகன் நாக சைதன்யா, நடிகை சமந்தாவை விரைவில் கரம்பிடிக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சியில் 'பந்தி' நிகழ்வு

### உணவினூடாக ஒருமைப்பாட்டிற்கான ஒரு முன்முயற்சி



யாழ்ப்பாண மாநகர சபை, இலங்கை மாநாட்டு பணியகம் மற்றும் சர்வதேச வர்த்தக மன்றம் அகியவற்றின் ஆதரவுடன் Lanka Exhibition & Confernce Services (Pvt) Ltd (LECS) யாழ்ப்பாண கைத்தொழில் வர்த்தக மன்றத்துடன் இணைந்து ஜனவரி மாதம் 27ம் 28ம் 29ம் திகதிகளில் இடம்பெற்ற யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பந்தி எனும் நிகழ்வு அனைவரினதும் விஷேட கவனத்தை ஈர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல சுவை – ஒரு திசை, எனும் நிகழ்வு தலைப்புடன் இடம்பெற்ற பந்தி நிகழ்வானது நாட்டின் பிற பகுதிகளில் உள்ள இலங்கையர்களால் விரும்பி சுவைக்கப்படும் பல்வேறு வகையான உணவுகளை சுவைத்து மகிழ்வதற்கும், அவற்றை தயாரிக்கும் முறைகளை அறிந்து கொள்வதற்கும் வடபகுதிவாழ் மக்களுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பினை வழங்கியிருந்தது. உணவினூடாக ஒருமைப்பாடு, என்ற GIZ இன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு அங்கமாகவே இந்நிகழ்வு அமைந்திருந்தது. அனைவரும் அவசியமான உணவு என்ற மையப்பொருளின் அடிப்படையில் இந்நிகழ்வு வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த வரிசையில் முதலாவது நிகழ்வான யாழ் சமையலறை என்ற நிகழ்வில் வடக்கிற்கே உரித்தான தனித்துவம் மிக்க உணவு தயாரிப்பு முறைகள கடந்த வருடம் கொழும்பில் நடைபெற்ற Profood Pro Pack கண்காட்சியில் பிரபலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பந்தி நிகழ்வில் இலங்கையின் புகழ்பெற்ற சமையற்கலை நிபுணரான கலாநிதி. ஜெயந்தன் அவர்கள் பல்வேறு வகையான உணவுகளை தயாரிக்கும் முறைகளை மூன்று நாட்களும் செய்துகாட்டியிருந்தார். இன, மத, பால், வயது வேறுபாடுகளின்றி ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பல்வேறு வகையான உணவு தாயாரிப்பு முறைகளை அறிந்தும், அந்த உணவுகளை சுவைத்தும், நடைபெற்ற போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசில்களை வெற்றிபெற்றும் பயனடைந்திருந்தனர்.

பந்தி காட்சிக்கூடத்தில் இலங்கையின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளர்களின் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், ரசசரனி அமைப்பினரால் உணவுக்கலை தொடர்பான 'சிந்தனை பலதும்' என்ற தமிழ்மொழி மூலம் ஒன்றும் சஞ்சிகை வெளியிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(C-063)


மோட்டார் வாகனத் தொழில்நுட்பத்தில் உலகத் தரமான தகைமையைப் பெற உங்களுக்கு ஓர் இலவச வாய்ப்பு

"மோட்டார் வாகனத் தொழில்நுட்பவியலாளராக வரும் நோக்கத்துடனேயே நான் DATS அமைப்பில் ஒரு பயிலுநராக இணைந்தேன். ஆனால், நான் அங்கு பெற்ற பயிற்சியும் அனுபவமும் என்னை டிமோ நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் ஆக்க உதவின. தொழிற்றுறையில் உயர்ந்த நிலை அடைவதற்கும் வாழ்க்கையில் வளம் பெறுவதற்கும் என்னைப் போலவே மேலும் பலருக்கு DATS வழிகாட்டியுள்ளது."

அனுர விஜேசிங்க
பிரதிப் பொது முகாமையாளர்
DIMO



டிமோவின் நிலைபெறுதகு முன்முயற்சியான DATS அமைப்பின் மோட்டார் தொழில்நுட்பப் பயிற்சிக்கு இன்றே விண்ணப்பியுங்கள்

DIMO Automobile Training School (DATS) என்பது Daimler AG உடனிணைந்து இலங்கையில் முழுமையான மோட்டார் வாகனப் பயிற்சியை வழங்கும் முதலாவது பயிற்சி நிலையமாகும். அது மோட்டார் வாகனத் தொழில்நுட்பத்தில் உயர் தரத்திலான விளக்கமுறை மற்றும் செய்முறைப் பயிற்சிகளைப் பூரண அர்ப்பணிப்புடன் வழங்குகிறது.

இப் பயிற்சி நெறி உலகத் தரமான வசதிகள், சிறந்த தேர்ச்சியும் அனுபவமும் வாய்ந்த தொழில்நுட்பப் போதனாசிரியர்கள், Mercedes-Benz க்கு அமைவான பாடத்திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியது என்பதால், மோட்டார் வாகனத் தொழில்நுட்பத் துறையில் உயர்ந்த நிலையை அடைய DATS உங்களுக்குச் சிறந்த வாய்ப்பளிக்கும்.

மகத்தான நிறுவனமாகிய DIMO வழங்கும் எல்லையற்ற வாய்ப்புக்களினால் உங்கள் தொழில் நிலையை முன்னேற்ற ஆர்வமிருந்தால் இன்றே எம்முடன் இணையுங்கள்!

பிரவேசத் தகுதிகள்
வயது: 17 முதல் 24 வரை

கல்வித் தகைமைகள்: க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் 'B' சித்தியுடன் 6 பாடங்களில் சித்திகள். 2017–2019 காலத்திற்கான பயிற்சிநெறி 2017 ஜூன் 1ஆம் திகதி ஆரம்பமாகும்.

உங்கள் சுயவிபரக் கோவையை dats@dimolanka.comக்கு மின்னஞ்சல் செய்யுங்கள் அல்லது பின்வரும் முகவரிக்குத் தபாலில் அனுப்புங்கள்:

DIMO Automobile Training School,
No.09, A9 Road, Ariyalai, Jaffna.
விண்ணப்ப முடிவு தினம் 2017 மார்ச் 17ஆம் திகதி.

DIMO Automobile Training School
Diesel & Motor Engineering PLC,
இல. 09, A9 வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
www.dimolanka.com
www.facebook.com/DIMOSriLanka

Best companies to work for 2016 Sri Lanka

(C-061)



எல்லா மோட்டார் சைக்கிள் குத்தகையுடன் பெறுமதிமிக்க சிங்கர் மின்விசிறி இலவசம்




SINGER FINANCE

தொடர்புகளுக்கு:
சுஜந்தன் 077 7 391 449
தனு 077 9 357 124

(C-062)

# காணாமலாக்கப்பட்டவர்களை தேடும் போராட்டம் தொடர்கிறது



காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த பெப்ரவரி 09ஆம் திகதி கொழும்பிலுள்ள உயர்மட்ட அமைச்சர்களைச் சந்தித்தனர். இவர்கள் இந்தச் சந்திப்பில் தமது பொறுமை குறைந்து கொண்டு செல்வதாகவும் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பாக இன்னமும் பதிலளிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

வடக்கிலிருந்து ஆறு மணித்தியால பேருந்துப் பயணத்தின் மூலம் கொழும்பு சென்றடைந்த இவர்கள் போரின் போது காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளை பல ஆண்டுகளாகத் தேடி வருகின்றனர். மே 2009 இல் இறுதி யுத்தம் இடம்பெற்ற போதும் அதற்குப் பின்னரும் காணாமற்போன தமது மகன்கள், மகள்கள் மற்றும் துணைவர்களுக்கு என்ன நடந்தது என்று அறிவதற்கான பல்வேறு முயற்சிகளை இத்தமிழ் மக்கள் மேற்கொண்ட போதும் இவர்கள் இதில் இன்னமும் வெற்றி கொள்ளவில்லை.

கடந்த ஜனவரி மாதத்தின் பிற்பகுதியில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியாவில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதையடுத்தே இந்தச் சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்த மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன வவுனியாவிற்கு சென்று இந்த மக்களைச் சந்தித்ததுடன் கொழும்பில் உயர்மட்ட சந்திப்பொன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதாகவும் அதில் கலந்து கொண்டு பிரச்சினைகளைக் கூறுமாறும் கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளில் 15 பேர் கொழும்பு நோக்கிப் பயணமாகினர். இந்தச் சந்திப்பின் போது இந்த உறவுகள் தமது மனக்குமுறல்களை வெளிப்படுத்தியதாகவும் ஆவேசமான கருத்துக்களைத் தெரிவித்ததாகவும் அங்கிருந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அந்த இடத்தை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என சந்திப்பில் கலந்து கொண்ட உறவுகள் கோரியதாகவும் ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.



'எமக்கு அவர்கள் மீது நம்பிக்கை இல்லை' என சந்திப்பில் கலந்து கொண்ட உறவுகளில் ஒருவர் அமைச்சர்களிடம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

மூன்று மணித்தியாலங்கள் வரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட 15 பேரின் வழக்குகளை முன்னுரிமைப்படுத்துவதாக பொலிஸ் மா அதிபர் மற்றும் அமைச்சர்கள் வாக்குறுதி வழங்கியதையடுத்து இந்தச் சந்திப்பு நிறைவுபெற்றது.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் 'அரசாங்கத்துடன் தனிப்பட்ட உடன்பாட்டிற்கு' வந்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

'காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் அரசாங்கத்தால் கூறப்பட்ட பதில் திருப்தியளிக்கவில்லை என்பதால் இவர்கள் மீண்டும் தமது சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடரலாம்' என இந்த உறவுகள் சார்பாக நீதிமன்றில் வாதிடும் மனித உரிமைகள் சட்டவாளர் கே.எஸ். இரட்னவேல் தெரிவித்தார்.

1995 தொடக்கம் காணாமற்போனவர்கள் தொடர்பாக 65,000 முறைப்பாடுகளை அரசு பெற்றுள்ளதாக அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. காணாமற்போன உறவுகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு 1990களிலிருந்து குறைந்தது ஆறு வரையான ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஆனால் இவற்றுள் எந்தவொரு ஆணைக்குழுவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பதில் அளிக்கவில்லை.

காணாமற்போன உறவுகள் இறுதியாக எங்கே காணப்பட்டனர் என்பது தொடர்பான விரிவான விளக்கத்தை அவர்களின் குடும்பத்தினர் கூறியுள்ள போதி



லும் இன்னமும் இவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. சில வழக்குகளில் தமது உறவுகள் காணாமற்போனதற்குக் காரணமான சந்தேகநபர் யார் என்பது தொடர்பாக அவர்களின் குடும்பத்தினர் பெயர் குறிப்பிட்டும் உள்ளனர்' என மட்டக்களப்பில் பணியாற்றும் தொண்டுப் பணியாளர் ஒருவர் அண்மையில் 'தி இந்து' ஊடகத்திடம் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான கடத்தல்களில் பங்குபற்றிய பாதுகாப்புப் படையினர் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தொடர்பாகவும் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகள் இராணுவத்திடம் எப்போது எங்கே சரணடைந்தார்கள் என்பது தொடர்பாகவும் அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்பது தொடர்பாகவும் விரிவான தகவல்களைத் தெரிவித்த போதிலும் இன்னமும் இவர்களது பிரச்சினைக்கான தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்படும் ஆணைக்குழுக்களிடம் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மீண்டும் மீண்டும் முறைப்பாடுகளைச் செய்யும் போது இவர்களின் மன வடுக்கள் மேலும் அதிகமாகின்றது. காணாமலாக்கப்பட்ட குடும்பத்தினர் தமது உறவுகள் உயிருடன் உள்ளார்கள் எனத் தொடர்ந்தும் தேடிக்கொண்டிருக்கும் அதேவேளையில், 'இவர்கள் பெரும்பாலும் இறந்திருப்பார்கள்' என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2015 ஐ.நா. தீர்மானத்தைத் தொடர்ந்து, காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்கான அலுவலகம் ஒன்றை அமைப்பதாக ஜெனிவாவில் இலங்கை வாக்குறுதி வழங்கியது.

'கடந்த ஓகஸ்ட் மாதம் நடைமுறைக்கு வரும் வகையில் நாடாளுமன்றில் சட்டமூலம் ஒன்று நிறைவேற்றப்பட்ட போதிலும் இதுவரை இவ்வாறானதொரு அலுவலகத்தை அமைப்பதற்கான எந்தவொரு நகர்வும் முன்னெடுக்கப்படவில்லை' என அனைத்துலக மன்னிப்புச் சபையின் இலங்கைக்கான பிரதிநிதி ஜொலண்டா பொஸ்ரர் தெரிவித்தார்.

பொருளாதார திட்டம் ஒன்றையும் அரசாங்கம் தமக்கு வழங்கத் தவறியுள்ளதாகவும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

தமது உறவுகள் காணாமலாக் கப்பட்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தி அத்தாட்சிப்பத்திரம் ஒன்றைத் தமக்குத் தருமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தபோதும் அது நிறைவேற்றப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் வடக்கு மாகாண சபை ஆகியன அதிகமாகப் பணியாற்ற முடியும் எனவும் பாதிக் கப்பட்டவர்களின் குடும்பத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

'இந்தக் குடும்பங்களைப் பொறுத்தளவில் கொழும்பில் இடம்பெற்ற உயர் மட்டச் சந்திப்பானது தமது பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கான பிறிதொரு தளமாகக் காணப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குபடுத்தியவர்கள் இந்த வாய்ப்பை தமது அரசியல் எதிரிகளைத் தாக்குவதற்கே பயன்படுத்தியுள்ளனர் என யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் சமூகப் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

வழிமூலம் - The hindu
ஆங்கிலத்தில்- Meera Srinivasan
மொழியாக்கம் - நித்தியபாரதி

# facebook சூர்யோதயம்

கண்மணி.......... கண்மணி...... அழைத்துக்கொண்டே வந்தான் மாதவன். இதோ வந்துட்டேன் வெலவெலத்துப் போன முகத்துடன் பதற்றமாக, மாவு அறைத்த கையைக்கூட கழுவாமல் வேகமாக ஹோலுக்கு வந்த கண்மணி, என்னங்க...

பளார்... என்ற ஓசை... ஓ வென கதறி கீழே சுருண்டுவிழுந்த கண்மணி, பொங்கிப்பாய்ந்துவரும் கண்ணீரைக்கூட வெளியே கொட்ட திராணியற்றவளாய். பயத்துடன் மெல்ல எழுந்தாள்.

என்னடி! உம் மனசுல என்ன தான் நினைச்சிக்கிட்டிருக்க ம்... சொல்லித்தொலை.

வந்து... அது... அது... ஒண்ணுமில்லீங்களே...

வர வர உம் போக்கே சரியில்ல. நானும் பாத்துக்கிட்டேதான் வாரேன். இப்படியே இருந்த... நான் மிருகமாயிடுவேன் பாத்துக்கோ. ஏதோ ஆதரவற்ற அனாதக் கழுத ஆச்சேன்னு உன்னப்போயி கல்யாணம் செஞ்சுகிட்டேன் பாரு என்ன... இப்பொழுதெல்லாம் மாதவன் எதற்காகத் தன்னிடம் இப்படி எரிஞ்சிவிழறார் என்பதே கண்மணிக்குப்புரியவில்லை. எதிர்த்துக் கேட்கவும் வழியில்லை. ஏனென்றால் வேறு போக்கிடமும் இல்லை. மகன் உதயகுமாரும், மகள் இளவஞ்சியும் பெரியவர்களாகிப் பணியில் அமர்ந்த பிறகும்கூட அவளால் தன்னிச்சையாக நிமிர்ந்து செயற்பட முடியவில்லை. ஏனென்றால் அவர்களிடமும் கூட மனம் விட்டுப் பேச முடியவில்லை.

யாரிந்தக் கண்மணி? கண்ணின் மணிபோல் கருத்தாய் வளர்க்கப்பட வேண்டியவள். ஆனால் அப்படியா? பிறந்தவுடனே பெற்ற தாயை இழந்து. துரதிர்ஷ்டசாலி, தொடகாலி என்றெல்லாம் ஊராரின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் இடமளித்தவளாயிற்றே! பாவம் அவள் என்ன செய்வாள்? எல்லாம் விதியின் விளையாட்டைத் தவிர வேறு என்னவாக இருக்க இயலும்?

திருமணத்திற்கு முன்பாகவே ஒரு கயவனால். காமுகனால் சூறையாடப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்ட பொன்னம்மாவின் மகளல்லவா இவள். வேதனை தாங்க இயலாத பொன்னம்மா இவளை இந்த உலகிற்கு நல்கியகையோடு வாழ வழியின்றி தன் பச்சிளம் குழந்தையைத் தவிக்கவிட்டுத் தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்டாள்.

கொடூரனானாலும், காமுகனானாலும், கயவனானாலும் அவனுக்குள்ளும் ஈரம் இருந்ததால், பேரெழில் கொண்ட பிஞ்சுக் கண்மணியை அன்புடன் பேணிவளர்த்தான். அவளுக்காக மறுதாரம் செய்துகொண்டான். வந்தவளோ கண்மணிக்குத் தாயாக இல்லாமல் பேயாக இருந்து வாட்டி வதைவதைத்தாள். அப்பப்பா... அவள் இழைத்த கொடுமைகளைக் கண்டவர்கள் அனைவரும் இதயம் பிளக்கும் வண்ணம் கதறினர். ஏதேனும் கேட்கச் சென்றால் இது எங்கள் குடும்ப விஷயம். நீங்கள் யார் இதில் தலையிட? என்று அவள் வாயிலிருந்து வரும் மடைதிரண்ட வெள்ளம் போன்ற அமுத மொழிகளை (ஏச்சுக்களை) தவிர்க்கவே அனைவரும் பின்வாங்குவார்கள்.

இப்படியே கண்மணியின் நாட்களும் நகர்ந்தன. காலவெள்ளத்தில் குடிகாரத் தந்தையும் பலியானார். அவளின் கொடூரத்தாயோ இவளை நிர்க்கதியாக விடுத்து, வேறொருவனுடன் ஓடிவிட்டாள். கண்மணியின் மீது இரக்கம் கொண்ட சிலர் அவளை ஒரு அநாதைக் காப்பகத்தில் விட்டனர். அங்கும் விதி அவளை விரட்டியது.

காப்பகத்தில் உள்ள சிலரும் அவளைக் கர்ணக் கொடூரமாக நடத்தினர். நித்தம் நித்தம் சாவோடு போராடிய அவளுக்கு வாழ்வு கொடுக்க முன்வந்தவன் தான் இந்த மாதவன்.

அவன் நிலை என்னதெரியுமா? பல இலட்சங்களுக்கு அதிபதி. ஏற்கனவே வசந்தா என்ற பெண்ணுடன் திருமணம் புரிந்து பலவருடங்கள் வாழ்க்கை நடத்தி. உதயகுமாரையும். இளவஞ்சியையும் ஈன்றவன். எதிர்பாராத வசந்தாவின் இழப்பு மாதவனை நிலைகுலையச்செய்ததில் வியப்பேதும் இல்லை. அவளின் நீங்கா நினைவுடனேயே வாழ்க்கையை முடித்துக் கொள்ள எண்ணினான். வேறுவழியின்றி தன் அன்புக்குழந்தைகளுக்காக. அதுவும் அவ்விருவருமே வசந்தாவின் சாயலில் இருந்ததனால் அரைமனதுடன் உயிர்வாழ்ந்து வந்தான். ஏனெனில் அவ்விருவரும் ஊரே மெச்சும்படி வாழ்ந்த வாழ்க்கை அப்படி.

இதற்கிடையில் தான் தங்கள் பெற்றோர் முத்துமணி மற்றும் செண்பகத்தின் கட்டாயத்திற்கு இணங்க வேறு திருமணத்திற்கு அரைமனதுடன் சம்மதித்தான். இந்நிலையில் தான் மாதவனின் பெற்றோர் தாங்கள் கோவிலில் சந்தித்த கண்மணியை மாதவனின் விருப்பமின்றி அவனுக்கு மணம்முடித்தனர். திருமணம் செய்வித்த கையோடு அவர்கள் காசி ராமேஸ்வரம் என்று தலயாத்திரைக்கும் சென்றுவிட்டனர் தங்கள் இறுதி நாட்களைக் கழிக்க.

பிறந்த இடத்திலும், புகுந்த இடத்திலும் நடந்துகொண்டிருக்கும் நிகழ்வுகளை எண்ணிய கண்மணிக்கு ஒருநாள் பொழுது விடிவதே மலைப்பாக இருந்தது.

அம்மா... என்ன பகல்கனவா? என்று சிடுசிடுத்த மகன் உதயகுமாரின் அதட்டல் கண்மணியை மீண்டும் இவ்வுலகிற்கு அழைத்து வந்தது.

என்னப்பா? டிபன் பாக்ஸில் அப்பொழுதே சாதம் போட்டுவெச்சுட்டேனே! அத யார் கேட்டா? என்னோட பின்க் கலர் ஷர்ட்ட ஏன் அயர்ன் பண்ணல? ம்...

என்னப்பா நீ காலையில் ஆரஞ்சு கலர் ஷர்ட்ட தானே அயர்ன் பண்ணச் சொன்னே? இப்ப... அது அப்போ... இப்ப இது ம்... உடனே தரயா? இல்ல.. அப்பாக்கிட்ட...

வேண்டாம்ப்பா... இதோ... இப்ப ஒருநொடியில் தரேன் என்று வழிந்தோடும் வியர்வையைக் கூட துடைக்க நேரமின்றி. வேகமாக உள்ளே சென்று. சென்றவேகத்தில் திரும்பினாள் பின்க் கலர் ஷர்ட்டுடன்.

அப்பாடி... ஒருவழியாக உதயனை பணிக்கு அனுப்பியாச்சு என்று மேல்மூச்சு வாங்க சிறிது அயரலாம் என்றவளுக்கு. படுக்கையறையிலிருந்து காலை எட்டு மணிக்கு வந்த இளவஞ்சியின் அழைப்பு கம்பீரமாக... அம்மா!... அம்மா!... எங்க... மா...? பெட் காபி? இருபது வயதைத்தாண்டிய இளவஞ்சியை நோக்கி, இதோ வந்துட்டேண்டா செல்லம்.

இதயம் படபடக்க கையில் இருந்த காபியை விடக் கொதிப்பாய் இருந்த மனக் குமுறல்களை அடக்கிக் கொண்டு வேகவேகமாக எட்டி நடந்தாள்.

அதற்குள் அடுத்த கட்டளை சுடுதண்ணி, டவல் எல்லாம் ரெடியா?

பொங்கிவழிந்த கண்ணீரைத் முந்தானையால் துடைத்தவாறே, ஓ எல்லாம் தயாராயிருக்குடா செல்லம். நீ மீட்டிங்குக்கு போகவேண்டிய தேவையான எல்லாப் பொருட்களுடன் கைப்பையில் டிபனும் தயார்டா.

சரி... சரி... ரொம்ப வழியாதே.... என்று கூறிவிட்டு அவளை சிறிதும் சட்டை செய்யாமல் வந்த ஆட்டோவில் ஏறி 'அன்னையின் பெருமை' என்ற தலைப்பில் அலுவலக மீட்டிங்கில் பேசப்போனாள் இளவஞ்சி.


சம்பளமற்ற வேலைக்காரியான கண்மணி சிறிது காலத்திற்குள்ளாகவே படுத்தபடுக்கையானாள் கேட்பாரற்று.

அன்றுதான் கண்மணிக்கு சூரிய உதயம் ஆயிற்று ஏன் தெரியுமா அவள் கல்லறையில் நீங்காத்துயில் கொண்டதனால்:


கண்மணி: தோற்றம் 12.10.1990 மறைவு 14.01.2017 என்று பதிக்கப்பட்ட கல்லறையின் மீது அன்றுதான் உண்மையாக சிறிது கண்ணீர்த் துளிகளைச் சிந்தினான் மாதவன்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 998


### பிரணவன்





### சத்தியதாஸ்




### தனுசன்




### றொகரன்




### விதுசன்




### தர்சிகன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 74

# சமையலின் போது கவனிக்க வேண்டியவை...

❖ உணவுப் பொருட்களில் உள்ள ஊட்டச்சத்துக்களில் விற்றமின்கள், கனியுப்புக்கள் என்பன மிக முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது யாவரும் அறிந்ததே.

❖ முக்கியமாக மரக்கறி , பழவகைகள் என்பன அறுவடை செய்யப்பட்டதிலிருந்து மனிதனால் உணவாக உள்ளெடுக்கப்படுவதற்கிடையில் படிப்படியாக அவற்றில் அடங்கியிருக்கும் விற்றமின்கள், கனியுப்புக்கள் என்பவற்றின் செறிவினை படிப்படியாக இழக்கின்றன.

❖ எது எவ்வாறாக இருப்பினும் சில யுக்திகளை கையாள்வதனூடாக விற்றமின்கள், கனியுப்புக்கள் இழக்கப்படும் வீதத்தை முற்றாக தடுக்க முடியாவிடினும் கணிசமான அளவு இழப்பை குறைக்கலாம்.



❖ சில விற்றமின்கள் நீரிலும் (விற்றமின் B, C ) இன்னும் சில கொழுப்பிலும் விற்றமின் ( A, D, E, K ) கரையக் கூடியவை.

❖ நீரிலே கரையக் கூடிய விற்றமின்களில் குறிப்பாக தயமின், போலிக்கமிலம், விற்றமின் C அடங்கிய உணவுப் பொருட்களை முறையாக சேமித்து வைக்காத காரணத்தினாலும், சமைக்கும் போது கூடுதலான நீரில் கழுவுவதனாலும் கூடுதலான நேரம் சமைப்பதனாலும் வெளிச்சம் படல், காற்றுடன் தொடுகையுறல், கூடுதலான நீரில் சமைத்தல், மூடி அவிக்காமை, அப்பச்சோடா போன்ற (Alkaline) அல்கலைன் பதார்த்தங்கள் சமையலுடன் சேர்த்தல் போன்ற காரணங்களினால் அவற்றிலடங்கியுள்ள விற்றமின்கள் துரிதமாக இழக்கப்படுகின்றன.

❖ எனவே உணவுப் பொருட்களை கீழ்வரும் முறைகளினூடாக பேணிப்பாதுகாத்தல், சமையல் முறையில் சில மாற்றங்கள் ஏற்படுத்தல், சில அன்றாட பழக்கவழக்கங்களை மாற்றியமைத்தல் மூலமாக விற்றமின்கள், கனியுப்புக்களின் செறிவின் இழப்பீட்டினை கணிசமான அளவு குறைத்துக் கொள்ளலாம்.

- அன்றாட தேவைக்கு அளவாக மட்டுமே மரக்கறி பழவகைகளை வாங்குதல்.
- உடனுக்குடன் சமைத்து உண்ணுதல்.
- தேவைக்கு மேலதிகமாக வாங்கும் மரக்கறி பழவகைகளை வெளிச்சம் காற்று படாத வகையில் குளிர்ச்சியான இடத்தில் சேமித்து வைத்தல். குளிரூட்டி இருப்பின் காற்றுப்புகாத ஈரலிப்பு இழக்கமுடியாத வகையில் பாத்திரத்தில் மூடி வைத்தல் சிறந்தது. குளிரூட்டப்படுகையில் உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள விற்றமின் , கனியுப்புக்களின் செறிவு மிக மெதுவாகவே இழக்கப்படுகின்றது.
- மரக்கறி வகைகள் , பழவகைகளை வெட்டாமல் சேமித்து வைத்தல்.
- சமைக்கும் போது உடனுக்குடன் வெட்டிச்சமைத்தல்.
- மிகக் குறைந்த அளவு நீரில் மரக்கறி, பழவகைகளைக் கழுவுதல்.
- மிகக் குறைந்தளவு நீரில் சமைத்தல்.
- சமைக்கும் போது மூடிச்சமைத்தல். அவன் வைத்திருப்பின் அதில் சமைக்கலாம்.
- நீண்ட நேரம் சமைத்தலைச் தவிர்த்தல்.
- மீண்டும் மீண்டும் சூடாக்குதலை தவிர்த்தல்.
- உருளைக்கிழங்கு, பூசணிக்காய் போன்றவற்றை அவிக்கும் போது தோல் நீக்காமல் அவித்தல்.
- பேக்கிங்பவுடர் சேர்த்து சமைத்தலை தவிர்த்தல். பேக்கிங் பவுடர் விற்றமின்களை அழிக்கும் ஆற்றல் உடையது.
- மேலதிக தண்ணீரில் மரக்கறி வகைகளை அவிக்க வேண்டி ஏற்படின் அவற்றை விரயமாக்காது சூப்பாக அருந்தலாம்.
- கீரை வகைகளில் அயன் செறிவு கூடுதலாக காணப்படுகின்றது. எம்மால் உள்ளெடுக்கப்படும் கீரை வகைகளில் காணப்படும் அயன் அகத்துறிஞ்சப்படும் வீதத்தை கூட்ட வேண்டுமெனில் தேசிப்புளி போன்ற அமிலப் பொருட்களுடன் சேர்த்து உண்ண வேண்டும். முன்னர் குறிப்பிட்டது போல தேசிப்புளியில் உள்ள விற்றமின் C ஆனது சூடான நிலையில் அழிவடைந்து விடும். எனவே சமைத்து ஆறியபின் தேசிப்புளி சேர்க்கலாம்.



- மாமிச உணவுகள் உள்ளெடுக்கக்கூடியவர்கள் கீரை வகைகளை சமைக்கும் போது அவற்றுடன் இறால் போன்றவற்றை சேர்த்துச் சமைத்து உண்டால் அயன் அகத்துறிஞ்சப்படும் வீதம் கூடும். ஏனெனில் விலங்குணவில் காணப்படும் அயன் ஆனது மனித உணவுக் கால்வாய் தொகுதியினால் இலகுவாக அகத்துறிஞ்சப்படக்கூடிய வகையில் இசைவாக்கப்பட்டுள்ளது. எனவே மாமிச உணவுடன் சேர்த்து உள்ளெடுக்கையில் அகத்துறிஞ்சல் வீதம் அதிகரிக்கப்படும்.
- தேயிலை, கோப்பி என்பவற்றிலிருக்கும் நச்சுப்பதார்த்தங்கள் (தனின், கபின் ) அயன் அகத்துறிஞ்சலை பாதிக்கும். எனவே உணவுப்பொருட்களை உண்ண முன்பும் உண்ட பின்பும் ஆகக்குறைந்தது இரண்டு மணி நேர இடைவெளியாவது விடுத்தே தேயிலை, கோப்பி போன்ற பானங்களை அருந்த வேண்டும்.
- பால் குடிக்கும் பழக்கமுடையவர்கள் பால் குடித்தவுடன் உணவு உள்ளெடுத்தலையோ / உணவு உள்ளெடுத்தவுடன் பால் குடித்தலையோ தவிர்க்க வேண்டும். ஏனெனில் உணவில் உள்ள அயன் கனியுப்பானது பாலிலுள்ள கல்சியம் கனியுப்பு அகத்துறிஞ்சலை பாதிக்கும் என்பதாலே ஆகும். எனவே உணவு உள்ளெடுத்தலுக்கும் பால் அருந்துவதற்குமிடையில் குறைந்தது 2 மணி நேர இடைவெளியாவது விடல் வேண்டும்.
- உணவிலடங்கியுள்ள அயன் அகத்துறிஞ்சலை அதிகரிக்க உணவுண்ட பின் பழச்சாறு வகையை அருந்தலாம். சாப்பிட்டவுடன் தேநீர் அருந்தும் பழக்கமுடையவர்கள் அதற்குப் பிரதியீடாக பழச்சாறு அருந்தும் பழக்கத்தை வழக்கத்திற்கு கொண்டு வரலாம்.
- இதேபோலவே அயன், கல்சியம், விற்றமின் மாத்திரைகள் உள்ளெடுப்பவர்கள் அயன், கல்சியம் இரண்டையும் ஒன்றாக போடக்கூடாது. அவ்வாறு உள்ளெடுப்பின் கல்சியம் அகத்துறிஞ்சல் பாதிக்கப்படும்.
- அயன் மாத்திரையுடன் விற்றமின் C சேர்த்து உள்ளெடுப்பின் அயன் அகத்துறிஞ்சப்படும் வீதம் கூடும்.
- உணவு உள்ளெடுத்த பின் அல்லது உள்ளெடுக்க முன் குறைந்தது 2 மணி நேர இடைவெளியாவது விடுத்தே அயன், கல்சியம் போன்ற மாத்திரைகளை உள்ளெடுக்க வேண்டும். ஏனெனில் வெறுவயிற்றில் அயன் அகத்துறிஞ்சப்படும் வீதம் கூடுதலாக இருக்கும். அதே போல் உணவுடன் கல்சியம் மாத்திரை எடுப்பின் கல்சியம் அகத்துறிஞ்சல் பாதிக்கப்படும். இது கர்ப்பவதிகளும் பாலூட்டும் தாய்மார்களும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

❖ மேலே குறிப்பிட்ட சில ஆலோசனைகளை பின்பற்றிவரின் உள்ளெடுக்கும் கனியுப்பு, விற்றமின்கள் போன்றவற்றால் உச்ச பயனை பெற்று நோயற்று வாழ வழி வகுக்கும்.

திருமதி குயிலினி சுரேஷ்
தாதிய உத்தியோகத்தர் (B.Sc in NDSG)
யாழ். போதனா வைத்தியசாலை

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.